# கனவுக்கு வெளியேயான உலகு



125/0

# கனவுக்கு வெளியேயான உலகு

## தமிழீழப் பெண்களின் சிறுகதைகள்

❋ முதல் பதிப்பு:- 2002 பங்குனி

❋ கப்டன் வானதி வெளியீடு -02

❋ விலை:- உரூபா 125/-

# கனவுக்கு வெளியேயான உலகு

## தமிழீழப் பெண்களின் சிறுகதைகள்

❋ அட்டைப்படம்:- தமிழ் நிலா
புகைப்படப்பிரிவு - மகளிர்
விடுதலைப்புலிகள்

❋ பின் அட்டைக்
கவிதை;- கவிஞர் புதுவை இரத்தினதுரை

❋ அச்சுப்பதிப்பு:- சந்திரன் பதிப்பகம்,
புதுக்குடியிருப்பு.

❋ பதிப்புரிமை;- கப்டன் வானதி வெளியீட்டகம்,
தமிழீழம்.

# காணிக்கை

போராளியாய் களமாடி
கலைஞராய்,
கவிதையாய்,
கதைகளாய்,
வீரத்தின் விதையாய்
எம்மோடிருக்கும் கப்டன் கஸ்தூரிக்கு
கனவுக்கு வெளியேயான உலகு.

# பதிப்புரை

இலை மறை காயாக இருக்கும் இளம் படைப் பாளிகளை ஊக்குவிப்பதுடன், மூத்த எழுத்தாளர்க ளின் படைப்புக்களையும் கௌரவிப்பதே கப்டன் வானதி வெளியீட்டகத்தின் பணி.

இந்த வெளியீட்டகத்தினூடாக தமிழீழப் பெண் களையும் இலக்கியப் பணியில் இணைத்து வரலாறு படைக்க வேண்டுமென்ற பெருவிருப்போடும், எதிர் பார்ப்போடும் எமது முதலாவது வெளியீடான இரு பத்தியாறு பெண் படைப்பாளிகளின் 'எழுதாத உன் கவிதை' ஊடாக உங்களைச் சந்தித்தோம். அதைத் தொடர்ந்து பன்னிரெண்டு படைப்பாளிகள் 'சிறுகதை' வாயிலாக இதில் உங்களுடன் பேசுகின்றார்கள்.

எமது சமூகத்தில் ஏராளம் படைப்பார்வம் உள் ளவர்கள் இருக்கின்றார்கள். அவர்களில் கணிசமானோ ரையேனும் இலக்கிய உலகத்துள் இணைத்து புதிய படைப்புக்களை வெளிக்கொணர்வதோடு, புதிய படைப் பாளிகளையும் இனங்கண்டு பணி தொடரவும், தனது பாதையில் வெற்றிநடை போடவும் அனைவரையும் நோக்கி ஆர்வமுடன் கரங்களை நீட்டி நிற்கிறது கப்டன் வானதி வெளியீட்டகம்.

அனைத்துலகப் பெண்கள் தினத்தை முன்னிட்டு எமது இரண்டாவது வெளியீடான 'கனவுக்கு வெளியே யான உலகு' என்ற இந்த நூலை வெளியிடுவதில் நாம் பெருமையும், பெருமகிழ்வும் அடைகிறோம்.

**கப்டன் வானதி வெளியீட்டகம்,**

தமிழீழம்.
*08. 03. 2002*

# அறிமுகவுரை

தமிழீழப் பெண் படைப்பாளிகளிடமிருந்து மேலும் ஒரு தொகுதிப் படைப்புக்கள் சிறுகதை வடிவில் எமக்கு அறிமுகமாகின்றன. பன்னிரண்டு சிறுகதைகளை உள்ளடக்கிய இத் தொகுதியின் கதைஞர்கள் அனைவருமே பெண்கள். இவர்களில் சிலர் தமிழீழ இலக்கிய உலகிற்கு நன்கு பரிச்சமானவர்களாகவும், சிலர் களமேந்திக் கள மாடும் அதேசமயம் சிறந்த பெண் படைப்பாளிகளாகவும் உள்ளவர்கள் என்பது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

சிங்களப் பேரினவாதம் தன் கொடூரங்களால், ஓரினத்தின் மீது இறுகப் போர்த்திவிட்ட சோக மூட்டத்தை மட்டுமல்ல, அதனை முட்டி மோதி உடைத்தெறிய விளையும் துடிப்பும் இக் கதைகளில் ஊடுபாவாய்ப் பரவக் காண்கின்றோம். இக்கதைகளனைத்துமே கருவுயிர்க்கும் பகைப்புலம் இம்மண்ணிற்கு மிகப்பரிச்சமானது. வேயாது இற்ற ஓலைக்குடிசை. ஓயாது வீழும் எறிகணைகள். மலர்தூவும் துயிலும் இல்லம், மாற்றானோடு பொருதும் சண்டைக்களம் என அவை விரிகின்றன. இன்றைய இருப்பைத் தொலைத்துவிட்டு, நாளை நடத்தற்காயினும் சொந்தமாய் ஒரு தெரு வேண்டுமே என்று போராடும் எமக்கான இலக்கியப் படைப்பியல் வேறெங்கு தான் முகிழ்க்க முடியும்.

அரிதாரம் பூசப்படாத, ஆலாபனைகளால் மெழுகப் படாத, இரத்தமுஞ் சதையுமாய் உயிர் துடிக்கும் இக் கதை மாந்தர்களைத் தரிசிக்க நேர்கையில் ஆழ மூச்செடுத்து மீள எழுவது தவிக்க முடியாதாகின்றது. அவர்கள் பேசுகிறார்கள். நாங்கள் வாயடைத்துப் போகிறோம். மானப்போர் நடத்தும் தேசத்து மக்கள் கூட்டத்திற்குள்ளிருந்து அல்லவா அவர்கள் குரலெழுகிறது. அது வேறெப்படி இருக்கும்?

நனவோடை உத்தியிலமைந்துள்ள ''சுமைதாங்கி'' யில் வரும் அம்மா என்ன சராசரி அம்மாவா? தனது பெருமைக்குரிய மாவீர மகளிடம் மணிக்கணக்காகப் பேசிவிட்டு, தான் தகட்டைத் தொலைத்து மீளப்பெற்ற

தற்கு வல்லக்க வேண்டுகிறாரே! தன் மகளின் துயிலு மில்லப்பள்ளி சற்றும் குறையாது. தன் சுமையை அவர் காலடியில் சமர்ப்பிக்கும் பாங்கு அற்புதமானது.

''அண்ணா இன்றைய இந்தப் பகலைவிட்டா உங்க ளோடை கதைக்க எனக்கு நேரம் வராது...'' ஏதோ இன்றிரவு வெளியூர் போய் விடுவேன் என்பது போலச் சர்வசாதாரணமாகச் சொன்னவளை உற்றுப்பார்த்தான். 'கை மாறிய இலக்கு' களில் வரும் தமிழரசியும் மலரவனும் இலக்கை நோக்கிப் பயணிக்க முன்பு சாதாரணமாகப் பேசிக்கொள்கிறார்கள். ஆனால் வாசகருக்கு இது எத்தகைய அசாதரணம் என்பது அவர்களுக்குப் புரிய நியாய மில்லைத்தான். அலையிசையின் ''என்றாவது ஒரு நாளில்'', என்றாவது ஒரு நாள் எந்த நிலையிலோ மணாளன் வரலாம். அந்த வரவிற்காகப் பல ஆன்மாக் கள் பல உயிர்ப்பான உண்மைகளை அடை காத்தபடி வாழ்கின்றார்கள். ''வராதவனுக்கு கூறவுள்ள சேதிகள் மட்டுமா இங்கு அடைகாக்கப்படுகின்றன? எமக்கான தேதிகளும் இங்கு எத்தனையோ உண்டு.

'பூமாதேவி' பொழிந்த 'மழை' என்னவோ உள்ளங் காலைக்கூட நனைக்கவில்லை. ஆனால் இடப்பெயர்வு துயரலைகள் மட்டும் வாசகனைத்தலை முழுக வைக்கிறது. ''நாங்க தீவிலையிருந்து இடம் பெயர்ந்து இது நான் அடைபெரிக்கிற இருபத்தியாறாவது இடம் பிள்ளை' மழைக்கால இரவொன்றில் தாயின் கூற்று. கேட்பவர் கள் விக்கித்துப் போவதற்கு இது என்ன அந்தத் தாய்க்கு மட்டுமா நிகழ்ந்தது? கதைகளாய்க் காகிதத்தில் எழுதப் படாதவை எத்தனை?

''இந்த ஆக்கிரமிப்புப் போரின் முகம் எத்தனை குரூ ரமானது. வாழ் நாளில் எந்தக் காலத்திலும் சந்தோஷத்தை அனுபவிக்காமலேயே அறுபத்தைந்து வயதுவரை வாழ்ந் தாகிவிட்டது. இது 'தாமரைச்செல்வி'யின் 'அம்மா' இங்கு கதாசிரியரின் ஆதங்கம் மட்டுமா புலப்படுத்தப்படுகின் றது? நெஞ்சை அறுத்தொரு துயர்க்காங்கை மெல்ல மூள்கிறது. பெற்ற மக்கள் வசதியால், வாய்ப்பாய் உள் நாட்டிலும் வெளிநாட்டிலும் வாழ்ந்துகொண்டு பாரா முகமாய் கை விட்ட பெற்றோரைப் பல கதைகளின் கதை

சாந்தராய்க் கண்டுள்ளோம். இங்கு மகனுக்காகத் தாயும், தாய்க்காக மகனும் வாய்விட்டுரைக்க முடியாத வறுமைத் துயருக்காய் முதியோர் இல்லம் சேரும் கொடுமை வித்தியாசமானது. தாளாத்துயரை மௌனமாய் விழுங்கி விழியருவி ஆறாய்ச் சொரியும் 'அம்மா' உண்மையிலே இந்த மண்ணில் முதியோரின் இன்னொரு பக்கத்தை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது.

மண் வாசனையை அள்ளி வீசும் தமிழ்க்கவியின் 'சொல்லித்தா அப்பு இல்லை' ஒரிதமான சோக சங்கீதமாய் மனதை வருடி வரும்போதே கிழறொண நெருடச் செய்கிறது. 'சிவத்தப்பேடும் பொரிவெள்ளைச் சேவலும்' அற்புதம் என்ற அடுத்தகணமே "உன்னை விட்டிட்டு நாங்கள் தப்பிற்றம் அப்பு... வாணை... வாணை, தம்பி போடா அவரைக் கட்டியெண்டாலும் தூக்கிக்கொண்டு வாடா... ஐயோ அப்பு" நெஞ்சு முட்டிக் தொண்டையடைக்கக் கதைக்கு முத்தாய்ப்பு வைக்கப்படுகிறது.

மலரன்னையின் 'பக்கங்கள் இரண்டில்' "அப்பா உங்களுக்கு இது தெரியுமோ? சேவல் கூவுறதும் பேட்டுக் கோழி முட்டை இடுறதும இயற்கையின்ரை நியதி... அது அவரவர் கெட்டித்தனமில்லை" இது அப்பாவுக்கு நியாயம் கூறும் மகள் சிந்து. இவள் அப்பாவிடம் மட்டும் பேசவில்லை ஒட்டு மொத்த ஆணாதிக்க மனோபாவத்துக்கு எதிராகவே குரல் கொடுக்கிறாள். எனினும இதில் வரும் சமூகத்தில் உயர் நிலையில மதிக்கப்படும் கல்லூரி அதிபர் என்ற பாத்திரமும் ஆதிலட்சுமியின் 'மனைவி என்றொரு பெண்'ணில் படித்துப் பதவி வகிக்கும் பெண்ணாக வரும் சாருமதியும் தங்கள் வேலைப் பழுவை மட்டுமல்ல மனத்திலுள்ள ஆதங்கங்கள் அனைத்தையுமே மௌனமாக விழுங்கிக்கொண்டு தம்மளவில் அதீத கழிவிரக்கத்தைச் சுமந்துகொண்டு இயந்திரத்தனமாய் நடமாடும் பாத்திரங்களாய்த் தோன்றுகின்றனர். என்னதான் பெண் விடுதலையும சம உரிமைக் கோஷங்களும ஓங்கி ஒலிக்கின்ற போதும், தமிழீழப் பெண்கள் பலர் மூடத்தனமான சமூகக் கட்டுக்களை அறுத்துத் தேசத்துக்காச் சிறகு விரித்தபோதும் இன்னும் - படித்த பெண்களின் - வாழ்க்கைகூட இவ்வாறு தான் என்ற கசப்பான உண்மையைக் கதாசிரியர்கள் காட்ட விழைகின்றனர்.

சிரஞ்சீவியின் 'தவிப்பு' படித்துச் சமூக சேவைக்குத் தன்னை அர்ப்பணிப்புச் செய்தபடி நல்ல தாயாக, நல்ல மனைவியாக, வாழத்துடிக்கும் தமிழீழப் பெண்ணொருத்தியைப் பிரதிபலிப்பது போராட்டப் பகைப்புலத்

தில் இத்தகைய பெண்களின் இன்னொரு பரிமாணம் படம் பிடித்துக் காட்டப்படுகிறது. சற்று வித்தியாசமான முயற்சி, பாராட்டத் தோன்றுகிறது.

பெண் படைப்பாளிகளின் ஆக்கங்கள் என்பதால் ஆணாதிக்க ஒடுக்கு முறைகளுக்கெதிரான சீற்றம் பலமாய்த் தென்படுமே என்ற எதிர்பார்ப்போடு கூடிய வாசகருக்கு ஏமாற்றம்தான். மிகச் சிறிதாகப் 'பக்கங்கள் இரண்டும்' 'மனைவி என்ற பெண்'ணும் தொட்டுப் பார்க்க முயல்வதோடு சரி. ஆகத் தமிழீழப் பெண்கள் ஆணாதிக்க ஒடுக்கு முறைகளை எரித்துப் பொசுக்கிச் சாம்பலாக்கி விட்டனரா? இல்லையெனில், இத்தொகுப்பின் மகளிர்க்கு 'எரியும் பிரச்சனைகள்' இந்த வட்டத்தையும் கடந்து கனவுகளுக்கு அப்பால் விரியும் மனிதநேயத்தேடலின் தவிப்பே இச் சிறுகதைகள் என உறுதிபடச் சொல்லலாம். எங்கிருந்தோ வந்து தன் காலடியிற் செத்துக் கிடக்கும் சிங்கள இராணுவ இளைஞனை நோக்கி ''யார் உன்னை அழைத்தாரி''ல் வரும் பெண் போராளி - ஆதங்கத்தோடு - பேசுவது பகைமுடிக்கும் சீற்றத்தின் மத்தியிலும் ஊற்றெடுக்கும் மனித நேயத்தின் வெளிப்பாட்டிற்கு ஒரு சிறு எடுத்துக்காட்டு. 'ரணங்கள்' பேசும் மொழியிற் சொன்னால் இவை எம்மண்ணின் கறைபடிந்த அத்தியாயங்கள்; குருதியால் எழுதப்பட்ட வாசகங்கள்; மாற்ற முடியாத ரணங்கள்; துன்பத்தின் எச்சங்கள்.

முடிவாகச் சூரியநிலாவின் அம்மா கூற்றாகச் சொன்னால் ''உனது தோழர்களும் தோழியர்களும் இப்போது அருமையாக இலக்கியம் எழுதுகிறார்கள். கீறினால் இரத்தம் வருமளவிற்கு அவர்களின் எழுத்துக்கள் சிறப்பாக இருக்கின்றன அவர்களின் எழுதுகோல்கள் செய்கின்ற அறுவைச் சிகிச்சைகள் சரியான பலனை அளிக்கும் என்பது எனது கருத்து.'' இங்கு நாங்கள் கண்ட எழுத்துக்களிலும் கீறினால் இரத்தம் வருமோ, என்னவோ! நிச்சயமாக அவை ஆழ் மனதைக் கீறி அங்கு சில அதிர்வலைகளைத் தோற்றுவிக்கத் தவறவில்லை, என்பது மட்டும் உறுதி.

திருமதி. கோகிலவாணி தேவராசா

02 . 03 . 2002

மு/மல்லாவி மத்திய கல்லூரி,
மல்லாவி.

# சுமை தாங்கி

## ● சூரியநிலா

முன்பு போல் உன்னைப் பார்க்க என்னால் அடிக்கடி வர முடிவதில்லை. எப்படி இருக்கிறாய்? உன்னைப் பார்க்க வருவதிலுள்ள சிரமங்கள், எனது வேலைகள் எல்லாம் உனக்குப் புரியும். ஏனெனில் நீ எல்லாவற்றையும் அறிந்து கொண்டு தானே இருக்கிறாய். ஆகையால் என்னைக் காணவில்லை என்று நீ குறைபட்டிருக்க மாட்டாய் என்று நினைக்கின்றேன்.

என்ன செய்கிறாய் இப்பொழுது? முன்னரென்றால் ஒரு இடத்தில் நிற்க முடியாத பம்பரமாய்ச் சுழன்று திரிவாய்.

உனது வேகம் கண்டு நானே பயந்தது உண்டு. ஆரம்பத்தில் உந்துருளியில் ஏறப் பயந்து கத்தி ஆர்ப்பாட்டம் செய்வாய். அப்பாவும் நானும் உன்னை எங்குமே கூட்டிச் செல்ல முடியா திருக்கும். அத்தகைய நீ எந்த வாகனத்தில் போனாலும் அபா யகரமான வேகத்தில் ஓடிப் போகிறாய் என்று பார்க்கின்றவர் கள் வந்து சொல்கின்ற பொழுது எனது உயிரே கலங்கிப் போகும். நீ இங்கே வந்த பிறகு தான் உனது தோழிகள் வந்து சொன்னார்கள், உங்களுக்குள் நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் நீ நிறையப் பரிசுகள் வாங்கினாயாம் என்று. அப்பொழுது எனக்கு, சின்ன வயதில் நீ பரீட்சார்த்த ஓட்டப் போட்டியில் கடைசியாய் வந்து, இடையில் என்னைக் கண்டதும் போட்டி முடிவு வரை ஓடாமல் என்னிடம் ஓடிவந்தது நினை விற்கு வந்தது. உன்னை நினைத்துச் சிரித்துக் கொண்டேன்.

எல்லா விடயங்களிலும் நீ அப்படித்தான். என்னுடன் இருந்ததைவிட மாறுபாடாக நடந்து கொண்டாய். வீட்டில் இருந்த பொழுது என்ன வண்ணத்தில் உடை அணிகிறாயோ அதே வண்ணத்தில் காதணியில் இருந்து காலணிவரை உனக்கு வேண்டுமென்று அடம் பிடிப்பாய். தேவைக்கு அதிகமாக ஏன் வாங்குகிறாய் என்று நான் கடிந்து கொண்ட பொழுதுகளில் உன் ஆசைகள் அனைத்தையும் ஒன்றும் விடாமல் நிறைவேற்ற உனக்கு உனது அப்பா இருந்தார்.

நான் நினைக்கிறேன், அந்தப் பொழுதுகளில் நீ உன்னை மட்டுமே நேசித்துக் கொண்டிருந்தாய். நீ உன்னை நேசிக்க உனக்கு வேண்டிய அத்தனையும் செய்ய உனக்கு நானும் உனது அப்பாவும், அண்ணாவும் இருந்தோம். அது கவலையென்றால் என்னவென்று நீ அறியாமல் வளர்ந்த காலம்.

நீ உன்னை நேசித்துக் கொண்டிருந்தாய். உனது அப்பா வும் உன்னைத்தான் அதிகம் நேசித்தார். தன் குடும்பத்தின் மீது அவருக்கு அளவற்ற பற்றுதல் இருந்தது. நேர்மையான வழி களில் அவர் உனதும், உனது அண்ணாவினதும் எதிர்காலத்தைக்

கருத்திற் கொண்டு தீவிரமாக உழைத்துக் கொண்டிருந்தார். அவரது வியர்வையில் விளைந்த தாள்களால் வங்கியின் கணக்குத் தொகையின் இலக்கங்கள் அதிகரித்தன. பழைய கதைகளைத் திருப்பித் திருப்பிக் கதைக்கிறேன் என்று எரிச்சலடையாதே. எனது மனச் சுமைகளை உன்னிடம் தானே இறக்கி வைக்க என்னால் முடியும்.

படிப்படியாக எமது குடும்பம் முன்னேறிக்கொண்டிருந்தது. நீங்களும் வளர்ந்து கொண்டிருந்தீர்கள். உங்களுடன் சேர்ந்து எங்களது சுதந்திரப் போராட்டமும் வளர்ந்துகொண்டிருந்தது.

அப்பா உங்களை நேசித்தார். தனது குடும்பம் மகிழ்ச்சியாக என்றும்வாழவேண்டுமென்று அவர்விரும்பினார். ஆனால்அவரது விருப்பங்களைச் சூழல் நிறைவேறாது தடுக்க முயற்சித்தது. உன் அப்பா இலட்சியவாதி. தனது கொள்கைகளில் அவர் ஒருபொழுதும் தடுமாறியதில்லை. தனது விருப்பங்களை நிறைவேறாது தடுக்கின்ற சக்திகளை அழிக்கின்ற பணிக்கு அவர் பங்களித்தார். உங்களுடன் சேர்ந்து விடுதலைப் போரையும் உங்கள் அப்பா நேசித்தார். வளர்த்தார். அதுவும் உங்கள் மீதான நேசிப்பின் ஒரு பகுதியே.

தேசத்தை நேசித்த உன் அப்பாவின் நெஞ்சுக் குருதியை ஒருநாள் சில தோட்டாக்கள் நேசித்த பொழுதுதான் நீ யோசிக்கத் தொடங்கினாய். உன்னை நீ நேசிப்பதற்கு உனது அப்பாவின் உதவி உனக்கு எவ்வளவுதூரம் தேவையாக இருந்திருக்கிறது என்ற உண்மை உனக்கு உறைத்தது. உனது சிறிய வட்டச் சிந்தனை விரிந்தது. உன்னைப் போலவே நாங்களும் உனது அப்பாவை நேசித்தோம் என்பதால் உனக்கு இருக்கின்ற அதே துயர் எங்களுக்கும் இருக்கின்றது என்பதைப் புரிந்துகொண்டாய். ஏன் இது நேர்ந்தது என்று சிந்தித்த பொழுது இது எங்களுக்கு மட்டுமல்ல, உனது பக்கத்துவீட்டுச் சிநேகிதிக்கு, பள்ளித் தோழனுக்கு, உயிர்த்தோழிக்கு எல்லாம் நிகழ்ந்திருக்கின்

றது, நிகழ்ந்துகொண்டிருக்கின்றது, நிகழும் என்று உணர்ந்து கொண்டாய். உனக்கு உனது இழப்பு இமயத்தைத் தாண்டிய உயரமும், கனதியும் மிக்கதாயிருந்தது. இப்படி இனிமேல் யாருக்கும் நிகழக்கூடாது என்று நீ முடிவெடுத்த அந்தப் பொழுதில் உன்மீது உனக்கிருந்த நேசிப்பு பறந்தோடிப் போயிற்று.

அதன் பின்னர் நீ உனக்காகச் சாப்பிடவில்லை. உனக்காக உடுக்கவில்லை உனக்காக உறங்கவுமில்லை. சாப்பிடுகின்ற தேசத்தின் உப்பிற்கு உண்மையாக உழைக்க வேண்டும் என்று உணர்வோடு செயற்பட்டாய். வண்ண வண்ணமாய்த் திரிந்த காலத்தை நீ மறந்து போனாய். மெல்லிய நீல நிறமென்றால் அதனை அள்ளிக் கொள்ளத் துடிக்கின்ற உனக்கு பிரியமான நிறம் கறுப்பென்றானது. உண்மை தான். கருமை இல்லாவிட்டால் இந்த உலகம் ஒளியைக் கண்டிருக்காதே.

தண்ணீரென்றால் கொள்ளைப் பிரியமுனக்கு. நேரம் கிடைத்தால் ஒரு நாளைக்கு எத்தனை முறையும் உடற் சுத்தம் செய்யும் நீ, வேலைகளால் தெருப்புழுதி படிந்த அழுக்கைப் பொருட்படுத்தாது வியர்வையில் குளித்துத் திரிந்தாய். உன்னை யாரும், எதுவும் தடுக்கவில்லை. காலத்துக்கு உனது சேவை தேவைப்பட்டது. உன்னைப் போன்றவர்களின் சேவைக்கான வரலாற்றுப் பரிசு உருவாகிக்கொண்டிருக்கிறது. இதோ விரைவில் உனது கனவு நிறைவேறப் போகின்றது. அதுவரைக்கும் நீ கவலைப்படவோ, சோர்ந்து விடவோ கூடாது என்பதைச் சொல்லிப் போகத்தான் இன்று உன்னைத் தேடி இவ்வளவு தூரம் வந்தேன்.

நீண்ட நாட்களின் பின்னர் போன வாரம் உன்னுடன் நின்ற சில பிள்ளைகள் வந்தார்கள். அவர்களின் வருகையால் வீடே கலகலத்துப் போயிற்று. என்னிடம் நீ ஆசையாகக் கேட்கின்ற சில உணவுகளை அவர்களுக்குச் செய்து கொடுத்தேன். அவர்கள் வருவார்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லையாதலால் பொருட்கள் வாங்கச் சற்றுச் சிரமப்பட நேரிட்டுவிட்டது.

ஆனால் நீண்ட நாட்களின் பின்னர் பட்ட அந்தச் சிரமத்தில தான் எனக்கு நிம்மதியும், சந்தோஷமும் கிடைத்தது.

வசியின் கடைசித் தம்பியும் தனது நான்கு உடன் பிறப்புக் களையும் போல உங்களது பணிக்கு வந்துவிட்டான். அவர்களது அம்மா மட்டுந்தான் இப்பொழுது வீட்டில். இதைக் கேட்க உனக் குப் பெருமையாக இருக்கும். உடனே அந்த அம்மாவைப்பார்க்க வேண்டும் போல இருக்கும். சில வேளை இங்கே உன்னுடன் இருக்கின்ற தனது இரண்டாவது மகனைப் பார்க்க வந்திருந்தால் கண்டிருப்பாய். இன்றைக்கு உன்னைப்பார்க்கப் போவதாக அவரிடம் நான் கூறினேன். தனது மூன்றாவது மகனிடம் போவ தால் இங்கே வரமுடியாதென்று சொன்னார். வசியும் காயப் பட்டு மருத்துவமனையில் இருப்பதால்தனது கடைசி மகன் தான் இங்கே வருவான் என்றும் கூறினார்.

அண்மையில் உனக்குப் பிடித்த உனது ஆசிரியையைச் சந் தித்தேன். படிக்கின்றகாலப்பகுதிகளில் ஒரு கேள்விக்கான விடை யைப் பார்த்துச் சொல்லக்கூட நீ சிரமப்பட்டாய் என்பதை நினைவு கூர்ந்து விட்டு, அதே நீ பின்னாளில் தனக்களித்த அரசி யல் விளக்கத்தையும், தன்னுடன் கூட இருந்தவர்கள் கேட்ட அத்தனை கேள்விகளுக்கும் நீ அளித்த முழுமையான பதில்கள் பற்றியும், அதனை விடவும் மேலதிக அறிவு உன்னிடம் இருக்கி றது என்பதைத் தான் உணர்ந்து கொண்டதைப் பற்றியும் கண் களில் நீர்வரும் வரையும் பேசிக்கொண்டிருந்தார்.

உண்மைதான். பாடப்புத்தகம், கதைப்புத்தகம் எதி லுமே விருப்பம் காட்டாத நீ பத்திரிகைகளில் வரும் அரசியல் கட்டுரைகளை ஒருவரி தவறவிடாது மனதில் பதித்து கொள் வதைப் பார்த்து நானே வியந்திருக்கிறேன். எப்படி உனக்கு இது சாத்தியமானதென்று நான் ஒருபோதும் நினைக்கவில்லை. ஏனெனில் உனது தலைமையின் உன்னதம் யாருக்கம்மா தெரி யாது?

உனது அண்ணா இப்பொழுதும் பதுங்கிச் சுடுபவனாகத் தான் இருக்கிறான். இதற்காக அவன் இம்முறையும் கூடப் பரிசு வாங்கினானாம். இதை எனக்கு அவன் சொல்லவில்லை. அவ

னது பொறுப்பாளரே என்னிடம் சொன்னார். வழமை போல அவன் வரவும் மாட்டேன், விடுமுறை எடுக்கவும் மாட்டேன் என்று சொல்கிறான். நீயும் வருவாய் என்றால் அவன் ஆயிரம் தரம் வரவும் தயாராம். எனக்கு இப்போது உதவிக்குப் பிள்ளை தேவையென்று நான் அவனைக் கூப்பிடவில்லை. எனது கையால் ஒருசில வேளைகள் உணவு கொடுக்கவும், நித்திரையின்றிக் கழிக்கிற இரவுகளை மறந்து கொஞ்சம் ஓய்வாகத் தூங்கட்டும் என்றும் நினைத்தே அழைத்தேன். ஓய்வு அவனுக்கு இன்னும் கொஞ்சம் உற்சாகத்தைக் கொடுத்து அவனது செயற்பாடுகளை ஊக்குவிக்கும் என்பது தான் எனது எண்ணம். அவனுக்கு அது தேவையில்லை என்றால் வரவேண்டாம் என்றுவிட்டு,நேரம் கிடைக்கின்ற பொழுதுகளில் எல்லாம் உலருணவு அனுப்பிக் கொண்டிருக்கிறேன். இதனைச் செய்தாலே போதுமென்பது தான் உனது கருத்தாகவும் இருக்கும் என்பது எனக்குத் தெரியாதா என்ன? இன்றைக்கு நான் உன்னைப் பார்க்க வருவது அவனுக்கும் தெரியும். அவனும் இப்பொழுது இங்கே வருவான் என்றுதான் நினைக்கின்றேன்.

உன்னைப் பற்றிக் கதைக்கின்ற பொழுதுகளில் எல்லாம் உனது அண்ணா அழுது விடுவான். பெரும்பாலும் கதைப்பதேயில்லை. வயதில் மூத்தவனான தானே புரிந்து கொள்ளாததை நீ உணர்ந்து முதலில் கடமை செய்யப்புறப்பட்டதுதான் அவனது கவலைக்கு காரணம். உன்னைப்பற்றி அவனுக்குச் சரியான பெருமை இருந்தது. என்னை விடவும் தாய்மையுடன் அவன் உன்னை வளர்த்திருக்கிறான். அதனால்தான் இன்னும் கவலைப் படுகிறான். நீயும் குறைந்தவளில்லை. எப்போதும் அழியாப் பெருமையை அவனுக்குத் தேடித் தந்திருக்கிறாய்.

ஓய்வு உனக்குப் பிடிக்காது. இருந்தும் கட்டாய ஓய்வில் இருக்கிறாய். விட்டால் நீ தனித்து நின்றே தமிழீழம் பிடித்து விடுவாய் என்று ஒரு நினைப்பு உனக்கு. கவலைப்படாதே நீயே எல்லாவற்றையும் செய்து முடித்துவிட்டால் மற்றவர்களால் தேசக் கடமை செய்ய முடியாது போய்விடும். உனது துடிப்பும், தவிப்பும் உணர்வுள்ள ஒவ்வொருவருக்கும் இருக்கும் தானே? தயவுசெய்து உன் உணர்வுகளைப் புரிந்து கொள்ளாமல் கேலி செய்கிறேன்

என்று மட்டும் நினைக்காதே. உங்களது சந்ததிக்கு இருக்கின்ற வாய்ப்பு எங்களுக்கு கிடைக்கவில்லையே என்ற ஆதங்கம் எனக்கும் இருக்கிறது.

இப்பொழுது உனக்கு அதிக நேரம் கிடைக்கும். அதனால் நிறையச்சிந்திப்பாயென்று நினைக்கின்றேன். நாட்டு நடப்புக்கள் எல்லாம் நாங்கள் பத்திரிகையில் படித்து அறிவதற்குள் காற்றலையில்உனக்கு வந்துவிடும். அயல் நாட்டு அரசியலைப் பற்றி நீ சிரியாய்ச் சிரித்த காலம் போய் இன்று இலங்கையிலும் அது தான் நிலமை என்றாகிவிட்டது. இதனைப் பார்த்து உனக்கு முகம் சிவக்கின்ற அளவு கோபம் வரும் என்று எனக்குத் தெரியும். பொறுமையாக இரு. நன்மைதான் வெல்லும்.

உனது தோழர்களும் தோழிகளும் இப்போது அருமையாக இலக்கியம் எழுதுகின்றனர். கீறினால் !இரத்தம் வரும் அளவுக்கு உயிர்த்துடிப்புள்ளவையாக அவர்களின் எழுத்துக்கள் சிறப்பாக இருக்கின்றன. அவர்களின் எழுதுகோல்கள் செய்கின்ற 'அறுவை' சிகிச்சைகள் சரியான பலனை அளிக்கும் என்பது எனது கருத்து. ஆனால் அவர்கள் செய்வது போதாது. அவர்களிடமிருக்கின்ற வலுவிற்கு அவர்கள் இன்னும் இதனைப்போல் பலமடங்குகள் செய்யலாம். செய்ய வேண்டும்.

உனக்குப் பிடிக்குமே என்று நான் வைத்த அத்தனை மல்லிகைச் செடிகளும் பூத்துச் சொரிகின்றன. வீட்டினுள் எங்கே நின்றாலும் அவற்றின் வாசனை வருகிறது. ஒருமுறை வந்து பார்த்தால் அதிசயித்துப்போவாய். நின்றால், நடந்தால், படுத்தால், உறங்கி விழித்தால் என்று எப்பொழுதும் என் தனிமையை தவிர்த்து தோழமை தருவது அந்தச் செடிகள் தான்.

எனது கதைகள் உனக்கு தூக்கத்தை வரவழைக்கலாம். ஆனால் நீ விடியும் வரை தூங்க மாட்டாய் என்று எனக்குத் தெரியும்.

ஒன்று சொல்ல மறந்து போனேன். உனது நேசத்துக்குரிய உனது நண்பன் நாடு திரும்பிவிட்டான். அயல் நாட்டில்இருக்கப் பிடிக்கவில்லையாம். உன்னைப் போல அவனும் சரியான தன்மா

னக்காரன்தானே. ஆனாலும் சில கடமைகளுக்காக அவன் சில காலம் தாமதிக்க நேரிட்டுவிட்டது. வந்ததுமே முதலில்உன்னைத் தேடி என்னிடந்தான் வந்தான். கனவு நிறைந்த கண்களோடு. பாசமாய் அவனைத் தட்டிக்கொடுத்து நீ இங்கே இருக்கிறாய் என்று சொன்னேன். உன்னைப் பார்க்க வந்தானா? அவனுக்கு உன்னோடு கதைக்க நிறையவே இருந்திருக்கும். பாவம் அவன். தன் சுமைகளை இறக்கி வைக்கவாவது உன்னிடம் வந்திருப்பானே?

உன்னிடம் ஒன்று சொல்லவேண்டும். ஏசுவாயோ என்று பயமாக உள்ளது. நீ ஏசுவாய்தான். பிழைசெய்தால் ஏசத்தானே வேண்டும். அதாவது உன்னைப்போல் சீருடை அணிய என்னால் முடியவில்லையே தவிர எனக்கும் தகடு தரப்பட்டது. ஒருகிழமையாக அதனைத்தொலைத்துவிட்டு பயத்தில்யாரிடமும் சொல்லாமல் இருந்துவிட்டேன். முழுவதையும் கேட்காமல் என்னை ஏச நினைக்காதே. பின்னர் ஒருவாறு அதனை நானே தேடி எடுத்துவிட்டேன். இனிமேல் இப்படிப்பிழை விடமாட்டேன். இம்முறை மட்டும் மன்னித்துக் கொள்.

நேரம் போனதே தெரியாமல் உன்னுடன் கதைத்துக்கொண்டிருந்துவிட்டேன் போலிருக்கிறது. நீண்ட நாட்களாக உன்னைப் பார்க்கவில்லைத்தானே. ஓ! இப்பொழுதுதான் பார்க்கிறேன் அனைவரும் வந்துவிட்டார்கள் போலிருக்கிறது. நேரம் நெருங்கிவிட்டதாம் என்று அறிவிக்கின்றார்கள். அதோ! உனது அண்ணா வருகிறான். அவனுடன் கூடவே உன் நண்பனும் வருகிறானம்மா பார்த்தாயா? அவர்கள் இருவருக்கும் வரியுடை அழகாக இருக்கிறது. இதோ உன் உயிருக்கு நிகரான எங்கள் தலைவர் பேசப் போகின்றாராம். ஆகவே இனியும் நான் கதைப்பதை நீ அனுமதிக்கமாட்டாய். நானும் கேட்க வேண்டும். இனி ஒழுங்குமுறைப்படி உனக்கான சுடரை ஏற்றிவிட்டு மீண்டும் உன்னுடன் கதைக்கிறேன். என் கறுப்பு மலரே இப்பொழுது எழுந்திருக்கட்டுமா?

ஃ ஃ

17- 11- 2001

# கை மாறிய இலக்குகள்

● திருமதி. அ. சந்திரா

"இன்னும் கொஞ்ச நாள் பொறுங்கோ மலரவன்! இந்தமுறைநீங்கள் கொண்டுவந்த தரவுகளை வைச்சே, இலக்கு ஒன்றைத் தீர்மானிச்சிருக்கினம்.. பொறுப்பாளர் தயங்கினார். மலரவன் பேசாமலே நின்றான்.

''இந்த ஒருமுறை அவையோட நீங்களும் உள்ள போய் வரவேணும். போய் வந்தபிறகு...''

பொறுப்பாளர் முடிக்க முன்பே ''சரி'' என்று முடித்துக் கொண்டான் மலரவன் இப்படி எத்தனை சரிகள்!

போராட்டம் எனும் மாபெரும் செயற்பாட்டில் அவரவர்க்குத் தரப்பட்ட கடமைகளைச் செய்வது, தனிப்பட்ட ஆவல்களைநிறைவேற்றிக் கொள்வதிலும் பார்க்க முதன்மையானது.

நடு நிசி. வானம் தெளிவாக நட்சத்திரங்கள் மின்னல்க் கோலமாய் விரிந்திருந்தது· குனிந்து கண்முன்னே பரந்து கிடந்த அகிலன் வெட்டையைப் பார்த்தான் மலரவன். சிறு காற்றுக்கும் அலையசைக்கும் அந்த நீரேரி நிறைந்து தழும்பிக் கொண்டிருந்தது. தன்னோடு வந்திருந்தமற்றவர்களைத் திரும்பிப் பார்த்தான். அவனை போன்று ஒரிருவேவு வீரர்களைத் தவிர மற்றவர்கள் அனைவருமே தற்கொடையாளிகள்! இராணுவத்தின்சில முக்கிய தளங்களை இலக்குவைத்து சற்று முன்னர் தான் தரையிறங்கியிருந்தார்கள்·

விடியமுன்னம் அத்தனை பேரும் இந்த வெட்டையைக் கடந்து, தடயங்கள் விடாது, எங்காவது பற்றைக்குள் மறைந்திருந்து பகல் பொழுதைக் கழித்து இரவானதும் மறுபடி ஆரம்பித்து, நாளை இந்நேரம் இலக்கைச் சென்றடைந்துவிட வேண்டும்.

பொழுது புலரும் போது அத்தனை பேரும் மறைந்து கொள்வதற்கு வசதியான பற்றைகள் நிறைந்த பகுதிக்கு வந்து விட்டார்கள். சுற்றிலும் இராணுவம் திரியிற பகுதி என்பதற்கான அடையாளங்கள் இருந்தாலும், தங்களுக்குள் கலகலப்பாக இருந்தார்கள். அவரவர் துப்பாக்கிகளை துடைத்தார்கள், சாப்பிட்டார்கள்.

மலரவனும் தன் துப்பாக்கியை துடைத்துவிட்டு படுத்துவிட்டான். மனதின் மூலையில் எப்போதும் இருக்கும் வலி அப்போதும் இருந்தது. அப்படியே தனக்குள் மூழ்கி இருக்க விரும்பினான்.

''அண்ணா... நீங்கள் எப்ப பார்த்தாலும் ஏதோ யோசனையிலேயே இருக்கிறியள். சாப்பாட்டில கூட அக்கறையில்லை... சாப்பிட்டு இருங்கோவன்.''

மிக அருகில் செல்லமாக அதட்டிய குரல் கேட்டு திடுக்கிட்டு விழித்தான் மலரவன்.

தமிழரசி! வந்தவர்களிலேயே சின்னவள் கனிவான கண்களால் உண்மையான அக்கறையோடு அவனைப் பார்த்த பார்வையில்... தோற்றத்தில்... சட்டென்று அவனது ஒரேயொரு தங்கை மீனாவை நினைவு படுத்தினாள்.

அவளும் இப்படித்தான். சாப்பிடும் நேரம் வந்து விட்டால் அவன் வேறு எந்த வேலையும் செய்ய முடியாது.

''சுவரிருந்தால் தான் சித்திரம்! ஒரு கமக்காரன் தன்ரை உடம்பைக் கவனிச்சுத்தான் எதையும் செய்யோணும்'' அதட்டி மிரட்டி உட்கார வைத்து விடுவாள். அதற்கு பணிவதில் அவனுக்குத்தான் எத்தனை சந்தோசம்.

அதெல்லாம் போய் ஒரு விதத்தில் இன்று எப்போதும் உள்ளே குமுறும் எரிமலையாக அவன் மாறியதற்கு அவளே காரணமாகி...

தன் பிரமைகளை உதறி எழுந்து உட்கார்ந்தான். மறுக்கத் தோன்றாமல் தமிழரசி நீட்டிய உணவுப் பொட்டலத்தை வாங்கிக் கொண்டான்.

ஏதும் பேசாமல் சாப்பிட்டவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள் தமிழரசி. பயிற்சி எடுக்கும் போதிலிருந்தே அவனைக் கவனித்து வந்திருந்தாள். எதற்கும் பின் நின்றதில்லை. எதற்கும் தயாராக நிற்பான். எத்தனை நேரம் பயிற்சி என்றாலும் முகஞ்சுழித்ததில்லை. செயற்பாடுகளில் அலாதியான வேகம். அதே சமயம் குறி தவறாத நிதானம்.. எல்லாம் இருக்கும்.

ஆனால் மறந்தும் கூட ஒரு பேச்சு... ஒரு சிரிப்பு... சாதாரணமாக ஒரு பகிடி... எதுவும் கிடையாது. அவளுக்கு அவனைப்பார்க்கும் போதெல்லாம் அவனோடு கதைக்க வேண்டும்... ஆதரவாக நான்கு வார்த்தை பேசவேண்டும் போல மனம் உருகும்.

நிமிர்ந்து பார்க்காவிட்டாலும் அவள் தன்னையே பார்த்துக் கொண்டிருப்பதை மலரவனால் உணர முடிந்தது. இன்றிரவு வெடி மருந்துப் பொதியோடு உள்ளே இறங்கி காற்றோடு கலக்கப் போகிறவள்... வாழ்க்கையில் நேற்று இன்று நாளை எல்லாமே ஒன்று போலத்தான் என்பது போல் எத்தனை இலகுவாக இருக்கிறாள்.

இவளைப்போல் நானும் ஒரு காலத்தில் இருந்திருக்கிறேன் என்ற எண்ணம் தோன்றியபோதே என்ன இந்தச் சிறு பெண் என் 'உள்'ளை உசுப்புகிறாள். இவளுக்கு இடம் கொடுக்கக் கூடாது என்று சற்று முன்னேற்பாடாக நிமிர்ந்து முறைத்துப்பார்க்க முயன்றான்.

முறைத்துப் பார்க்க முடியவில்லை, என்பது போக அவள் அன்பு கொட்டும் விழிகளைச் சந்தித்த வேளையில் அசந்தர்ப்பமாக புரக்கேறிவிட்டது.

அவள் பதறிப் போய் விகற்பமில்லாமல் அவன் தலையில் தட்டி ''சாப்பிடேக்க வேற யோசினை வரக்கூடாது என்று எங்கட அம்மம்மாசொல்லுவா'' வார்த்தைகளை பூப்போல உதிர்ந்தபடி தண்ணீர்கானை நீட்டினாள். கண்கள் சிரித்தன. சமாளிப்பதற்காக

''அம்மம்மா?... அம்மம்மா இப்ப எங்க'' மெதுவாகக் கேட்டான்.

''கனடாவில...''

ஓ!''

"ம்... அம்மா அப்பா அண்ணாக்கள் எல்லோருமே அங்க தான்"

"நீங்க மட்டும்..."

"ஓம் நான் மட்டும் இங்க... தமிழீழத்தில எங்கட குடும்பத்தின்ரை பங்குக் கடமையை யாராவது செய்ய வேண்டாமா?"

"ஓ!"

"நீங்கள் கனக்கக் கதைக்க மாட்டியள் போல... என்னால கதைக்காமல் இருக்கேலாது... ஒரு சின்னக் கஷ்டம் என்றாலும் யாரிட்டையாவது சொல்லிப் போடுவன்"

மிரண்டு போனது போல் பார்த்தான். அவன் மனதுக்குள் யாரோடும் பகிர்ந்து கொள்ள முடியாத வேதனை குமுறுவதை அறிவேன் என்கிறாளா...?

"நீங்க சிரிச்சு நான் பார்த்ததில்லை...அதுக்காக கோபப் பட்டும் பார்த்ததில்லை.., சேர்ந்து கதைச்சு சிரிச்சா மனம் லேசா இருக்கும்,"

முகத்தில் ஒரு சின்னச் சுழிப்புக் காட்டி அவளை எட்டிப் போக வைக்க முடியும். அவனால் அவளை முகம் வாட வைக்க முடியாது என்பதை உணர்ந்த போது திகைப்பாக இருந்தது.

"அண்ணா இன்றைக்கு இந்தப் பகலை விட்டா உங்களோட கதைக்க எனக்கு நேரம் வராது..."

ஏதோ இன்றிரவு வெளியூர் போய்விடுவேன் என்பது போல சர்வசாதாரணமாக சொன்னவளை உற்றுப் பார்த்தான்,

சின்னஞ்சிறு தோற்றம் இயல்பாகக் கால்களைக் குத்திட்டு அமர்ந்திருந்தாள்.

இரவு அகிலன் வெட்டைநீரேரிக்குள் அவள் தாழ்ந்து போகப் பார்த்தது ஞாபகம் வந்தது. இன்றைய இரவுக்காக முந்

தின இரவு அவள் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளப்பட்ட தவிப்பும், பிடித்துக் கரையில் சேர்த்தவர்களுக்கு கட்டிப்பிடித்து நன்றி தெரிவித்த அழகும்... எதிரியின் கொடுமை நெருப்பாக நெஞ்சைச் சுடும் போதுகூட கரும்புலியாக மாறித் தன்னை அழித்துக் கொள்ள வேண்டும் என்ற முடிவுச் சிந்தனை அவனுக்குள் எழுந்ததில்லை என்பது ஏனோ நினைவில் வந்தது.

''அண்ணா நெஞ்சில பெரிய சுமை ஒன்றை வச்சுக் கொண்டு தவிக்கிறீர்கள் என்றுமட்டும் எனக்கு விளங்குது... உங்களைப் பார்க்கிற நேரமெல்லாம் உங்கட சோகம் என்னை என்னவோ செய்யும். நீங்க மனம் விட்டுக் கதைச்சா உங்களுக்கும் ஆறுதலாயிருக்கும். எனக்கும் நிம்மதியாய் இருக்கும்.''

கெஞ்சுவது போன்ற அந்த விழிகள் அவனுக்கு மீனாவை அதிகம் ஞாபகப்படுத்தின. அவளும் அப்படித்தான். ஒரு சமயம் மிரட்டுவாள், ஒரு சமயம் கெஞ்சுவாள். எப்படியாவது அவள் நினைத்ததை சாதித்துக்கொண்டு விடுவாள்.

''நீங்கள் எப்ப இயக்கத்தில சேர்ந்தனீங்கள்.'' தன்னை உற்றுப்பார்த்துக் மொண்டே மலரவன் கேட்டபோது தமிழரசி அவன் தன் கூட்டுக்குள் இருந்து வெளியே வரப்போகிறான் என்பதை புரந்து கொண்டாள்.

''தொண்ணூற்றஞ்சில... அப்ப எனக்குப் பதினேழு வயது.'' வார்த்தைகள் உதிர முன்னம் சிரிக்கும் கண்களின் வீச்சு அவனுக்கு இப்போது பழகியிருந்தது.

''ஏன் சேர்ந்தனீங்கள்...''

''எங்கட மண் என்ற ஒரு உணர்வுக்காகத்தான்... நேரடியா எந்த இழப்பையும் நான் சந்திக்கா விட்டாலும் என்னைச் சுற்றி நடக்கிற நிகழ்வுகள் என்னை மாத்திட்டுது. பத்தாதது க்கு எங்கட குடும்பம் கனடா போறது சுயநலமாத் தெரிஞ்சுது... வந்திட்டன்''

''ஓ''

சட்டென்று எழுந்த அவமான உணர்வில் கூசிப்போனான் மலரவன். நான் அப்படியில்லை... [என்னைச் சுற்றி நடக்கும் எதையுமே நான் கவனித்ததில்லை... என் குடும்பம்... என் வாழ்வு... என் காதல்... உழைப்பு.,. பிழைப்பு... இதைத் தவிர வேறு எதையும் சிந்தித்ததேயில்லை...

கிளிநொச்சி அவனது சொந்த ஊர். பலகாலமாக அங்கு விவசாயிகளாக இருந்தவர்கள் அவர்கள். பக்கத்துக் காணியில் தான் மலர்விழி என்கிற மலரின் குடும்பம் இருந்தது. மலரவனின் குடும்பம் பெரியது. ஆறு குழந்தைகள் தாய்தகப்பன் உழைப்பது எல்லாம் கைக்கும் வாயுக்கும்தான் என்றாலும் சந்தோசமாக இருந்தார்கள்.

ஒரே தங்கை மீனாவும் அவளையொத்த மலரும் ஆடிப் பாடி அவனோடு வளர்ந்த காலம் இனிமையானது. அவனுக்கு இப்போதும் அது சந்தேகம்தான். மலரோடு அவன் பழகிவந்த சாதாரணப் பழக்கம் உள்ளூரத் தனிப்பட்ட நேசமாகியதை உணர்ந்ததால் பெரியவர்கள் அவனுக்குத்தான் மலர் என்று முடிவு செய்தார்களா...? அல்லது அவர்கள் அப்படிப் பேசிக் கொண்ட பிறகு அவனுக்குள் காதல் பிறந்ததா...

பிரித்தறியும் தேவை அவனுக்கு இருக்கவில்லை. எல்லோரும் சந்தோசமாக இருந்தார்கள்'

உதயனைத் தவிர...!

உதயன் மலரின் ஒரேயொரு சகோதரன். மலரவனை விட மூத்தவன். அவனைப்பற்றி ஒரு வார்த்தையில் சொல்வதானால் உதவாக்கரை. அவனுக்கு நந்தனை- அப்போதைய மலரவன்- பிடிக்காது. பிடிக்காது என்றால் அத்தனை பிடிக்காது. சின்னவயதில் 'நந்தனைப் பார்... அவனைப் பார்த்து திருந்து, உன்னைவிடச் சின்னவன் எவ்வளவு பொறுப்பாக நடக்கிறான்' என்று பெற்றோர் ஆதங்கப்பட்டுச் சொன்ன வார்த்தைகள் உசுப்பியது ஒரு புறம்... நந்தனைப் போல் தன்னால்நடக்க முடியவில்லை என்ற ஆதங்கத்தால் வந்த வெறுப்பு ஒருபுறம்.

நந்தனுக்கும் உதயனுக்கும் வெகுதூரம் என்பது எல்லோருக்கும் தெரியும். உதயனின் எதிர்ப்பை யாரும் பொருட்படுத்தவில்லை.

''காசு பணம் பெரிதா குணம்தான் பெரிது, நீ சரியாயிருந்தால் மீனாவை உனக்குக் கேட்டிருக்கலாம்'' என்று மலரைப் பெற்றவர்கள் அவனை அடக்கிவிட்டார்கள்.

உதயகாலத்தில் கிழக்கு வெளுப்பது எத்தனை நிச்சயமோ அத்தனை நிச்சயம் மலர் தனக்கு என்று நந்தன் இறுமாந்திருந்த காலத்தில் தான் கிளிநொச்சி இடப்பெயர்வு ஏற்பட்டது.

இரு குடும்பங்களும் ஒன்றாக விசுவமடுவில் கொட்டில் போட்டுக் கொண்டு வாழ்ந்த போதுதான் நந்தன் வாழ்வில் சற்றும் எதிர்பாராத புதிய குழப்பம் ஏற்பட்டது.

பருவ வயதில் இளமையின் குறுகுறுப்பில் சிறகடித்த மீனாவை தன் வசப்படுத்தி விட்டான் உதயன். மீனா எப்போதுமே பிடிவாதக்காறி, உறவினர்களின் வற்புறுத்தலில் வெளிநாடு செல்வதற்கு நந்தன் தயாராகிக் கொண்டிருந்த நேரமது. மீனாவின் சுபாவம் தெரிந்த நந்தன் பெரியவர்களைக் கொண்டு கலியாணம் செய்து வைத்தான்.

''ச்...அண்டைக்குப் பிடிச்சது சனி. தாலிகட்டிஉடனேயே என்னை வெளிய போ என்று சொன்னான். நான் பெரிசு படுத்தேல்ல விட்டுப் பிடிக்கலாம் எண்டு வெளிக்கிட்டுஅதிசயமா ஒரு மாசத்துக்குள்ளலண்டனில்நிண்டன். உழைச்சுப்பிழைச்சு கொஞ்சக்காலம் போக மலரைக் கூப்பிடுவன் எண்டு நான் நினைச்சிருக்க,.. பேச்சு நின்றது. ''நினைச்சிருக்க'' தமிழரசி எடுத்துக் கொடுக்க ''உதயன் தான் சொல்லுறதைக் கேட்காவிட்டால் மீனாவைக் கைவிடுவன் எண்டு வெருட்டி... நானும் கிட்ட இல்ல... மலரை உத்தியோகக்காரன் ஒருத்தனுக்குக் கட்டிக் கொடுத்திட்டான். ''என்றான் தமிழரசி திகைத்துப்போனாள்.'' ''அண்ணா உங்க நிலை எனக்கு விளங்குது. சின்ன வயசிலிருந்தே பழகிய மலரை உங்களாலை மறக்க முடியேல்ல.'' தலையசைத்தான். ''அப்பிடியில்லை. நான் மலர்ல வச்சிருந்த அன்பு எல்லையில்லாதது... நடந்தது நடந்த போச்சுது! எங்க இருந்

தாலும் அவள் நல்லா இருக்கோணும், என்னை மறந்து சந்தோசமா இருக்கோணும் எண்டுதான் நினைச்சன்...''

தமிழரசிக்கு இப்போது குழப்பம். காதல் தோல்வியும் ஜீரணிக்கப்பட்ட பின் என்னதான் நடந்திருக்கும். ''கொஞ்ச நாள்தான்... யாழ்ப்பாணம் போகாட்டி உத்தியோகம் போயிடும் எண்ட நிலைமையில தம்பதிகள் யாழ்ப்பாணம் போயிருக்கினம். அங்க கிருஷாந்தி கொலை வழக்கு நடத்தபோது செம்மணிப் புதைகுழிபற்றி சொன்னானே ஒருசிப்பாய்'' தமிழரசியை இப்போது பதற்றம் தொற்றிக் கொண்டது. உணர்ச்சியற்று இறுகிய குரலில் மலரவன் தொடர்ந்தான்.

''அவன் சொன்னத்தில் ஒரு கணவன் மனைவியைக் கொண்டு போய் அந்தப் பெண்ணை... பேப்பர்ல படிச்சிருப்பியள்'' சொல்லமுடியாமல் அவன் திணறியபோது தமிழரசி உறைந்து போனாள். அந்தச் சம்பவம் பற்றி அவள் படித்திருந்தாள். இராணுவ அதிகாரி ஒருவனால் கணவன் முன்னால் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்ட அந்தப் பெண்ணின் பெயர் மலர்விழி என்பது ஞாபகம்வர பேச்சற்றுப் போனாள்.

''என்ர மலருக்கு நடந்தமாதிரி இனியொரு தமிழ்ப் பெண்ணுக்கு நடக்கக்கூடாது. நான் இங்க வந்தது இராணுவத்தைப் பழிவாங்க வேணும் என்றதுக்காகத்தான். வேவுக்காரனாக முடிஞ்சதை செய்திட்டன...ஆனா...''கம்மியகுரலில் தொடர்ந்தான். தமிழரசியின் கண்களில் நீர் வழிந்து கொண்டிருந்தது. ''சண்டைக்கு போகவேணும். நேருக்கு நேரா கொஞ்சப் பேரையாவது விழுத்தோணும். அதுவரையில் நான் செத்துப் போயிடக்கூடாது.'' மலரவன் கண்களை மூடிக்கொண்டான்.

''நிச்சயம் உங்கட ஆசை நிறைவேறுமண்ணா'' விம்மிக் கொண்டே கூறினாள் தமிழரசி. இதை அவள் மனம்பூர்வமாக கூறியபோது அவள் திரும்பி வரச்சந்தர்ப்பம் இல்லை என்பது நினைவுவர மௌனமானான்.

★ ★ ★

ஆதவன் மறையும் நேரம், எல்லோரும் புறப்படத் தயாரானார்கள், அங்கிருந்து சற்றுத்தூரம் சென்று இரு குழுக்களாகப் பிரிந்து கொள்ள வேண்டியிருந்தது. ஒருவர் வெற்றிக்கு

ஒருவர் வாழ்த்துத் தெரிவித்துக் கொண்டு அர்த்தமுள்ள புன்னகைகள் பரிமாறிக் கொண்டு பிரிந்தார்கள்.

மலரவன் தமிழரசி அடங்கிய குழுவினர் இடதுபுறம் நடந்தார்கள். ஆமிஅடிக்கடி போய்வரும் நெடுஞ்சாலைஒன்றை கடக்க வேண்டும்.

தமிழரசி துடிப்பாக இருந்தாள்

''அண்ணா இன்றைக்கு நான் அழிக்கவேண்டிய இலக்கு அழிஞ்சு போகும் என்ற நம்பிக்கை எனக்கு முழுமையா இருக்கு. நீங்கள் என்ர வெற்றிச் செய்தியோடை போவீங்கள்''

இருட்டினாலும் அவள் கண்கள் பிரகாசிப்பதை உணர முடிந்தது. இதோ கடக்கவேண்டிய றோடு அங்கங்கே காவலரண்கள். அவர்கள் காவற்கடமைகளை மாற்றிக்கொண்டு அமைதியடைந்த பிறகும் பெரிய பெரிய ட்ரக்குகள் போன்ற வாகனங்கள் அவ்வப்போது கடந்து கொண்டிருந்தன.

இடைவெளி பார்த்து மிகக் கவனமாக மலரவன் கடந்து விட்டான். அவன் நிலையெடுத்துக் கொண்டதும் ஒவ்வொருவராகக் கடந்தார்கள். அச்சமயம் இன்னொரு ட்ரக் தூரத்தே... வெளிச்சம் தெரிந்ததும் அங்காலும் இங்காலுமாய் பதுங்கிக் கொண்டார்கள்.

ட்ரக் யோய்விட்டது. இனி மீதமிருக்கும் தமிழரசியும் இளங்கோவும் வரவேண்டும்.

வேவுக்கு வந்தே பழகிய மலரவனின் கண்கள் இருட்டுக்குள் கூர்ந்து பார்த்தன. அவர்கள் வரவில்லை.

நேரமாகிறதே என்று யோசித்த மலரவன் தன்னோடு வந்திருந்தவர்களை சற்றுத் தள்ளிப் போய் மறைந்திருக்கச் செய்து விட்டு இருளோடு இருளாக இந்தப்புறம் வந்து விட்டான்.

''அண்ணே'' இன்னொரு வேவு வீரன் இளங்கோவின் ரகசியக் குரலில் இருந்த பதட்டம் அடிவயிற்றில் சங்கடம் தர

''இளங்கோ ஏன் நிற்கிறியள்'' என்று கேட்டுக்கொண்டே பார்வையைச் சுழற்றிய போது கண்டுவிட்டான்! தமிழரசி எந்த அசைவும் இல்லாமல்... நீட்டி நிமிர்ந்து... ''பாம்பு கடிச்சுப் போட்டுது அண்ணே ஆள் உடனேயே...ராஜநாகமாயிருக்க வேணும்.'' மலரவனுக்கு உயிரே நடுங்கிவிட்டது.

''தங்கச்சி... தங்கச்சி...'' என்று உலுப்பிப்பார்த்தான். கையில் நாடித்துடிப்பு இல்லை. மூச்சு நின்றுபோய்விட்டிருந்தது என்று நிச்சயம் செய்து கொண்ட அந்தக் கணத்தில்

''இன்றைக்கு நான் அழிக்க வேண்டிய இலக்கு அழிஞ்சு போகும் என்ற நம்பிக்கை எனக்கு முழுமையாக இருக்கு'' என்று அவள் கூறிய வார்த்தைகள் நெஞ்சில் அறைந்தன. அதே கணத்தில் அந்த வார்த்தைகளின் அர்த்தம் புதிய கோணத்தில் விளங்கியது. அழிந்து போகும் என்று சொன்னாளே தவிர அழிப்பேன் என்று சொல்லவில்லை. விதி அப்போதே அவள் வார்த்தைகளில் விழித்திருக்க வேண்டும்.

தான் செய்ய வேண்டியது என்ன என்பது புரிந்தாற் போலிருந்தது மலரவனுக்கு. அன்று பகல் அவன் மனப்பாரம் குறைய வழி செய்தவளே இந்த வழியையும் காட்டிவிட்டாள் போலும்.

மிகச் சில கணங்களில் மிகவேகமாக தமிழரசியின் வெடி மருந்துப் பொதிகள் மலரவனின் உடலில் பொருந்திக் கொண்டன.

''தமிழரசியின் இலக்கு நிச்சயமாக அழிக்கப்படும் இளங்கோ. நீ இவவை கொண்டு போய் சேர்க்க முயற்சி செய்'' என்று இளங்கோவின் தோளில் தட்டி விடைபெற்றுக் கொண்டு நிதானமாக நெடுஞ்சாலையைக் கடந்தான் மலரவன். அவனுக்கு நிம்மதியாகவிருந்தது.

⁂ ⁂

# என்றாவது ஒரு நாள்

● அலையிசை

தெளிவடையாத மனங்களின் இடுக்குகளில் தெளிவடையச் செய்ய சிந்தனை கதிரொளியாய் மனங்களில் கசிவது போல பிறை நிலா ஒளியைச் சிதறடித்துக் கொண்டிருந்தது.

உயிரினத்தின் உடல்களில் குளிர் உணர்வை ஏற்படுத்தியவாறு மௌனமாய் பனிவிரிந்திருந்தது. வானிசைக்கு புற நிலைமாற்றங்களின் நிகழ்வுகளை உற்று நோக்கும் ஆற்றல் கூட செயலிழந்து போய் விட்டதான உணர்வே ஏற்பட்டது.

அகத்துள் வர்ணமற்ற உணர்வு கொதி நிலையடைந்திருந்தது.

நெருப்பினுள் வைத்த செத்தல் மிளகாய் கருகியதால் ஏற்பட்ட வாசனை காற்றோடு கலந்து கொள்ள வானிசைக்கு அந்த சுவாசத்தால் இருமல் ஏற்பட்டது.

மூலைத் திண்ணையில் படுத்திருந்த ஐயாவிற்கும் இருமல் ஏற்பட்டது. இடைவிடாமல் ஐயா இருமுவது வானிசைக்கு வேதனையை கொடுக்க உப்புச் சிரட்டையுள் சுட்ட செத்தல் மிளகாய்களை எடுத்துப் போட்டாள்.

ஐயாவினை வைத்து எக்ஸ்ரே இல்லாமலே உடலினுள் உள்ள எலும்புக் கூட்டுத் தொகுதியை தெளிவாகவே பார்க்கலாம்.

வயதின் மூப்பினை விட மனதுள் இடைவிடாமல் ஏற்பட்ட சுமைகளே ஐயாவை செயலற்றவர் ஆக்கியிருக்க வேண்டும்.

மூன்று நாளாக பச்சையரிசிச் சோறும், கத்தரிக்காய்ப் பால்கறியுமாக பொழுது கழிந்திருந்தது. ஐயா சூழ்நிலையை விளங்கிச் சாப்பிட, மதுவனிற்குத்தான் இந்தச் சாப்பாடு தொண்டைக் குழியை தாண்டி உள்ளிறங்க மறுத்தது.

வளரும் வயதுடைய பிள்ளைகளிற்கு ஊட்டச் சத்துள்ள உணவுகளோடும், மன அமைதியோடும் இருந்தால் தான் உயிர்த் துடிப்பான வாழ்வை அமைக்க கூடியதான நிலை இருக்கும்.

தமிழினத்தின் வாழ் நிலைகள் உயிர் வாழ்தலிற்கே சாத்தியமற்றதாகவிருக்கும் போதும், அடிப்படைத் தேவையான உணவு கிடைப்பதே கஷ்ரமாக இருக்கும் சூழலில் மதுவனிற்கு விருப்பமான உணவு எப்படி கிடைக்கும்?

மதுவனின் முகத்தில் துலங்கும் வெறுப்பின் வெளிப்பாடுகளை வானிசை மௌனமாகவே உள்வாங்கிக் கொள்வாள். அந்த முகத்தில் உருளும் நீள விழிகளும், அகன்ற பிறை வடிவைப் போன்ற இமைகளும் மணாளனையே இமைவெட்டளவிலும் மறக்காமல் ஞாபகப்படுத்திக் கொண்டே இருக்கிறது.

மணாளன் என எண்ணும் போதே மண்டை விறைக்கிற தும், மூச்செடுக்கவும் சிரமமாக இருக்கும். எவ்வளவு காலங்கள் அவன் முகத்தரிசிப்பு இல்லாமலானது.

இலையுதிர்ந்து, பின் துளிர் விட்டு முகையவிழ்ந்ததும், பூமியில் தொடரான வெப்பக்கதிர்கள் தெறித்ததும், அதன் பின் இருள் மேகங்கள் வானை நிரப்பியதும் இரு முறையான நிகழ்வாகிற்று.

இப்ப எப்படியிருப்பான்?

கடைசியாக... கடப்பை தாண்டாமலே நின்றபடி, விழி களால் வானிசையை கூர்ந்தாராய்ந்தவாறு, மோட்டார் சைக்கிலின் அச்சிலேற்றறை கூட்டியபடி அந்த நிகழ்வுகளே பின்னோக்கிய சுழல் படமாய் அவளுள் ஓடியது.

என்ன கதைத்தான்? அளவாகத்தான் கதைத்தான். உறவு களைப் பற்றிய நல விசாரிப்புத்தான் அதில் முதன்மை பெற்றி ருந்தது. மணாளனின் பரந்து பட்ட சிந்தனைத் திறன் அதன் விளைவாய் அவன் உரைத்த சேதிகள் கூட வானிசைக்கு புதி தாய் தானிருந்தது.

மோட்டார் சைக்கிலின் இயந்திர ஒலியை தவிர வானிசை யும், மணாளனும் அமைதியாகவிருந்தனர். வார்த்தைகளற்ற அவ்விடைவெளியை மணாளனே கலைத்தான்.

''அக்கா எண்ணங்களையும், உணர்ச்சிகளையும் வெளி விடும் போது உற்பத்தியாகக்கிற மனோதத்துவக் கதிர்வீச்சை (**AURA**) ஆரா என்று தான் சொல்லுறது. இப்ப எங்களிற்கிடை யேயும் அந்தக் கதிர் வீச்சுத் தான் ஊடுருவுதோ?''

தெரிந்தெடுத்த சொற்களில் சொன்னவாறு அவனது ஒளிர்ந்த புன்னகை தான் வானிசைக்குள் இப்பவும் அக மலர் கிறது.

தெத்திப்பல் தெரிய மணாளன் அமைதியாக்ச் சிரித்தால் அந்தச் சிரிப்பில் அருகேயிருப்பவரையும் கலந்து கொள்ளச் செய்

யும் குழந்தை முகமான அவனுடைய வசீகரம் மீளவும் நினைவு படுத்தவே தோன்றும்.

சின்னப்பிள்ளையாய் மணாளன் இருந்த போதான நிஜ வடிவங்கள் நவீன ஓவியங்களைப் போலவே தான் இப்பவும் காட்சியாகிறது.

எதிலும் நிதானமும், இரக்கவுணர்வும் தான் அவனை அவ்வுறவுகளை விட்டு அகலச் செய்திருக்கிறது போலும்.

சூரியக் கதிர்களின் ஆளுகைக்குட்பட்ட காலத்தில் திடீரென பன்னீர்த்துளியாகத் தூறிய மழைத்துளிகள் பெருந்துளியாகி வெள்ளமாகியதும் சொற்ப நிமிடக் கதிரில் பள்ளங்களில் நிரவி மேடு தாண்டி குளங்களைச் சென்றதுடன், ஒய்வாகியிருந்தது.

அந்தக் குளிரின் சிலிர்ப்பில் நனைந்தவாறு வந்த மணாளனின் மனச்சாட்சியில் அந்தச் சாம்பல் வர்ணப் பூனைக்குட்டியின் நனைந்த தோற்றம் துலங்கியது.

சாம்பல் நிற மயிர்கள் நீரில் நனைந்து, நீர் வடிய சிலிர்த்து நின்றது. காற்றில் பூனைக்குட்டியின் குரல் ஓயாது ஒலிக்க, பார்க்கவே இரக்கத்தை தூண்டும் அச்சம், பசி, குளிர் போன்ற உணர்வுகளை கண்களில் தேக்கியவாறு மணாளனை இரந்து பார்ப்பது போலவே அவனுக்குப்பட்டது.

அந்தப் பூனைக் குட்டியை தூக்கி வந்து தாயின் பரிவினைப் போன்று பக்குவமாய்ப் பார்த்தான்.

யது என்ற பெயரோடு இப்பவும் மணாளனின் உணர்வின் அங்கமாய் வாழ்வதாகவே வானிசை உணர்கிறாள்.

** ** **

வானத்தில் மிதந்து செல்லும் முகில்களின் உருக்கள் மணாளனின் மனோ நிலைகளிற்கு ஏற்ப மாற்றம் அடைவது போலிருந்தது.

வானத்தை மீண்டும் நிமிர்ந்து பார்த்தான். ஏராளமான நீர்த்திவலைகளின் திரள்களாகவே தான் முகிற் கூட்டங்கள் உருவாகிறது.

இவை தான் வானத்தில் வெவ்வேறு அடி உயரங்களில் வெவ்வேறு வடிவங்களில் காற்றின் திசைக்கு ஏற்ப உலாவுகிறது.

இந்தக் கருமை நிறமுள்ள முகிற்கூட்டங்கள் கிட்டத் தட்ட ஐந்தாயிரம் அடி உயரத்தில் தான் இருக்க வேண்டும் என மணாளன் மதிப்பிட்டுக் கொண்டான்.

அமைதியை அந்தக் கடலுடன் அதன் மீது பயணிக்கும் படகில் செல்லும் உயிர்களும் தத்தெடுத்துக் கொண்டிருக்க வேண்டும்.

''அமைதிக்கு முகவரி இல்லைப் போலும்.''

மணாளனிற்கு எண்ணிய மறுகணம் மனதுள் அலையெறிவதைப் போன்ற சிரிப்புணர்வு ஏற்பட்டது. அதன் பிரதிபலிப்பாய் மணாளனின் கண்கள் விரிவதைக் கண்டவர்கள் தமக்குள்ளும் அக் கண்களின் குறு குறுத்த உணர்வை காவு கொண்டவர்களாய் அமைதியை கலைக்க முற்பட்டனர்.

மணாளன் உடலைச் சாய்த்தவாறு கடலைப் பார்த்தான். முகில்களின் நிறங்களைப் பிரதிபலித்தவாறிருந்தது. அந்தச் சூழ்நிலையிலும் இனம் புரியாத உணர்வின் வலிகள் அவனைத் தாக்கிற்று. கைகளை மடித்து தலைக்குள் வைத்தவாறு பெருமூச்சு விட்டான்.

விட்ட பெருமூச்சின் எதிரொலி அவனின் சுமையை குறைக்க முற்பட்டு தோல்வியை தழுவிக் கொண்டது. நெளி நெளியாய் உருவாகிய குறுகிய அலைகளில் அம்மாவின் தோல்ச் சுருக்கங்களோடு காணப்படும் முகம் தோன்றுவது போலிருந்தது.

இன்று வரையும் மணாளன் வந்து குடும்பத்தின் துயரச் சுமைகளை குறைப்பான் என்ற நம்பிக்கையில் அவனைக் காணும் போதெல்லாம் கட்டித் தழுவி கொஞ்சிவிடும் அப்பாவி அம்மாவின் நம்பிக்கை கீற்றாய் அவன் மனதை கீறிக் கொண்டே இருக்கிறது.

கூன் விழுந்து, பாரிசவாதத்தால் பாயோடு வாழ்வைக் கழிக்கும் அப்பாவின் வேதனையோடு கலந்த முனுகல்கள் அவனை ரணப்படுத்தும். கண்களை மூடி மனதை ஒரு நிலைப் படுத்த முயல்வானே தவிர சிந்தனைகளை சிதற விடமாட்டான். அவன் பாதச் சுவடுகள் பதித்த தடங்களின் அருகே காணும் நிகழ்வுகளே அவனிற்கு ஊக்கிகளாகத் திகழ்கிறது.

கிடுகுகளால் வேயப்பட்ட கூரைகள் உக்கி ஈர்க்குகளை மட்டும் தாங்கிய முகடுகளுடன் அதினுள் எதிர்கால வாழ் வேயற்று வாழும் உயிர் உறவுகளின் சுவாசத்துடிப்புக்கள் ஒடுங் கிப் போவதையே நாளாந்த தரிசிப்பாய் அவனிற்காகிவிட்டது.

இதன் பின் அவன் எதைத் தேடுவதில் குறியாய் நிற் கிறனோ! அதுவே அவனை இயக்கும் சுவாசமாகியிருந்தது.

ஒன்று, இரண்டு, மூன்றென வெள்ளிச் சரிகைகளாய் கறுப்புத்துணியில் மின்னுவதைப் போன்று அக்காவின் தலை மயிர்களில் நரை மயிர்கள் வெளிக் கிளம்பியிருப்பதை அவன் காணும் போதெல்லாம் அவனிற்குரிய கடமையை செய்யாது போனதன் தவறை இடித்துரைப்பது போன்ற உணர்வே ஏற் படும்.

இதயத்துள் சுமைகளான சில்லுகள் உருள்வது போன்ற வேதனை ஏற்படும். அவ் வலி சிறிது சிறிதாக உருப் பெற்று புயலாக மனதின் மையத்துள் உழலும்.

உடல் முழுவதும் வெப்பான இரத்தம் ஓடுவதாகப்படும். அங்கங்கள் அசைய மறுப்பது போன்ற பிரமையும் ஏற்படும்.

இவனின் மறுபதிப்பாய் கவலைகளே அற்று வாழும் வய தில் கவலைகளிற்குள்ளே வாழும் மதுவனின் நினைவு அவனின் உயிர் நரம்புகளை உரசிக் கொள்ளும்.

தோள் மீது தூக்கி அவனைக் காவடியாடிய நினைவுகள், தோட்டத்துவாய்க்கால் நீரில் நீச்சல் பழகிய நினைவுகளென அனைத்தும் மணாளனிற்குள் சிறகுவிரிக்கும்.

அன்புணர்வு தான் உயிரிணங்களின் உயர்ச்சிக்கும், எழுச்சிக்கும் கலங்கரை விளக்கமாகிறது. அந்த உறவுகளின் பிரிவுகளை தாங்கக் கூடிய பக்குவம் அனைவருக்கும் வராது. அவர்களைப் பிரிந்து குறிக்கோள்கள் என்ற திசை நோக்கி நடப்பவர்களிற்கும் கூட மன ஓரத்தில் அவ்வுறவுகளின் அன்பு முகங்களே ஒளியாகி இருக்கும்.

மணாளன் சரிந்து படுத்தவாறு படகில் உள்ளவர்களைப் பார்த்தான். போனதடவை வந்த பல முகங்கள் நிரந்தரமாகவே அவர்களை விட்டுப் பிரிந்திருந்தார்கள்.

படகின் இயக்கத்திற்கும்,செயற்பாடுகளிற்கும் உறுதுணையாக நின்றவர்களின் நிகழ்வுகள் மனதில் உறுத்திக் கொண்டது.

வானத்தில் சுடர்விடும் ஒவ்வொரு நட்சத்திரங்களையும் சுட்டிக்காட்டி "இது நான்.இதுவும் நான் தான்.அந்தா தெரியுது அந்தப் பெரிய வெள்ளிக்குப் பக்கத்தில உள்ள இரணை வெள்ளியில ஒண்டு தம்பி மற்றது நான், அம்புக்குறி வெள்ளியில உள்ள மூன்னுக்குள்ள வெள்ளி நான்."

இப்படி எத்தனை கதைகள்.

வானத்தைப்பார்த்தான் மணாளன். சூரியன் மறைய முற்படுவதும், கரும் முகில்களை காற்றள்ளிச் சென்று கொண்டிருப்பதும் தான் தெரிந்தது.

"நான் மாலை வெள்ளியாய்த் தானிருப்பன்." எந்நேரமும் பம்பல்லடித்து, எதையாவது ஆராய்ந்தபடி இருக்கும் செல்வன் அடிக்கடி இப்படித்தான் சொல்லிக் கொண்டிருப்பான்.

போன சண்டையில் உண்மையாகவே அவன் தேசத்திற்கு ஒளியைத் தேடும் பணியில் அடிக்கல்லாகியிருந்தான்.

மணாளன் மேற்கு வானத்தை ஆவலோடு பார்த்தான். மாலை வெள்ளி கண்சிமிட்டவில்லை. மாறாக வெடிபட்டு உடைந்து போன முன் பல்லோடு செல்வன் புன்னகைப்பது போன்ற தாக்கமே அவனிற்கு ஏற்பட்டது.

பெரிது பெரிதாகச் சுவாசித்தான். காற்றின்றி சுவாசிப்பது போன்ற கடினத் தன்மையான உணர்வுள் அல்லலப்பட்டுக் கொண்டான்.

ரேடாரின் ஆழியில் அலையை அனுப்பும் கட்டளையை விரல் நுனியால் அழுத்துவதன் மூலம் கட்டளையிட்டுக் கொள்ள, கண்களால் பார்க்க முடியாத அலைவடிவத்துடன் வானொலி அலை முன்நூற்றறுபது பாகையில் கண்காணித்துக் கொண்டிருந்தது.

வழமையை விட தடங்கல் அற்ற ஓட்டம் குறிக்கப்பட்ட எல்லையில் எதிரிக் கலத்திற்கான காத்திருப்பிற்காகவே கலங்கள் பாய்ந்து கொண்டிருந்தன.

** ** **

''அம்மா.''

வெளித் திண்ணையில் சுருண்டு படுத்திருந்த அம்மாவிற்கு நாடி நரம்பையெல்லாம் ஊடுருவியபடி அக் குரல் காற்றோடு அள்ளுப்பட்டுச் செல்வது போலிருந்தது. அம்மா திடுக்கிட்டு எழுந்தவாறு கடப்பை ஆவலோடு பார்த்தாள்.

இருள் கவிழ்ந்த பூமியில் நட்சத்திர ஒளிகளால் பரவிய வெளிச்சத்தில் கடப்பில் வெறுமை தான் எஞ்சியிருந்தது. ஏமாற்றம் தந்த துயர் கண்ணீராக மாற அம்மா தனக்குள் குமுறிக் குமுறி அழுதாள்.

இதுவரை காலமும் சேர்த்து வைத்த சுமைகளை கண்ணீர் சிந்துவதன் மூலம் தீர்த்து விட முயன்றாள். மணாளனின் வருகை நின்று போனதன் பின் ''வேலைச் சுமையாக இருக்

கும், வேறிடம் போய்யிருப்பான்.'' இப்படித் தான் ஒவ்வொரு முறையும் தன்னைத் தானே ஆறுதல்படுத்துகிறாள்.

நாள் தவறாமல் கடப்படியில் நின்று போய் வருபவர்களில் மகனைத் தேடுவாள். தூரே மணாளனின் சாயலில் யாரும் வந்தாலும் மகன் தான் வருவதாக எண்ணி கூசும் கண்களை அகல விரித்துப் பார்ப்பாள்.

மணாளனின் பிரதி நிழல் கலைய அவர்கள் செல்லும் போது அம்மாவின் சோகங்கள் அவளுள்ளே பிரளயமாகித் தணியும்.

என்றாவது மணாளன் வருவான் அப்ப அவனுக்கு மட்டுமே எடுத்துரைக்க கூடிய சேதிகளைப் பக்குவப்படுத்தியவாறு அம்மா இருள் பொழுதுக்குள் வரு மட்டும் கடப்புக்கருகில் காவலிருக்கிறாள்.

** ** **

காற்றுடன் மோதி எதிரொலிக்கும் இயந்திர ஒலிகளை எந்தச் சந்தர்ப்பத்திலும் கேட்டால் அப்படியே அந்த வேலைகளைப் புறக்கணித்து விட்டு வானிசை கடப்பை நோக்கி ஓடுவாள்.

யாராவது புதியவர்கள், மணாளானைப் போன்றவர்கள் வீட்டிற்கு வந்து கதைக்க முன் உள்ள வினாடி மௌனப் பொழுதுள் வானிசை பலவற்றை எண்ணி தன்னுள் உடைந்து உயிர் பொறுவாள்.

மதுவனின் இயல்புகளிலும், போக்குகளிலும் மாற்றங்கள் ஏற்படத் தொடங்கியிருந்தது. வானிசை இப்பவெல்லாம் மணாளனுடன், மதுவனை நினைத்தும் கவலைப்படத் தொடங்கி விட்டாள்.

மதுவன் வைத்த வாழை மரங்களும், பூமரங்களும், மணாளனின் யதுவும், ஆட்டுக் குட்டிகளுமே வானிசைக்கு இப்ப பிரியாத உறவாகியிருந்தது.

நாற்திசையின் எங்காவது மூலையில் வெடித்துச் சிதறும் கந்தகச் சிதறல்களின் சுருப்பொருளை அதன் முடிவினை அறியும் போதெல்லாம் வானிசையின் ஆன்மா வெத்து தணியும்.

மணாளனின் எந்தவொரு பொருளிலும், தூசுகள் படியவோ, பிறர் தீண்டவோ வானிசை அனுமதிப்பில்லை. ''மணாளன் வருவான்'' அது தான் வானிசையின் நிரந்தர எண்ணமாய் மனதுள் தியானமாக மாறி விட்டது.

''அக்கா'' என தெத்திப் பல் தெரிய கடப்பைகடந்து ஓடி வரும் மணாளனின் வருகைக்காக வானிசை காத்திருக்கிறாள்.

அம்மாவைப் போல வானிசைக்கும் மணாளனிடம் சொல்ல நிறைய சேதிகள் உள்ளது.

'என்றாவது ஒரு நாள்,' எந்த நிலமையிலோ மணாளன் வரலாம். அந்த வரவிற்காக பல ஆன்மாக்கள் தமக்குள்ளே பல உயிர்ப்பான உணர்வுகளை அடைக்காத்தபடி வாழ்கிறார்கள்.

******

# ரணங்கள்

● மண்டைதீவு கலைச்செல்வி

அந்தக் காணியில் இரண்டு மூன்று தென்னை மரங்களும் மூன்று மாமரமும் முற்றத்தில் ஆறுதல் தருவது போன்று ஒரு வேப்ப மரமும் நின்றது. காணி முழுவதும் குப்பையும் கூளமும் ஒரே பற்றைகளும் வளர்ந்து, காட்டுச் செடிகளும் பற்றிப் படர்ந்து இருந்தது. ஏதோ வேலி இருந்த அடையாளத்திற்கு பதிலாக இடைக்கிடை சில பூவரசு மரங்களும் ஓங்கி வளர்ந்து இருந்தன.

முன்பு என்றால் சுமார் ஐந்து வருடங்களுக்கு முன்பு செல்லம்மா தன் காணியையும் ஒரு குடிசையையும் என்ன மாதிரி துப்பரவாக வைத்திருந்தாள். வெள்ளி செவ்வாய்க் கிழமைகள் தோறும் சாணியிட்டு நிலத்தை மெழுகி வைத்திருப்பாள். அப்

போது இருந்த அவளுடைய ஊரா? இப்போது இருக்கிற செல்லம்மா கூட எவ்வளவு மாறியிருக்கிறாள். சூரியக் கதிரோடு அந்த ஊரை விட்டு தொண்ணூறு வீதமானோர் இடம் பெயர்ந்து வன்னிக்குப் போய்விட்டனர். செல்லம்மா பாவம் என்ன செய்வாள்? ஊரிலே கூலிவேலை செய்து தன் ஒரே மகனை வளர்த்துப் படிப்பித்துக் கொண்டு தன் வயிற்றையும் கழுவியவள்.

''எல்லோரும் வன்னிக்கிப் போகினம்...! நாங்களும் போவமேயம்மா...?'' என்று அவள் மகன் கேட்ட போது செல்லம்மா மறுத்து விட்டாள்.

''ஒரு கைபிடியும் இல்லாத நாங்கள் என்னெண்டு போறது? அங்க போய் என்ன செய்யிறது? எங்களுக்கு வன்னியில ஆர் இருக்கினம்?'' என்று கேட்டாள். அங்கு இருந்த சில குடும்பங்களோடு அவர்களும் தங்கி விட்டனர். திடீரென இராணுவம் அந்த ஊரை முற்றுகையிட்டது. செல்லம்மாவின் மகனோடு கூடிய பிள்ளைகளை விசாரணை என்ற பெயரில் கைது செய்தால் என்ன செய்வது...? அவள் தன் மகனைக் கட்டிக் கொண்டு அழுதாள்.

''அம்மா பயப்பிடாதீங்கோ... அவர்கள் வாறதுக்கிடையில் நான் எங்கேயாவது ஓடவேணும்... பிடிச்சால் விடமாட்டாங்கள்...!'' என்று கூறிவிட்டு பின்வளவால் ஓடிப் போனவன் தான். அதன் பின் வரவேயில்லை. அவனுக்கு என்ன நடந்தது என்று அவளுக்கு இன்றுவரை தெரியாது.

தன் பிள்ளை எங்கேயாவது ஒளித்து இருந்து விட்டு வருவான் என நினைத்து நினைத்து வாசலையே பார்த்துப் பார்த்து ஏமாந்தாள் செல்லம்மா. அவளுடைய நம்பிக்கை வரவர குறைந்து போன போது அவள்தன்னை மறந்து, பிரமை பிடித்தவள்போல் ஆகிவிட்டிருந்தாள். அழுது அழுதுகண்ணீர் வற்றி விட்டது. குளிப்பு, முழுக்கு, எண்ணெய், தண்ணீர், பசி அனைத்தும் மறந்து ஓர் சடமாகிப் போனாள் செல்லம்மா. யாராவது

தெரிந்தவர்கள் அறிந்தவர்கள், அயலவர்கள் சாப்பாடு கொண்டு வந்து கொடுத்தால் சரி. மற்ற வேளைகளில் அவள் சமைப்பதோ சாப்பிடுவதோ கிடையாது.

தன்னுடைய அன்பான மகன் தன்னிடம் என்றோ ஒரு நாள் ஓடி வருவான். அவனைப் பார்த்த பின்தான் தன்னுடைய ஆவி பிரியும் என்றெல்லாம் நினைத்து இருந்தாள், அதுவே ஓர் நம்பிக்கையாக அவளுள் வளர்ந்து கொண்டு இருந்தது. செல்லம்மா முன்பைவிட இப்போது நன்றாக இளைத்து இருந்தாள். எண்ணெய்காணாத அந்தப் பரட்டைத் தலையை சொறிந்தபடி அந்த முற்றத்து வேப்ப மரத்தின் கீழ் இரண்டு கைகளையும் மடித்து வைத்தபடி படுத்து இருக்கிறாள். இரவும் பகலும் அவளுக்கு ஒன்று தான். ஏனெனில் அவள் வாழ்வு இருண்டு விட்டது. ஒரு இலை அசைந்தாலும் கூட தன் மகன் வருகிறான் என்று தலையை நிமிர்த்தி இன்னும் பார்ப்பாள். இது அவளுக்கு வழமையாகி விட்டது.

''அண்டைக்குப் பிடிச்ச பெடி பெட்டையள் ஒன்றையும் விடவில்லையாமே. பாவம் செல்லம்மாக்காவின்ரை பிள்ளை என்ன மாதிரியோ தெரியாது...'' இப்படி சிலர் அவள் காது படவே பேசிக் கொண்டனர்.

''பள்ளிக்கூடத்துக்குப் பின்னால இரண்டு பொடி கிடக்காம் கடவுளே...அண்டைக்குப் பிடிச்ச பிள்ளையள் தானோ?'' ஊரில் ஒருத்தி இப்படி ஒரு குண்டை போட்டாள். செல்லம்மாவுக்கு அங்கு ஓடிச் சென்று பார்க்கும் தைரியம் இல்லை. மாறாக மூளை விறைத்துப் பிரமை கூடியது.

''என்ர ராசா... ஒரு நாளும் அவங்களிட்டை ஆப்பிட்டிருக்கமாட்டான்... அவன் புத்திசாலி... எப்படியும் ஒரு நாள் வருவான்...'' எனக் கதறினாள். மாதங்கள் நகர்ந்து வருடங்கள் உருண்டு விட்டன.

''செல்லம்மா ஊரிலை பிடிச்ச சனத்தையெல்லாம் வெட்டிப் போட்டும், சுட்டுப் போட்டும் செம்மணியில கொண்டு போய் குழி தோண்டிப் புதைச்சிட்டாங்களாம்... இப்ப குழி

தோண்டி எலும்புக் கூடுகளாய் மீட்கினமாம்...'' என்று ஒப்பாரி வைத்தாள் இன்னொருத்தி. செல்லம்மா அவளை உற்றுப் பார்த்தாள்.

''இல்லை... இருக்காது... இருக்காது...என்னுடைய பிள்ளை ஒரு நாளைக்குக் கட்டாயம் வருவான். அம்மா எண்டுகூப்பிட்டுக் கொண்டு வருவான் என்ர செல்லம் வந்திட்டியோ எண்டு கொஞ்சுவன்... அவன் வருவான்...'' இழந்த நம்பிக்கையை மீண்டும் இமயத்திற்கு உயர்த்தி வைத்த பிரமையில் திளைத்தாள் செல்லம்மா. மகனின் நினைவுகளையே நெஞ்சு முழுவதும் நிறைத்து அதையே பிரமையாக்கி வெளியுலக நிகழ்வுகளையெல்லாம் புறந்தள்ளிவிட்டு அந்த வேப்ப மரத்தின் கீழ் படுத்திருந்தாள் செல்லம்மா.

அந்த ஊரில் திடீரென யார் யாரோ எதை எதையோ கிசுகிசுவெனப் பேசிக்கொண்டார்கள். தூரத்தே சரமாரியாக துப்பாக்கி வேட்டுக்களும், ஷெல் கூவும் சத்தங்களும் கேட்டுக் கொண்டிருந்தன. அந்த ஊரில் எஞ்சியிருந்த மக்களும் இடம் பெயர்வது போல் செல்லம்மாவுக்கு புரிந்தும் புரியாமல் இருந்தது. ஆனால் அவர் யாரைப்பற்றியும் கவலைப்படவில்லை. மிக அண்மையில் ஷெல் ஒன்று வீழ்ந்து வெடிக்கும் சத்தமும் தொடர்ந்து தெருககளில் சனங்களின் குரல்களும், அவளுக்குக் கேட்கத்தான் செய்தது... சந்தர்ப்பத்தை ஊகிக்க முடிந்தாலும் செயல்பட அவளால் முடியவில்லை.

''செல்லம்மாக்கா... ஷெல்லம்மாக்கா எலும்புங்கோ ஷெல் அடிக்கிறாங்கள்...!''

பக்கத்து வீட்டு இந்திராதான் நேரம் தவறாது சாப்பாடோ, தண்ணீரோ அவளை மிகவும் பலவந்தப்படுத்திக் கொடுப்பாள். செல்லம்மாவை உலுப்பினாள். அவளை ஒரு தடவை நிமிர்ந்து பார்த்துவிட்டு திரும்பவும் படுத்துக் கொண்டாள் செல்லம்மா.

''பெடியள் உள்ளிட்டு அடிக்கிறாங்களாம்... ஆமி ஷெல் அடிச்சபடி ஓடுகிறானாம்... எழும்புங்கோ... நாங்கள் எங்கே

யாவது... போவம்... ம்... எழும்புங்கோ'' செல்லம்மா 'மாட்டேன்' என தலையை ஆட்டினாள்.

''தம்பி வந்து என்னைத் தேடுவான். அவன் வந்தவுடனே... அவனையும் கூட்டிக் கொண்டு வாறன்.'' என்றபடி அமைதியாகப் படுத்தாள் செல்லம்மா.

''இப்ப ஊரில ஒருத்தரும் இல்ல... தனியாக் கிடந்து என்ன செய்யப் போறியள். பேசாமல் எங்களோடை வாங்கோ... நிலமை சரியாய் வந்தபிறகு திரும்பிவரலாம். அடிபாடு நடக்கேக்கை நடுவில நாங்கள் ஆப்பிடக் கூடாது... எழும்புங்கோ'' தன்னாலை இயன்றவரை செல்லம்மாவை பல வந்தப்படுத்திக் கேட்டாள் இந்திரா. செல்லம்மா அதை ஊகிக்கவோ, அக்கறையெடுக்கவோ இல்லை. மௌனமாகத் தன் குடும்பத்தோடு தன் அண்ணன் ஊருக்குப் புறப்பட்டு விட்டாள் பக்கத்து வீட்டு இந்திரா. சில மணித்தியாலங்களில் அந்த ஊரை விட்டு மக்கள் முற்றாக நகர்ந்தே விட்டனர்.

பல மாதங்கள் சென்ற பின்தான் அந்த ஊருக்குள் மக்கள்லேசாகத் தலை காட்டத் தொடங்கினர். இந்திராவும் தன் வீடு பார்ப்பதற்கு கணவனோடு சென்றிருந்தாள். செல்லம்மாவைப் பார்க்கும் ஆவலில் ஓடிப்போனாள்.

முன்னை விடவும் இப்போது செல்லம்மா இருந்த குடிசையையே காணவில்லை எனும் அளவிற்கு காடு உறைந்து கிடந்தது. தன் மகன் வரவுக்காக பிடிவாதமகாக் காத்துக் கிடந்த செல்லம்மா அவர் மகன் போலவே காணாமல் போயிருந்தாள். செல்லம்மா படுத்திருந்த வேப்ப மரத்தின் கீழ் போய் நின்றார் இந்திரா. அவளுடைய நெஞ்சு திக்கென்றது. அங்கே செல்லம்மா படுத்திருந்த அதே இடத்தில் எலும்புக் கூடு ஒன்று இருந்தது.

''ஐயோ செல்லம்மாக்கா...'' வார்த்தை வர மறுத்தது இந்திராவுக்கு. அவர் அழுதாள்.

## மழை

● பூமாதேவி

"டாங்..."

அருகிலிருந்த கூட்டுறவுச் சங்கத்தின் காவலாளி எழுப்பிய மணிச்சத்தத்தைக் கேட்டு, அரை உறக்கத்திலும் துடித்துப் பதைத்து எழுந்து கொண்டாள் பரமேசு.

''நேரம் ஒரு மணிபோல. ஒரு தட்டுக்குப்பிறகு சத்த மில்லை'' என்று எண்ணியவாறே அடுப்படிக்குள் புகுந்து ஒரு குவளைத் தண்ணீரில் வாயைக் கொப்புளித்துவிட்டு காலியாக விருந்த குடத்தையும், வாளிகளையும் பொறுக்கிக் கொண்டு அடுத்த குடியிருப்பிலுள்ள கிணற்றடியை நோக்கி நடந்தாள்.

மூன்று கிணறுகளையும் சுற்றிக் குடங்களும், கலன்களும், வாளிகளும், சனங்களும் நிறைந்து வழிந்தது. மூன்றில் ஒன்று கூடத் தெரியவில்லை. அந்தளவு நெரிசல்.

கிணறு என்றால் பெரிய தடாகம் போன்ற கட்டுக் கிணறு இல்லை. ரெண்டு முழத்துக்குத் தோண்டி அந்தக் குடியிருப்பை அமைத்துக் கொடுத்த புண்ணியவான்களின் புண்ணியத்தால் கிடைத்த 'வோக்' குகளைக் கொண்டு அமைக்கப்பட்ட குட்டிக் கிணறுகள். அந்தக் குடியிருப்புக்கு மட்டுமல்ல, பக்கத்தே பக்கத்தே இருந்த இன்னும் ரெண்டு குடியிருப்புகளின் ஜீவராசிகளுக்கும் அமுத சுரபிகளாக இருந்து கொண்டிருக்கிறது.

மூன்று கிணறுகளையும் சுற்றி புற்றீசல்களாக சனங்கள். நாலு புறமும் நீண்ட பெரிய வரிசைகள் வேறு. ஒரு வாளி மட்டுமே போடக்கூடிய அந்தக் கிணற்றுக்குள் ஒரே நேரத்தில் நான்கு வாளிகள் விழுந்து மோதிக்கொண்டிருந்தன. வாளிகளுக்கு வாயிருந்தால் வேதனை தாளாது கதறி அழுதிருக்கும். அதற்குள்ளும் ஒரு குவளையளவு தண்ணீரே வந்து கொண்டிருந்தது. உண்மையிலே அந்தக் கிணறுகள் அமுத சுரபிகளே தான். அள்ள அள்ள சொட்டுச் சொட்டாகவேனும் தண்ணீர் வந்து கொண்டேயிருந்தது.

''இந்த வெள்ளாப்போடேயே இவ்வளவு சனமெண்டால்... பேசாமல் கொஞ்சத்துக்கு உறங்கியிருக்கலாம்.''

என்று எண்ணியவளின் மனம் மறுகணமே

''உறங்க நல்ல சுகமாத்தான் இருக்கும். பிறகு உச்சி வெயிலுக்க நிக்கவேணும். இதெண்டாலும் பரவாயில்லை. குறைஞ்சது விடிய முந்தி எண்டாலும் குடத்தையும், ரெண்டு வாளிகளையும் நிரப்பிப் போடலாம். இண்டையப் பொழுதை ஒரு மாதிரித் தாக்காட்டலாம்.''

''டாங்... டாங்...''

''நேரம் ரெண்டு மணிபோல. இன்னும் வரிசையில ஒரு அடிகூட நகரேல்ல.'' என்று நினைத்தவாறு வானத்தை அண்ணாந்து பார்த்த பரமேசு திகைத்துப் போனாள். பூப்பூவாய் பூத்திருந்த கோடிக்கணக்கான வெள்ளிக் கூட்டங்களில் ஒன்றைத் தானும் காணவில்லை.

முகில் கூட்டங்கள் ஒன்று சேர்ந்து பூமித்தாயைக் குளிர்விக்கப் போகும் பூரிப்பில் வீசிய ஊதல் காற்று மேனியைத் தடவிச் சென்றது. மின்னல் ஒன்று கண்களைக் குருடாக்கி மறைய, கிழக்கு மூலையில் மின்னல் கீற்றுக்கள் வந்து வந்து போயின.

''அப்பனே முருகா...''

இரு கைகளையும் குவித்து எங்கோ தொலைவில் ஓடுகளால் வேயப்பட்டு, கருங் கற்களால் சுவர் எழுப்பி குளிரோ, கூகலோ அண்டாத இடத்தில் குடியிருக்கும் முருகனை நினைத்து வேண்டியவளின் மனக் கண்ணுக்குள், வீட்டில் நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்த கணவனும், அவனுடன் சுருண்டு கிடக்கும் குழந்தைகளும், உள்ளிருந்தே வானம் பார்க்கும் படியான கூரையும் வந்து போனது.

** ** **

பரமேசுவும் பரமுவும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள். அவர்களின் திருமணம் பெரியவர்கள் பேசிச் செய்து வைத்த திருமணம்தான். என்றாலும் மனமொத்த காதலர்களாக வாழ்ந்தார்கள். அவர்களின் வாழ்க்கைப் பூங்காவில் பூத்த மலர்களாக மூன்று மழலைகள். மூத்தது ரெண்டும் ஆணாகவே பிறக்க, நேராத நேர்த்தியில்லை போகாத கோயில்களில்லை எனுமளவுக்குத் தவமிருந்து மூன்றாவது பெண்ணாகப் பிறந்ததில் பூரித்துப் போனார்கள். பரமேசுவுக்குப் பெற்றோர் கொடுத்த சீதனமான வீடுவளவும், பரமுவின் முதுசக் காணியும் ஒரே வேலியாதலால் இரண்டையும் சேர்த்து பெரிய அளவில் பயிர் செய்து வந்தான் பரமு.

இராணுவ ஆக்கிரமிப்புக்குள் சொந்த மண்ணான மயிலிட்டி பறிபோக, தீவகம் நோக்கி இடம்பெயர்ந்து குத்தகைக்கு காணியொடுத்து, பயிரிட்டு, முழுப்பயனையும் பெறாமலேயே அங்கிருந்தும் இடம்பெயர்த்து, கோண்டாவிலுக்கு வந்து, பின் அங்கிருந்தும் விரட்டியடிக்கப்பட்டு வன்னிக்கு வந்தார்கள். தொடர்ந்த இடப்பெயர்வுகள் ஆட்களை மட்டுமல்ல கையிலிருந்த பொருள் பண்டங்களையும் உருக்கிக் கொண்டது. நாச்சிக்குடாவில் நிறுவனம் ஒன்று அமைத்துக் கொடுத்த வீடு ஒன்று கிடைத்தாலும், வயிற்றுப் பாட்டிற்கு வேண்டுமே? கிடைக்கும் கூலி வேலைகளுக்குப் போவான். எதுவும் கிடைக்காவிட்டால் விறகு வெட்டப் போவான். எப்படியோ பட்டினியென்று இல்லாமல் காலம் போய்க் கொண்டிருந்தது.

ரெண்டாவது மாரியோடு வீடும் வேய்கின்ற முறை. ஒவ்வொரு மாரிக்குமே கிடுகு பேய் விலை விற்கும். வீடு போட்டுத் தந்த நிறுவனங்களின் வாசலில் பரமுவும் பரமேசுவும் ஆள்மாறி ஆள்நிண்டதுதான்மிச்சம். ஒரு பலனுமில்லை. நாளாந்தம் வரும் ஐம்பதிலும் நூறிலும் என்னதான் செய்ய முடியும். மழை எவரைப் பற்றியும் கவலைப்படாமல் தன் பணியிலேயே கண்ணாகவிருந்தது.

மழைச்சாரல்களும் குளிரும் சேர்ந்து பரமேசின் செல்லமகளுக்கு காச்சல் கண்டு... மலேரியாவாக்கி... மூளை மலேரியாவாக்கி... அந்தப் பிஞ்சை எத்த மருந்தாலும் குணப்படுத்த முடியவில்லை. கண் திறந்து கொடுத்த தெய்வங்களே கண்களை இறுக மூடிக்கொண்டு விட்டது. பின் இவர்களால் என்ன செய்ய முடியும்.

''என்ர குஞ்சு... என்ர குஞ்சு...'' என்றபடியே மூலையில் முடங்கிக் கொண்டவளை தனது கவலைகளை விழுங்கிக் கொண்டு, தேற்றி நடமாட வைத்தவன் பரமுதான்.

இது நடந்து ரெண்டு ஆண்டுகள் ஓடி விட்டாலும், பரமேசின் மனதைவிட்டு ஓடவா போகிறது?

இப்போது மீண்டுமொரு வேய்ச்சல் முறை. வீட்டுக்குள் இருந்து கொண்டே மூத்தவர்கள் இருவரும் போட்டி போட்டுக் கொண்டு வெள்ளிகளை எண்ணுவதற்கு முயற்சி செய்வதைப் பார்க்கும் போது வேடிக்கையாகவும் இருக்கும். அதே நேரம் இனந் தெரியாத துக்கம் புரண்டு நெஞ்சை அடைக்கும்.

★★ ★★ ★★

பரமேசு துடித்துப் போனாள். ரெண்டு நாளாக காச்ச லில் சுருண்டு கிடக்கும் இளையவனும், எந்தக் கவலையுமே யின்றி உறங்கும் மூத்தவனும், பகற்பொழுது முழுவதும் கட்டை களைப் பிளப்பதில் போராடி, அம்பாரமாகக் கட்டிய விறகு டன் வீதி வீதியாக அலைந்து களைத்து வந்துஉறங்கிக் கொண்டி ருக்கும் கணவனும் ஈக்குகள் மட்டுமே எஞ்சியுள்ள கூரையும் மாறி மாறி மனதுக்குள் வந்து போக தன் நினைவிலேயே மூழ்கிப் போனவள் கால்கள் நகர்ந்ததை அறியவில்லை.

''இந்தாங்கோ பரமேசக்கா...''

குரல் கேட்டு நிமிர்ந்தாள். வரிசையில் அவளுக்கு முன் நின்ற சரசு தண்ணீர் எடுத்து முடித்து வாளியை நீட்டிக் கொண் டிருந்தாள்.

வாளியை வாங்கி ஒற்றி ஒற்றி தண்ணீர் வடிகட்டிக் கொண்டு, அடிக்கொருதரம் அண்ணாந்து அண்ணாந்து வானத் தையும் பார்த்துக் கொண்டாள். கொஞ்சம் கொஞ்சமாக முகிற் கூட்டங்கள் கலைந்து அடிவானில் வெள்ளியொன்று எட்டிப் பார்த்துக் கண் சிமிட்டிக் கொண்டிருந்தது. விடி வெள்ளி போலும். வாளியில் வந்து கொண்டிருந்த அரைக் குவளைக்கும் குறைவான தண்ணீரை வடிகட்டிக் கொண்டிருந் தாள் அவள்.

# அம்மா

● தாமரைச் செல்வி

தரையில் அமர்ந்து கைகளைக் கூப்பி கண்கள் மூடிப் பிரார்த்தனை செய்கின்ற இந்த நிமிடங்களில் மனம் என்ன மாய்க் கரைந்து போகிறது. எத்தனையோ வருடங்களாக பட்டு வந்த கவலைகள் கூட மறந்து போகிறது. இந்த வினாடி ஆண்டவனின் காலடியே சரணம் என்ற நினைவில் தற்காலிக மாய் ஒரு ஆறுதல், நாடி நரம்பெல்லாம் ஊடுருவி நிற்கிறது.

அறுபத்தைந்து வருசங்களாய் வாழ்ந்த இந்த வாழ்க் கைக்கு ஏதாவது அர்த்தம் இருக்கிறதா? இதைத் தீர்மானிப் பது எது? அனுபவித்த துன்பங்களை மறக்க வேண்டுமெனில் இந்த உயிர் போக வேண்டும். அது எப்போது?

கடவுளே! எப்போது அழைத்துக் கொள்வாய்...

மூடிய கண்களிலிருந்து பொலபொலவென்று கண்ணீர் வழிந்தது.

மனம் நிலை கொள்ளாமல் பரிதவித்தது.

இயலாமை அதிக துக்கத்தைத் தந்தது.

அம்மா மெதுவாய்க் கண்களைத் திறந்து பார்த்தாள். மெலிந்த உடம்பு, வரி வரியாய் பதிந்து போயிருந்த முகத்தின் சுருக்கங்கள். முகத்திலும் கண்களிலும் தேங்கி நின்ற துயரத்தின் சாயல்கள். இன்னும் பத்து வயதை அதிகமாய் காட்டிய தோற்றம்.

கிடுகுகளால் வேயப்பட்ட அந்த நீளமான மண்டபத்தில் ஆண்களும் பெண்களுமாய் எண்பத்திரெண்டு முதியவர்கள் அமர்ந்திருந்தார்கள். வாழ்வின் எல்லைவரை வந்து நிற்பவர்கள். சுருங்கிப்போன முகங்களும், வரண்டு போன மனங்களுமாக... எல்லோர்மனமும் உலைக்களமாய் கொதிக்கின்ற நேரம் இது. அநேகமாய் எல்லோருமே இப்போது உள்ளுக்குள் அழுதுகொண்டுதான் இருப்பார்கள். இவர்கள் ஒவ்வொருவருக்குள்ளும் ஒவ்வொரு சோகம் இருக்கிறது.

பெற்ற பிள்ளைகள் கவனிக்காமல் கை கழுவிவிட்டு விட்டார்களே என்று தினம் தினம் வெந்து கொண்டிருப்பவர்கள். முன் வரிசையில் இடது பக்க மூலையில் கண்மூடி அமர்ந்திருக்கும் அந்த உயரமான கிழவருக்கு மனநிலை கூட லேசாய்தழும்பி விட்டது. ஏழு பிள்ளைகளைப் பெற்றும் அனாதையாய்ப் போன அதிர்ச்சியிலிருந்து அவரால் மீளமுடியவில்லை. நான்கு பிள்ளைகள் வெளிநாடுகளில் இருந்தும் திரும்பியும் பார்ப்பதில்லை என்ற அதிர்ச்சி...

இங்குள்ள ஒவ்வொருவரும் பாரிய துன்பத்தை தமக்குள் சுமந்து கொண்டு ஒருவரை ஒருவர் விசாரித்துக் கொள்வார்கள்.

''நீங்கள் எந்த ஊர் அம்மா''

''அச்சுவேலி''

''இங்க இடம் பெயர்ந்து வந்தனீங்களோ...''

''ஓம். தொண்ணூற்று ஐஞ்சு இடப்பெயர்வோட வன்னிக்கு வந்தனான்.''

''உங்களுக்கு மனிசன் இல்லையே அம்மா, பிள்ளையளும் இல்லையே...'' இந்தக் கேள்விகள் மனதை சுள்ளென்று தாக்கும். இந்த விசாரிப்புக்களில் வஞ்சகம் சூது இருக்காது. மிகுதிக் காலம்வரை ஒரே இடத்தில் வாழப்போகும் காரணத்தால் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளும் ஆர்வம்... ஒரு வாஞ்சை தென்படும். அவ்வளவுதான், தோழமையோடு ஒலிக்கும் அந்தக் குரல்கள், பல தடவை மனதைத் தளும்ப வைத்துவிடும்.

நாவிற்குள் பூட்டுப் போட்டு அடைத்தாற் போல ஒரு இறுக்கம் வந்துவிடும். மௌனமாய் இருப்பாள்.

''ஏனம்மா உங்களுக்கு மனிசன் இல்லையோ. பிள்ளையும் இல்லையோ'' இல்லையென்று தலை அசைக்கும் போது தாங்க முடியாத துயரம் வந்து தொண்டைக்குள் அடைக்கும்.

ஒன்று பொய், ஒன்று உண்மை. ஏன் அப்படிச் சொல்லத் தோன்றியது. அன்றைக்கு இரவு நித்திரையே வராது. இங்கிருக்கும் மற்றப் பெண்கள் ''நாலு பிள்ளை பெத்தன் கஷ்டப்பட்டு வளர்த்தன். நடுத்தெருவில விட்டிட்டு போயிட்டாங்களே'' என்று சொல்லி அழும் போது அனுதாபம் ஏற்படும். இதே பெண்கள் ''பாழ்படுவான் கட்டையில போவான் என்னை நிம்மதியாய் இருக்க விட்டானே...'' என்று பொருமும் போது தனது துயரம் புதுப்பிக்கப்பட்டது போல உணர்வாள். அம்மாவால் இப்படியெல்லாம் வாய்விட்டு திட்ட முடியாது. ஆனாலும் மனம் எல்லாம் ரணமாய்கீறல் கீறலாய் ஆகிப் போவது என்னமோ உண்மைதான்.

அறியாத வயதில் நினைவு தெரியத் தொடங்கிய நாட்களிலிருந்தே மனம் வதைபடத் தொடங்கி விட்டது. குடித்து விட்டு அப்பு வந்து அம்மாவுக்கு அடிப்பதையும் உதைப்பதையும் பார்த்துப் பார்த்து வளர்ந்தவள் அவள். இருபது வயதில் ஒருவனுக்கு வாழ்க்கைப்பட்டுப்போனாள்... அவன் அப்புவை விட மோசமாய் இருந்தான். அவளின் சந்தோஷங்கள் எல்லாவற்றையும் மிதித்துத் துவைத்து துவம்சம் பண்ணிவிட்டான். இந்த மெலிந்த தேகம் எத்தனை அடி உதைகளைத் தாங்கியிருக்கிறது. அவனுக்குள் ஏதோ ஒரு மிருகம்தான் குடிகொண்டிருக்க வேண்டும். இல்லாவிட்டால் அவனால் அப்படி இருந்திருக்க முடியாது.

பத்து வருடத்துக்கு முன்பு அவனுக்கு மரணம் நேர்ந்த போது அழவே தோன்றவில்லை. அப்பாடா என்ற ஆறுதல் தான் மனம் எல்லாம் நிரம்பியிருந்தது. இந்த நினைவு எவ்வளவு குரூரமானது. ஆனாலும் அம்மாவால் அப்படித் தான் நிம்மதியடைய முடிந்தது. ஒருவரின் மரணம் இன்னொருவருக்கு நிம்மதி சுரும் என்றால் அவன் ஏன் அந்த வாழ்க்கையை வாழ்ந்தான்... யாருக்குமே நல்லவனாய் இருக்க முடியாமல் ஏன் போனான்...

அவனைப் பாடையில் வைத்து சுடலைக்கு தூக்கிக் கொண்டு போன போது மெல்லிய சந்தோஷம்கூட அலையலையாய் பரவியதே... ரகசியமாய் அந்தச் சந்தோஷத்தை அனுபவித்துக் கொண்டே கடவுளுக்கு நன்றியும் சொல்லத் தோன்றியதே... பொட்டையும் பூவையும் துறந்தது பெரிய விஷயமாய்படவில்லை. முப்பத்தஞ்சு வருஷமாய் போட்டு வதைத்தானே என்ற ஆத்திரம்தான் இன்று வரை அடங்கவில்லை. வாயில்வைத்த சோற்றை விழுங்க விடாமல் என்ன பாடு படுத்தியிருப்பான். வீடே நரகமாய்த்தான் இருந்தது. ஒரே மகனைப் பெற்றாள். அந்தப் பிள்ளைக்காக அத்தனை துன்பங்களையும் தாங்கிக் கொண்டாள்.

தகப்பனின் பொறுப்பில்லாத் தனம் கொடூரத்தனம் எதுவும் அவன் மீது படிந்து விடக்கூடாது என்று கவனமாய் வளர்த்தாள். நெஞ்சு வருத்தக்காரனாகவும், வல்லமையற்ற அப்பாவியாகவும் தான் அவன் வளர்ந்து வந்தான்.

பத்து மாதம் சுமந்து பெற்றாலும் கண்ணுக்குள் வைத்து பொத்திப் பொத்தி வளர்த்த பிள்ளை...

திடுமென கண்கள் பொங்கி வழிந்தது.

சேலைத் தலைப்பால் கண்களைத் துடைத்துக் கொண்டாள். இந்தப் பிரார்த்தனை நேரம் எவரும் அழலாம். யாரும் காரணம் கேட்க மாட்டார்கள்.

இந்த முதியோர் இல்லத்து வாழ்வு அமைதியானது.

நேரம் தவறாத செயற்பாடுகளுடன் இயல்பாக இருந்தது.

அதிகாலையில் பக்கத்தில் உள்ள ஐயனார் கோவிலிலிருந்து கேட்கும் மணியோசை மனதுக்குள் இதம். பின்னேரப் பூஜைக்கு காலாற நடந்து போய் கும்பிட்டு வரலாம்.

நேரத்துக்கு நேரம் உணவு. எங்கெங்கோ பிறந்து வாழ்ந்து விட்டு இந்த நிலையத்தில் இப்போது ஒன்றாக வாழும் வாழ்வு... அதில் ஏற்படுகின்ற நேசம்... தமது பழைய வாழ்வை அசைபோட கிடைத்திருக்கின்ற அவகாசம்... நோய் வந்தால் தமக்குள்ளேயே ஒருவரை ஒருவர் பராமரித்துக் கொள்ளும் வாஞ்சை...

இது ஒரு புதிய உலகம். ஓடிக்களைத்த பின் நிழல் பரப்பி நிற்கும் ஆலமரத்தின் அடியில் அமர்ந்து கொண்டு மூச்சு வாங்கும் ஆறுதல்.

தேவை ஏற்படும் போதெல்லாம் பெற்ற பிள்ளை போல் வந்து எல்லோரையும் அன்போடு விசாரித்து சிகிச்சை செய்யும் மருத்துவர்.

எல்லாவற்றுக்கும் மேலாக இந்த நிர்வாகத்தை ஏற்று நடத்தி அவர்கள் அனைவரையும் அரவணைத்துப் போகும் கருணை உள்ளம் கொண்ட அந்தப் பெரியவர். பெரியவரிடம் தங்கள் கவலைகளைச் சொல்லி ஆறுதல் தேடும் இந்த முதியவர் கள்.

வாழ்க்கை இத்தனை பேரின் மனங்களையும் கோரமாக குதறிப் போட்டிருக்கிறது. அமைதியடைய முடியாமல் வாய் விட்டு கதறி அழுபவர்கள் தான் அதிகம்.

பிள்ளைகளினால் கைவிடப்பட்ட நிலமை எத்தனை மனப்பாதிப்பை தருகிறது என்பது இங்குதான் முழுமையா கத் தெரிகிறது. அந்த வழுக்கைத் தலைக் கிழவர் எத்தனை நாள் வாய்விட்டு கதறி அழுதிருப்பார்.

''நானும் மனிசியுமாய் பத்துப் பிள்ளையளைப்பெத்து வளர்த்தோம், ஆளாக்கிவிட்டோம். அந்தப் பத்துப் பிள்ளைய ளும் சேர்ந்து எங்கள் ரெண்டு பேரையும் பார்க்க ஏலாமல் விட்டிட்டுதுகள்.'' இது சில இடங்களில்நடக்கின்ற கதைதான். ஆனால் இதற்கு இன்னொரு பக்கமும் இருக்கிறது... அம்மா வைப் பொறுத்தவரை அந்த இன்னொரு பக்கம் தான் வேதனை தருவது.

இங்குள்ளவர்களில் சிலர் பிள்ளைகள் கைவிட்ட நிலை யில் அப்பாடா என்று ஒரு நிம்மதியுடன் இந்த இல்லத்தில் இருக்கக் கூடும்.

அம்மாவினால் அப்படி இருக்க முடியவில்லை.

முப்பத்தஞ்சு வயதுப் பிள்ளையை இன்னமும் குழந்தை யாகவே நினைத்துப் பேதலிக்கிறது மனம்.

பிரார்த்தனை முடிந்து எழுந்து வெளியே நடக்கும் போது மிகவும் சோர்வாக இருந்தது.

''அம்மா நல்ல வேளை உங்களுக்குப் பிள்ளை இல்லை.''

''நான் ரெண்டு பெத்தும் இல்லாதது மாதிரி, ரெண்டு ஆம்பிளைப் பிள்ளையளும் மனிசி மாரின்ர சொல்லைக்கேட்டு என்னைப் பாரம் எண்டு தூக்கி எறிஞ்சிட்டாங்கள், இந்த நிழலும் இல்லாட்டி நாயாய் அலைஞ்சிருப்பன்.''

கண்கள் சுருங்கிப் பார்வை குறைந்த அந்த எண்பது வயது முதிய பெண் அழுது கொண்டே போனாள்.

அம்மா மௌனமாய் நடந்தாள். கால்களில் நடுக்கம், இடுப்பிலிருந்து கால்வரை வலிக்கிறது. கொஞ்ச நாட்களாகவே இப்படித்தான். கண் பார்வையும் மங்கி வருகிறது. இங்கு வந்து கண் பரிசோதித்து போனவர்கள் அடுத்த மாதமளவில் கண்ணாடி கொண்டு வந்து தரக்கூடும்.

முற்றமெல்லாம் நிழல் பரப்பி நிற்கின்ற மரங்கள் தென்னைதள்...

ஐந்து வருடங்களுக்கு முன் காடாக இருந்த நிலம். நிர்வாகத்தினரது உழைப்பினால் சோலையாக மலர்ந்திருக்கிறது. அன்று அந்த இல்லத்துக்கு தமது குழந்தையின் பிறந்த நாளைக் கொண்டாட ஒரு குடும்பம் வரப்போகிறது. மதியம் இவர்களின் சாப்பாடு எல்லாம் அவர்கள் பொறுப்பு. வடை பாயாசம் இருக்கும். தாங்களும் இவர்களுடன் இருந்து சாப்பிடுவார்கள்.

இப்போதெல்லாம் நிறையப்பேர் இப்படித் தங்கள் குழந்தைகளின் பிறந்த நாளைக் கொண்டாடவும் தாய், தந்தை, அன்புக்குரியவர்களின் சிரார்த்த தினங்களை இவர்களுக்கு சாப்பாடு தந்து நினைவு கூரவும் இங்கு வருகிறார்கள்.

அப்படி வருபவர்களைப் பார்க்க மனதுக்குக் கொஞ்சம் ஆறுதலாகவும், சந்தோஷமாகவும் இருக்கும். கை பிடித்து அன்போடு விசாரித்து அவர்கள் கதைக்கும் போது சிலர் நெகிழ்ந்து அழுதுவிடுவதுமுண்டு. வாழ்வின் கடைசி நாட்களில் நின்று கொண்டு அன்புக்கும், தோழமைக்கும் ஏங்குகின்ற மனங்கள்... அம்மா அமைதியாக எல்லோரையும் பார்த்துக் கொண்டிருப்பாள்.

அன்றைய மதியச் சமையலுக்கான ஆயத்தங்கள் நடந்து கொண்டிருந்தன. மற்றவர்களுடன் சேர்ந்து அம்மாவும் தன்னால் முடிந்த உதவிகளை செய்து கொடுத்தாள்.

பதினொரு மணிக்கு நான்கு வயதுக் குழந்தையுடன் பெற்றோர் உறவினருமாக ஐந்து பேர் வந்து இறங்கினார்கள்.

குழந்தை எல்லோருக்கும் வணக்கம் சொல்லியது.

என்ரபேர் கயல்விழி. உங்கட பேர் என்ன என்று ஒவ்வொருவரையும் விசாரித்தது. எல்லோருக்கும் இனிப்புக் கொடுத்தது. பாட்டுப் பாடிக் காட்டியது.

இறுக்கம் தளர்ந்து இனிமையாய் சூழ்நிலை மாறியது.

அம்மாவுக்கு பிள்ளையின் நினைவு வந்தது.

இப்போது என்ன செய்து கொண்டிருப்பான்.

காட்டில் விறகுவெட்டிக் கட்டிக்கொண்டு தெருத் தெருவாய் விற்கத் திரிவானோ...

அல்லது ஆஸ்பத்திரியில்கிளினிக் வரிசையில் போய் நிற்பானோ... மனைவிக்கும் நான்கு பிள்ளைகளுக்கும் சாப்பாட்டுக்கு என்னவழி செய்வான்.

பத்து வருசங்களாய் மகனோடு இருந்து அவன் பட்ட கஷ்டத்தை பார்த்துப் பார்த்து கலங்கியிருக்கிறாள். இடப்பெயர்வினாலும் நோய் நொடியாலும் அவர்கள் பட்டபாடு.

அச்சுவேலியிலிருந்து ஒவ்வொரு இடமாய் அலைந்து வன்னிவரை உயிருக்குப் பயந்து ஓடி வந்த அவலம் சாகும் வரை மறக்க இயலாது.

நெஞ்சு வருத்தம் காரணமாய் கிளினிக்குக்கு போய் வருதலே அவனுக்கு வாழ்வாயிற்று. கூலி வேலைக்குக் கூடப் போக முடியவில்லை. விறகு வெட்டிக் கட்டி ஒருநாள் விற்றால் ஐந்து நாட்கள் படுக்கையில் கிடப்பான்.

பொருளாதாரத் தடையின் காரணமாக எழுந்த துன்பங் களை அந்தக் குடும்பமும் அனுபவித்தது. வீடு வாசல் சொத்து இழந்து வன்னியின் காட்டுக்கரையில் ஒரு குடிசையில் வயிற் றுக் கொதிப்போடு அவர்கள் வாழ்க்கை இருந்தது. அவர்கள் குடித்த ஒருநேரக் கஞ்சியில் அம்மாவுக்கும் ஒரு வாய் கிடைத் தது. சொந்த வீட்டில் இருந்தபோது இப்படிப் பட்டினி கிடக்க நேர்ந்ததில்லை·

இந்த ஆக்கிரமிப்புப் போரின்முகம் எத்தனை குரூரமானது வாழ்நாளின் எந்தக் காலத்திலும் சந்தோஷத்தை அனுபவிக்கா மலேயே அறுபத்தி ஐந்து வயது வரை வாழ்ந்தாகி விட்டது.

''அம்மா! உங்களுக்கும் ஒருதரும் இல்லையோ...''

அந்தக் குழந்தையின் தாய் கைபிடித்து பரிவோடு கேட்க, அம்மா நிமிர்ந்து பார்த்தாள்.

இல்லைஎன்றுதலையசைக்கும் போது துக்கம்பொங்கிவெடித்தது.

அம்மாவைப் பார்த்துக் கொள்ள வழியற்று அவளாவது மூன்று வேளையும் சாப்பிட்டுக் கொண்டிருக்கட்டும் என்று நினைத்து இங்கே கொண்டு வந்து விட்டுப் போன தன் பிள்ளையை யாரும் அம்மாவைக் கவனிக்காமல் கைவிட்டு விட்டான் என்று சொல்லி விடக் கூடாது.

அன்றைய மதிய உணவு வாடை பாயாசத்தோடு விசேட மாக இருந்தது. எடுத்து வாயில் வைக்க அம்மாவுக்கு அழுகை வந்தது.

அங்க என்ர குஞ்சுகள் என்ன சாப்பிட்டுதுகளோ...

# மழை கால இரவொன்றில்....

• தமிழினி

மாரி மழை விட்டு விட்டுப் பெய்து கொண்டிருந்தது. விட்ட இடைவெளிகளிலும் பஞ்சுப்பொதி போல தூவானம் சிந்திக்கொண்டிருந்தது. அந்த இடம் பரந்த வயல் வெளியாக இருந்திருக்க வேண்டும். ஆனால் வரம்புகள் இருந்தசிலமனையே காணவில்லை. புல்லும், நாயுண்ணிப்பற்றைகளும் தான் மண்டிப்போயிருந்தன. இந்தப்புளியம் கொட்டையளவு நுளம்புகள் கூட இங்கேதான் விளைந்திருக்கவேண்டும். சரக்கென்று தம் ஊசிகளைப்பாச்சி 'சர்'ரென்று இரத்தத்தை உறிஞ்சி எடுக்கும் இந்த நுளம்புகளின் லாவகம் இருக்கிறதே மிக அற்புதமானது. நீண்டகாலமாக மனிதர்களின் வாடையே இல்லாதிருந்த இடத்தில் இன்று தமக்கு நல்ல வேட்டை கிடைத்த புளுகத்தில் வயிறுமுட்ட இரத்தம் குடித்து மயங்கி இறந்து

போய்க்கொண்டிருந்தன. தவளைகளின் 'சிம்பனி' இசைக் கேற்ப குளிர் பற்களை மட்டுமல்ல விலா என்புகளையும் கிடுக் கிக் கொண்டிருந்தது.

நெஞ்சோடு இறுக்கிக் கட்டியிருந்த ரவைத்தாங்கி, காது மூடிய சாக்குத் தொப்பி, சில்லிட்டுப்போயிருந்த துப்பாக்கி நானும் அவளும் அருகருகே குந்திக் கொண்டிருந்தோம். படுப் பதற்காக இழுத்துப்போட்டிருந்த பின்னப்படாத தென்னோ லையின் நடுத்தண்டு என்கால்களை அழுத்தியது. சற்று விலத்தி இருந்துகொண்டேன். மாமரத்திலிருந்து இடைக்கிடை நீர்த்துளி கள் பெரிதாகச் சிந்தின. எங்களைப்போலவே ஆங்காங்கு பலரும், சிலருமாக சத்தமெழாதவாறு கதைப்பதும், அடக்கிக் கொண்டு சிரிப்பதும், மெல்லிய குறட்டையோடு உறங்குவது மாக இருந்தனர். அது வழமையான மழைக்கால இரவொன் றைப் போலவே எம்மீது கவிந்திருந்தது. நுளம்புகளும், தவளை களும், மழையும், அந்த இரவும், நாங்களும் எந்தச்சுரணை யும் இல்லாமல் இரண்டறக் கலந்திருந்தோம்.

ஏதேதோ எண்ணக்கிளர்ச்சிகளுக்கிடையே அமிழ்ந்து போயிருந்ததால் ஆழமான மௌனம் எம்மிடையே படிந்து போயிருந்தது. ஆயினும் பார்வைகள் ஒரு திசை நோக்கியே குவிந்திருந்தன. வானத்தில் விசிறிய வெளிச்சப் பிரவாகத்துடன் சற்றுத்தூரத்தில் அந்த இடம் கர்வத்திரை போர்த்தியிருப்பது போலத்தென்பட்டது.

இடையிடையே சுள்ளென்று சுழன்றடிக்கும் வெளிச்சப் பொட்டு, சடசடத்து ஓயும் வேட்டுக்கள், கும்மென்று நெஞ் சுக்குள் இறங்கி இடித்துக்கொண்டு புறப்பட்டுச் செல்லும் கூவல், மீண்டும் பயங்கர அமைதி.

அவள் மெல்ல என் கைகளைப்பற்றி அழுத்தினாள். 'என்ன' என்பதாய் என்பார்வை சென்றது.

''இன்னும் கொஞ்ச நேரத்துல இந்தத் திமிர் பிடிச்ச வெளிச்சம் இருக்காது'' கிசுகிசுப்பாக வெளிப்பட்ட அந்தக்

குரலின் கூர்மை எனக்குள் இறங்கியது.

இருவரும் கைகளை இன்னும் இறுக்கமாக அழுத்திக் கொண்டோம். அந்த வெளிச்சப் பிரதேசத்தில் இருந்து இன்னும் மீளாத அவளின் விழிகள் கொள்ளிக்கட்டைகளாய் ஜொலித்துக்கொண்டிருந்தன. எதனாலோ திடீரென அலைப் புற்ற மாமரக்கொப்பிலிருந்து அதிகமாக மழைநீர் சிந்தியது. துப்பாக்கி நனைந்து விடாமல் அணைத்துக் கொண்டேன். இறக்கைகளால் பயங்கர ஒலி எழுப்பியவாறு பறவையொன்று சட்டெனப் பறந்து சென்றது. அது ஒரு குருட்டு வெளவாலா கத்தான் இருக்கும்.

அந்தப் புளியம்கொட்டை நுளம்பொன்று தனது ஊசியை எனது நெற்றிப்பொட்டில் பாய்ச்சியது. வலக்கரத்தால் அதை அப் படியே நசித்து விழுத்தினேன். ''கடவுளே'' எனது மூக்கிருந்த இடத்தில் ஒரு ஐஸ்கட்டி இருக்கிறதோ! என்றாலும் பரவா யில்லை. இரவுச் சாப்பாடாக வந்த இறைச்சிக்கறியின் வாசம் விரல்களில் இன்னும் மீதமிருப்பதை முகர்ந்தது மூக்கு.

அவளானால் ஒரு சிலையைப்போல அசைவற்று இருந் தாள். ஏதேதோ எண்ணச்சுழல்களுக்குள் அமிழ்ந்திருப்பது போலவும், என்னுடன் நிறையப் பேசத் தயாராகிக்கொண்டிருப் பது போலவும் தெரிந்தது. நான் மௌனமாகக் காத்திருந்தேன். இது எங்களுக்குள் வழமை. எப்போதுமே அவள் அதிகம் பேசு பவளல்ல· அர்த்தமும், அழுத்தமுமாய் குரலெழும்பாமல் கதை ப்பாள். குருவின் முன்னால் இருக்கும் சீடனைப்போல அவளின் கண்களைப்பார்த்தவாறோ அல்லது ஏதோவொரு சூனியத்தை வெறித்தவாறோ கேட்டுகொண்டிருப்பேன்· இடைமறித்துக் கதைக்கும் சந்தர்ப்பங்கள் மிகக்குறைவாகவும், அல்லது தேவை யில்லாமலும் கூட இருக்கும். எனக்குள்ளே எழும் என்ன அலை வரிசைகளில் அவளின் வார்த்தைகள் ஒலித்துக்கொண்டிருப் பதால்·

அர்த்தமே இல்லாத அலட்டல் கதைகளைப்பேசி பெருங் குரலெடுத்து சிரித்து கும்மாளமிடும் பொழுதுகளில் மாறாத சிரி

ப்போடு என் பகிடிகளை இரசித்துச் சகித்துக் கொண்டிருப்பாள். எப்படியிருப்பினும் நாமிருவரும் கதைத்துச் சிரித்து விவாதித்த பொழுதுகளை விட, கைளைப் பிணைந்தவாறு எதுவுமே பேசாமல் லயித்திருந்த பொழுதுகளே அதிகம்.

சமர்க்களத்துக்குத் தயாராகிவிட்ட இந்த இறுதி இரவில், அணிகளெல்லாம் தமது பயிற்சிகளை நிறைவு செய்து போர்ப் பயணத்துக்குத் தயாராகி ஓய்வெடுக்கும் இறுதிமணித்துளிகள் எங்களுக்குள்ளும் பரிமாறிக்கொள்ள ஆயிரமாயிரம் விடயங் கள் இருப்பதாகப்பட்டது. இப்போதும் அவளே பேசினாள்.

''இதுவொரு பயங்கரமான சண்டையாகத்தான் இருக் கப் போகுது. இப்ப அமைதியாகவிருக்கின்ற இந்த ஊரின் பேர் நாளைக்கு தலைப்புச்செய்திகளில் அடிபடப் போகுது. நிச்சயாகச் சொல்லுறன் நாங்கதான் வெல்லுவம்.''

அவளையே பார்த்தவாறிருந்தேன். சட்டெனத் திரும்பி என் விழிகளுக்குள் பார்த்தாள்.

''உனக்குத் தெரியுமா இந்த ஊர் நெல்லு விளைச்சலுக் குப்பேர் போனது. எங்கட அப்புச்சிக்கு மொட்டக்கறுப்பன் அரிசியெண்டா தனிவிருப்பம். பஸ் ஏறி ரயிலேறி வந்துமூட்டை மூட்டையா கட்டிக்கொண்டுவருவார். நல்ல நிலவுநாளில மொட் டக்கறுப்பன் அரிசிச் சோத்தோட நாலஞ்சு கறிகளும் சேர்த்து அப்பாச்சி கவளமுருட்டித் தருவா. வீட்டுப் பிள்ளையள், பெரி யாக்கள் எல்லோரும் பொரிச்சமோர் மிளகாயும் கடிச்சுக் கொண்டு கண்ணால தண்ணி வரவரச் சாப்பிடுவம். கள்ளுக் குடிச்ச மயக்கத்தோட அப்புச்சி சாய்மனேக்க படுத்துக்கிடந்து சுருட்டடிச்சுக்கொண்டிருப்பார்.''

இருட்டுக்குள் சரியாகத் தெரியாவிட்டாலும் அவள் விழிக ளில்இப்போதுநீர்த்திரையிட்டிருக்குமென்பதை உணரமுடிந்தது.

இந்த வயல்களை நம்பிவாழ்ந்த மனிதர்கள் எங்கெல் லாமோ சிதைந்து, தொலைந்து விட்டார்கள். அனாதையாகிவி ட்ட வயல்களின்உறவெல்லாம் சடைத்து வளர்ந்துவிட்ட பூவரசு

வேலிகளும், இந்தத் தவளைகளும், நுளம்புகளும், விசப்பாம்புக ளும் தான். எனக்குள் எதுவோ உருண்டு திரண்டு வயிறு தொண் டையெல்லாம் அடைத்து நெஞ்சுக்குள் எரிந்தது. அவளுக்கும் அப்படித்தான் இருந்திருக்க வேண்டும். வெளியில் குளிரும்,உள்ளே நெருப்புமாக நிமிடங்களைக் கடத்திக்கொண்டு காத்திருந்தோம். புயலுக்கு முந்திய அமைதி அங்கே உறைந்திரு ந்தது. அதைக்கிழித்தவாறுஅவளின் 'குரல் மீண்டும் இறங்கியது.

''நாங்கள் சண்டைக்கு வெளிக்கிடுறதுக்கு முதல் நாள் ஒரு வீட்டை போனோமே ஞாபகமிருக்கா''

ஆமெனத் தலையசைந்தது. அதை வீடெனக்கூற முடி யாது. நாலு குச்சிகளை நட்டு மேலே சில ஓலைகளைப்போட்டு அதன் நிழலில் முதல் நாள் பிரசவமான சிசுவொன்று கிழிந்த சாக்குத் துண்டொன்றில் அமைதியாக உறங்கிக் கொண்டிருந் தது. அதனருகே தோல் போர்த்திய என்புக்கூடாய் ஒருபெண் அமர்ந்திருந்தாள். உயிர்ப்பற்றிருந்த அந்த விழிகளிலும் ஏதோ வொரு வசீகரம் தென்பட்டது. அவளின் வயது மிகக்குறை வாக இருக்க வேண்டும். அங்கேயிருந்த நடுத்தர வயதுடைய பெண்ணொருத்தி அழுகையும், புலம்பலுமாய் தன் கதையை எமக்குச்' சொன்னாள்.

''நாங்க தீவில இருந்து இடம்பெயர்ந்து இது நான் அடுப்பெரிக்கிற இருவத்தியாறாவது இடம் பிள்ளையள். என்ர மனுசனை அவங்கள் சுட்டுப்போட்டாங்கள். ஒரேயொரு மக னையும் புடிச்சுக்கொண்டு போட்டாங்கள். மிஞ்சியிருந்தவள் இவள் ஒருத்திதான். இவளைக் கட்டினவனும் ஒரு நோயாளிப் பொடியன். ஏதோ இந்த சைக்கிள் கட்டையை உருட்டி இரும் புக் கோடாலி பிடிக்கிற புண்ணியத்தால இடைக்கிடை அடுப்பு மூட்டறம்''

அந்தத் தாயின் குரல் இப்போதும் எனக்குள் அழுதது.

''இந்த மழைக்குள்ள அவையள் என்ன செய்வினம்''

தனக்குள் முனகுவதுபோல் சொல்லிக்கொண்டாள். நினைவே நெஞ்சைச் சுட்டது.

''எங்கட சனத்தின்ரை பசியும், கண்ணீரும் கெதியில மாறவேணும். இதுக்கான விலை எதுவாயிருந்தாலும் குடுக்கலாம். இந்தச் சண்டை முடிய சனத்துக்குள்ள போய் நிறையச் செய்ய வேணும்.''

அவளின் குரல் ஓயும் முன்னரே கும்மென்று புறப்பட்ட கூவல் எம்மைக் கடந்தது. 'ஐயோ' எந்தக் குழந்தையின் உறக்கம் கலையப் போகுதோ. எந்தக்குடும்பத்தின் அமைதி அழியப் போகுதோ மனம் தவித்தது.

நேரம் நெருங்கி, அணிகள் நகர்ந்து, பெரும் ஊழியொன்று ஆரம்பமாகிய போது அந்த வெளிச்சப் பிரதேசத்தினுள் நாங்களிருந்தோம். பூவரசம் வேலிகள் அதிர்ந்து அதிர்ந்து அதிகம் நீரைச் சொட்டிக் கொண்டிருந்தது. தவளைகள், நுளம்புகள் ஒன்றின் அசுமாத்தமும் எனக்கு உறைக்கவில்லை. அவைகள் பயத்தில் பதுங்கிக் கொண்டனவோ அல்லது ஓடி ஒளித்துவிட்டனவோ தெரியவில்லை. குளிரில் விறைத்துவிட்ட எனது கைகளை கனலும் துப்பாக்கிவாய் சூடேற்றிக்கொண்டிருந்தது.

முன்னணி நிலைகளைக் கடந்து முகாமின் இதயப்பகுதியில் சண்டை தீவிரம் பெற்றிருந்தது. வாய்க்காலின் தேய்ந்து போன வரம்பொன்றில் பதுங்கியபடி நான் சுட்டுக்கொண்டிருந்தேன். வயல்வெளி எங்கெனும் அவர்களின் உடல்கள் விதைக்கப்பட்டிருந்தன. நடுச்சாமம்வரை சுழன்று சுழன்று ஒளிபாய்ச்சிய வெளிச்சப்பொட்டொன்று நொருங்கிச்சரிந்து கிடந்தது. சாக்குப் படுக்கைகளுடன் உதவி அணியினர் தவழ்ந்து தவழ்ந்து காயப்பட்ட, வீரச்சாவடைந்த போராளிகளை அகற்றிக் கொண்டிருந்தனர். ரீங்காரமிட்டு வந்த ரவைகள் எனக்கருகே வரம்பில் குத்திக் கொண்டிருந்தன. அருகே செல்கள் விழுந்து வெடித்துச் சிதறின. வரம்புக்குள்ளே தலையை இழுத்துச் சரித்துக் கிடந்தேன். சாக்குப் படுக்கையோடு ஓடிவந்த போராளிகள் என்னருகே விழுந்து பதுங்கினர். என் பார்வையில் அந்தச் சாக்குப்படுக்கை... எனது மண்டைக்குள் யாரோ சுண்டி விட்டார்கள் போலப்

பட்டது. எனக்குள்ளே எல்லாமே மரத்துவிட்டது போலவு மிருந்தது. கடைவாயில் இரத்தம் கசிய அரைவாசியாய் செருகிவிட்ட விழிகளுடன் அவள்... நெஞ்சில் ரவையேறி இரத்தம் கொப்பளித்திருந்தது. தொட்டுப் பார்த்தேன். சுட்டது. சட்டெனக் கைகளைப் பற்றினேன். வழமையைப் போல என்னுடன் பிணைந்து கொள்ளாமல் மரக்கட்டையைப்போல விறைத்து விழுந்தது.

''கெதியா கெதியா முன்னேறுங்கே''

கட்டளையின் வீச்சு மனதை உசுப்பியது. அந்தச் செருகிய விழிகள் இப்போதும் என்னுடன் நிறைய விடயங்களைப் பேசத் துடிப்பது போலப்பட்டது. இறுதியாக அவளை ஒரு தடவை... முன்னேறத் தயாராகினேன்.

சடசடக்கும் எனது துப்பாக்கியையும் முன்னே விழுந்து கொண்டிருக்கும் உடல்களையும் தவிர சண்டை ஓயும்வரை எனக்குள் எந்தப் பிரஞ்சையும் இருக்கவில்லை. எரியூட்டப்பட்டுக்கொண்டிருந்த தளத்திலிருந்து மூசியெழுந்தது நெருப்பு. நிலமெங்கனும் மழைநீரில் கரைந்து கரைந்து குருதி கோலமிட்டிருந்தது. இப்போது மழை நின்று போயிருந்தது. அண்ணார்ந்து பார்த்தேன். தெளிவாகத் தெரிந்தது வானம். அங்கேயும் இரத்தத் தீற்றல்கள்.

# யார் உன்னை அழைத்தார்

● மலைமகள்

இரண்டு எறிகணைகள் கூவல் ஒலியுடன் தலையைக் கடந்தன. ஒரு கணம் நிதானித்தேன். வழமையான அதிகாலை உபசரிப்பா? யானை வரவின் மணியொலியா?

யோசித்து முடிக்கமுன் ஒரு இருபத்தைந்து, முப்பது எறிகணைகள் சுழற்றி விசிறப்பட்டு விழுந்து வெடிக்க, மனமும் கையும் ஒரே நேரத்திலேயே இயங்கின. நான் வோக்கியை (WalKv Talky) இயக்கி ''என்ன மாதிரி?'' என்று கேட்ட அதே நேரம், நிறைய ''என்ன மாதிரி''யும், ''பதினெட்டால் வந்திட்டான், இருபத்திரெண்டால் வந்திட்டான், இருபத்தொன்பதால் வந்திட்டான், முப்பத்தாறால் வந்திட்டான்'' எனவும் குரல்கள் ஒலிக்க, நிலமை சட்டெனப் புரிந்துபோனது.

வரலாம், வருவான் என்ற எதிர்பார்ப்பு இருந்ததால் அவசரமாகச் செய்யப்பட்டதயார்ப்படுத்தல்களெல்லாம் எந்தளவில் இருக்கின்றன எனப் பார்த்துவரப் புறப்பட்ட நான், முன்னணியுமில்லாமல் பின்னணியுமில்லாமல் இடைவழியில். கொஞ்சம் சிக்கல்தான். 50 கலிபர்காரரைப் பார்ப்பதற்காகத்தான் நான் புறப்பட்டிருந்தேன். இனிப் பின்னுக்குப் போய் வேலையில்லை. கலிபர்க்காரருடன் தொடர்பெடுத்துக் கதைத்துவிட்டுத் திரும்பி முன்னணிக்குப் போவதுதான் மிகச் சரியான முடிவு. மெயினின் அதிர்வெண்ணுக்கு வோக்கியை ஓடவிட்டுப் பார்த்தேன். சேராவண் அங்கிருந்தவாறே முன்னணிக்காரரையும் மோட்டார்க்காரரையும் இணைத்துக்கொண்டிருந்தாள்.

திடீரென எனக்கு எங்களின் 50 கலிபரின் அடி கேட்டது. அதற்கிடையில் அவ்வளவு தூரம் போய்விட்டானா? வேகமாக அவர்களின் அதிர்வெண்ணுக்குப் போனேன். அவர்கள் ஏற்கனவே அந்த அதிர்வெண்ணில் நின்றவாறு என்னைக் கூப்பிட்டுக்கொண்டிருந்தார்கள். அவசரமாகக் குறுக்கிட்ட நான்,

''லீமாசேராதான் நிக்கிறன். சொல்லுங்கோ''
என்றேன்.

''லீமாசேரா, எங்களுக்கு இடது பக்கம் நூற்றம்பது மீற்றர்தள்ளி கிட்டத்தட்ட நூறுபேராவது பின்னுக்குப்போயிட்டாங்கள். நாங்கள் குடுத்துக்கொண்டேயிருக்கிறம். ஆளும் விடாமல் போய்க்கொண்டேயிருக்குது''

''விடாமல் குடு பப்பா இந்தியா. குடுத்துக்கொண்டேயிரு. எல்லாப் பக்கத்தையும் அவதானிப்பில வைச்சிரு. எல்லாருக்கும் இலக்குப் பிரிச்சுக் குடு''

''விளங்குது லீமாசேரா. அதுக்கேற்றமாதிரித்தான் எல்லாம் போட்டிருக்கிறன்''

என்றாள் பப்பா இந்தியா. அவள் ஒரு சிங்கி. யாரும் சொல்லாமலேயே எல்லாவற்றையும் புரிந்துகொள்ளும் கற்பூர

புத்திக்காரி. இனி நான் தாமதிக்காமல் மெயினுக்குப் போய்ச் சேரவேண்டும். சேராவண் என்னைப் பார்த்துக்கொண்டிருப் பாள். ஆயிரம் வேலையிருக்கும் இப்போது.

மெயினின் அதிர்வெண்ணுக்குப் போய் பப்பா இந்தியா வை இராணுவம் கடந்துகொண்டிருக்கும் செய்தியை சேரா வண்ணுக்குச் சொல்லியவாறு வேகமாக மெயினை நோக்கி ஓடினேன். நான் நின்ற நடுத் துண்டுக்குள் இன்னும் எறிகணை விழவில்லை. ஏன்? நடுத்துண்டுக்குள் இராணுவம் நிற்கிறதோ? எனக்கு வலப்புறம் வேப்பமரத்தருகே ஏதோ அசைவு தெரிய, பார்வையைக் கூர்மைப்படுத்தினேன். ஆளேதான். என்னி லிருந்து எழுபத்தைந்து மீற்றர் இடைத்தூரம் வரும். உடம் பெல்லாம் வகை தொகையில்லாத பாரங்களைச் சுமந்தவாறு இராணுவம் பின்னணிக்கு ஓடிக்கொண்டிருந்தது. எங்களு டைய எக்கோலீமா குறுக்குத் தகட்டு வரிசையில்தான் ஓடுகி றார்கள். நிலைமையை சேராவண்ணுக்குச் சொன்னேன்.

''எக்கோலீமா வரிசையோ? சிக்கலில்லை. வண்செவி னுக்கு அறிவிச்சு ஒழுங்குபடுத்துறன். நீ கெதியா வா''

என்றாள் சேராவண். நான் பாய்ந்தடித்து மெயினுக் குப் போய்ச் சேரவும் எக்கோலீமா வரிசையை எங்களுடைய எறிகணைகள் துடைத்தழிக்கத் தொடங்கின. நான் எதிர் பார்த்தமாதிரியே சேராவண் பதுங்குகுழியினுள்ளே இல்லை.

''கெதியா வா. உன்னைத்தான் பார்த்துக்கொண்டிருக் கிறன். டெல்ரா பதினெட்டு, இருபத்திரெண்டு, இருபத்தொன் பது, முப்பத்திரண்டு உடைபட்டு அவன்ர போக்குவரத்துப் பாதையா இருக்குது. எங்கடை ஆக்கள் விழுந்திட்டினம். மிஞ் சியிருந்த ஆக்களை இழுத்துக் கொண்டுபோய் பன்னிரெண் டிலையிலிருந்து பதினாறுவரையும் போட்டிட்டு ராங்கோ மைக் நிக்கிறாள். பதினெட்டிலையிருந்தும் முப்பத்திரெண்டிலையி ருந்தும் கடும் எதிர்ப்பு வருதாம். இவ்வளவு நேரமும் ஷெல் போட்டுக் குடுத்தும் போகேலாமல் இருக்குதாம். எங்கட லைனுக்கு ஒரு கிலோ மீற்றர் பின்னாலை அவன் ஒரு லைனைப்

போட்டிட்டு நிக்கிறான். எங்களுக்கு எல்லாப் பக்கத்திலையும் அவன். இனி நான் இதிலை நிண்டு வேலையில்லை. தனித் தனிய நிண்டு என்னைத் தொடர்பெடுத்த எல்லாரையும் எப் பிடியாவது டெல்ரா நாப்பத்தொண்டுக்கு வரச் சொல்லியிருக் கிறன். நான் நாப்பத்தொண்டுக்குப் போறன். நீ பதினாறுக் குப் போ. ரெண்டு பக்கத்தாலையும் நெருக்கி லிங்க் பண்ணு வம். பாதையை மூடுறவரைக்கும் எங்களுக்குப் பின்னாலை நிக்கிறவன் பலமாத்தான் நிப்பான். சப்ளையை மறிச்சாத் தான் அவனை உடைக்கலாம். உனக்கு விளங்குதோ?''

என்றாள் சேராவண் பதுங்குகுழியின் முகட்டில் நின்ற வாறு. அவளும் அவளுடன் நின்றவர்களும் முழுமையான தயார் நிலையில்.

பதில் சொல்வதற்கு என்ன இருக்கின்றது? என்னோடு ஒரு 40mm இருந்தால் நல்லது என்று மனதில் பட, அல்பா லீமா வைக் கூட்டிக்கொண்டு, என்னுடைய இடைப்பட்டி முழுமை யும் குண்டுகளைக் கொழுவிக்கொண்டு பதினாறைநோக்கி ஓடிப் போனேன்.

பதினாறுக்குப் போனேன் என்பதைவிட நான் கொலை வலயத்துக்குள் போனேன் என்பதுதான் உண்மை. பதினாறு, பதினைந்து என்று எங்களுடைய ஆட்கள் நின்ற காப்பரண்க ளெல்லாம் எதிரியின் எறிகணை மழைக்குள் குளித்தபடி. இந்த எறிகணை வீச்சுள்ளும் யாராவது எஞ்சியிருப்பார்களா? வோக் கியில் ராங்கோ மைக்கைக் கூப்பிட்டவுடனேயே,

''எனக்கு உன்னைத் தெரியுது. வேகமா ஓடி வா''

என்று கத்தினாள். அல்பா லீமாவும் நானும் ஓடிப்போய் பதினாறுக்குள் சறுக்கிப் பாய்ந்த வேகத்தில் சமநிலை குழம்பிச் சரிந்து விழப்போன எம்மை உள்ளிருந்தவர்கள் தாங்கிக்கொண் டார்கள்.

''இதுக்குள்ளாலை பார்''

என்றெனக்குச் சுடும் ஓட்டைக்குள்ளால் காட்டினாள் ராங்கோ மைக். அணிவகுத்து நின்ற மொட்டைத் தென்னைகளுக்கிடையில் பார்த்தேன். இருபது பேரளவில் கொண்ட அணி பதினெட்டினூடாக உள்நுழைந்துகொண்டிருந்தது. முதுகில் **Wireless receiver** ஐச் சுமந்தபடி வந்த முதலாமவன் பதினெட்டைக் கடக்கவும் பக்கவாட்டாக நெற்றியில் சூடு பட, அப்படியே விழுந்தான். இது பதுங்கிச் சூடு. நம்மவர்கள் தான்.

''சினைப்பர் எங்க நிக்குது''
என்றேன்.

''புட்டிப் பொசிசனிலையிருந்து இந்தியா அல்பா தான் குடுத்துக்கொண்டிருக்கிறாள்''

என்று ராங்கோ மைக் சொல்லவும், அல்பா லீமா தன் 40mm ஆல் இரண்டு எறிகணைகளை ஏவ, நின்றவர்கள் ஏனைய ஓட்டைகளால் சுட, விழுந்தவர்கள் போக மற்றவர்கள் ஓடித் தப்பினார்கள். இந்தத் தென்னை மர அணிவகுப்பையும் இடையிடையில் தலை நீட்டும் மாமரங்களையும் கடந்து நீண்ட தூரங்களுக்கு மிகச் சரியாகச் சுடுவதும் கொஞ்சம் சிரமம் தான். எனக்குப் பொறுமையே இல்லை. சேரா வண் இன்னும் போய்ச் சேரவில்லையோ? போயிருந்தால், தொடர்பெடுத்திருப்பாளே?

''லீமா சேரா- சேரா வண்''

வோக்கி கூப்பிட்டது. இவளுக்குச் சாவே இல்லை.

''சொல்லுங்கோ சேரா வண். நான் பதினாறிலை தான் நிற்கிறன்.''

''சரி நான் நாப்பத்தொண்டுக்கு வந்திட்டன். தொடங்குவம். வண் செவிணின்ரை நம்பருக்கு வா''

போனேன். இரு முனைகளால் நாங்கள் இறங்கப் போவதை வண் செவினுக்குச் சொல்லி எறிகணை உதவி

கேட்டாள். வண் செவிண் தயாரானது. நாங்களும் தயாரானோம்.

''வருகுது பாருங்கோ''

என்றது. பார்த்துக்கொண்டிருந்தோம். கும் கும் கும் என்றது. அவை மிகச் சரியாகப் பதினெட்டுக்கு நேரே விழுந்து வெடித்தன.

''சரியா?''

''சிக்கலில்லை வண் செவிண். இப்பிடியே இருக்கட்டும். தேவையெண்டால் கேக்கிறன். சேராவண், நான் தொடங்கிறன்''

''உடனே தொடங்கு''

''அல்பா லீமா...''

நான் வாய் மூட முதலே அவள் தன் 40mm ஐத் தோளில் தொங்கவிட்டு **T81** ஆல் குறி பார்த்தபடி,

''அடி... விடாதை... அடி... அடி... அடி... அடி...''

என்றவாறு நகர்வுப் பதுங்ககழிக்குள் குதித்துப் பதினெட்டை நோக்கி ஓடத் தொடங்க, அவள் பின்னே ஒரு **PKLMG** இயக்குனர், சுடுனர், உதவியாளர் தத்தம் ஆயுதங்களுடன் ஓட, இன்னும் இருவர் நகர்வகழிக்குள் பாய முற்பட, நான் அவர்களைப் பிடித்திழுத்து,

''ரெண்டு பேரும் நில்லு. தேவைப்படேக்கை கூப்பிடுறன்''

என்று அதட்டிவிட்டு, போனவர்களின் பின்னே பாய்ந்து ஓடினேன். என் பின்னே தொப்புத் தொப்பெனச் சத்தம் கேட்கத் திடுக்கிட்டுத் திரும்பினால், அந்த இருவரும் என் பின்னே ஓடி வந்து கொண்டிருந்தார்கள். சட்டெனக் கோபம்

வந்தபோதும் ஒன்றும் பேசாமல் ஓடினேன். சண்டை தொடங்கினால் ஒருவரையும் கட்டுப்படுத்த இயலாது. நான் முந்தி, நீ முந்தி என்று எல்லோரும் வாலைக் கிளப்பி கொண்டு வெளிக்கிட்டுவிடுவார்கள். வந்து என்னவென்றாலும் செய்யட்டும்.

பதினெட்டில் எதிர்பார்த்தளவு எதிர்ப்பில்லை. பதுங்கு குழிக்குள் ஒரு குண்டடித்தோம். பாய்ந்து சுட்டோம். உற்றுப் பார்த்தோம். மூன்று இராணுவத்தினர் பிய்ந்து தொங்கிப் போய் கிடந்தனர். இது வண் செவிண் செய்த வேலை. தாமதிக்க நேரமில்லை.

''சேராவண் லீமா சேரா. நான் பதினெட்டில நிக்கிறன்''

''அதில சிக்கலில்லையெண்டா வேகமா மற்றதுக்குப் போ. ஆக்களைக் குவியவிடாதை''

சாளி பிறேவோவின் ஆட்கள் வானிலெழும்பிக் காற்றைக் கிழித்தபடி டெல்ரா நாற்பது, நாற்பத்தொன்றுப் பக்கம் குதித்து வெடிக்குமோசை கேட்டது. சரி, சேராவண்ணும் இறங்கப்போகிறாள்.

நாங்கள் இனி அவதானமாகப் போகவேண்டும். பின்னே வந்த இருவரிடமும் இரண்டு பக்கங்களையும் அவதானித்தவாறு நகருமாறு பணித்துவிட்டு, பார்த்துப் பார்த்து நகர்ந்தோம். முன் பக்கவாட்டுப் பற்றை மறைவுகளிலிருந்து சூடு வந்தபோதெல்லாம் அல்பா லீமா தன் 40mm ஆல் ஒன்று கொடுப்பாள். நாங்களும் சடசடப்போம். பெரும்பாலும் எதிர்ப்பு அடங்கிவிடும். பத்தொன்பது, இருபது, இருபத்தொன்றெல்லாம் சிறு எதிர்ப்புகளுடன் விழுந்துவிட, இருபத்திரெண்டை நெருங்க முன்பே நகர்வகழியின் வளைவு மறைவிலிருந்து வீசப்பட்ட இரு கைக் குண்டுகள் எம்மை வரவேற்றன.

''பின்னுக்குப் போ. பின்னுக்குப் போ''

என்று கத்தியவாறே அல்பா வீமா எங்களெல்லோரையும் பின்னுக்குத் தள்ளி நகர்வகழியின் இன்னொரு வளைவில் விட்டாள். குண்டுகள் வெடித்த கையோடு அல்பா வீமா எறிகணையேற்றப்பட்டிருந்த 40mm ஐ அவசரமாகத் தோளுக்கு உயர்த்தினாள். அதற்கு முன்பே என் பின்னே வந்த வால்களில் ஒன்று, ''இந்தா பிடி'' என்றவாறு ஒரு குண்டை எறிய, அது முன்னே விழுந்து வெடித்த புழுதி அடங்க முன்னரே சூடுகளை வழங்கியவாறு முன்னே பாய்ந்தோம். என் முன்னே போனவள் தடக்குப்பட்டவாறே போன ஏதோ ஒன்றில் என் கால்களும் தடக்க, குனிந்து பார்த்தேன். இராணுவத்தின் உடல். சற்று அசைவதுபோல் மனதுக்குப்பட, அவன் நெற்றியில் என் துப்பாக்கி முனையை அழுத்திச் சுட்டுவிட்டு நகர்ந்தேன்.

இருபத்திரண்டிலிருந்து கிடைத்துக்கொண்டிருந்த எதிர்ப்புக்கு முகம் கொடுக்க இயலாமல் இருந்தது. தலையை உயர்த்திச் சுடுவதற்கு எதிரி எங்களை அனுமதிக்கவேயில்லை. நாங்கள் வியர்த்துக் களைத்து, எவரும் அசைக்க முடியாத பலத்துடன் அமைத்த காப்பரணுள் பாதுகாப்பாக இருந்தவாறு எதிரி விளையாடிக்கொண்டிருந்தது எரிச்சலைக் கிளப்பியது. ஒரு முறை தலையை உயர்த்தி அல்பா வீமாவால் ஒரேயொரு 40mm ஐச் சுடும் துவாரத்தினூடே ஏவ முடியுமென்றால் கதையே வேறு. இருபத்திரண்டுக்கும் எங்களுக்குமிடையே ஒரு பதினேழு மீற்றர் இடைத்தூரம் வரும். அதைக் கடப்பதற்குள் இந்தப் பாடு.

ஒரே இடத்தில் அதிக நேரம் தாமதிப்பதும் ஆபத்து. ஒரு இறுக்கமான முடிவை எடுத்தேயாகவேண்டிய நிலை எங்களுக்கு.என் பின்னோடு வந்தவர்களைத் திரும்பிப் பார்த்தேன். நான் வாய் திறக்க முன்னரே ஒருத்தி,

''நான் போய்க் குண்டடிக்கிறன். எனக்குக் காப்புச் சூடு தாங்கோ''

என்றவாறு என் பதிலுக்குக் காத்திராமல் ஏற்கனவே பாதுகாப்பு ஊசி கழற்றப்பட்ட நிலையில் வைத்திருந்த குண்டுகளோடு எங்களை ஏறி மிதித்தவாறு ஓட, நகர்வகழிக்குள் பதுங்கியிருந்த அனைவரும் ஒரே நேரத்தில் நிமிர்ந்து இருபத்திரண்டை நோக்கிச் சூடுகளை வழங்கினோம்.

எதிர்த் திசையிலிருந்து சூடு வரும்போது குனிந்து ஓட வேண்டுமென்ற விதிமுறைகள் எல்லாம் பயிற்சியின்போது மட்டுமே எம்மால் கடைப்பிடிக்கப்படுகின்றன. சண்டை தொடங்கிவிட்டால் **Bend** ஆவது **Crawl** ஆவது Duckwalk ஆவது. நிமிர்ந்தபடி ஓட்டந்தான்.

இருபத்திரண்டிலிருந்து வந்த எந்தச் சூடுமே குண்டேோடு ஓடியவளில் கொழுவவில்லை என்பது நம்பமுடியாத உண்மை. எங்களுடைய திடீர்ச் சூடும் குண்டேந்தியவளின் வருகையும் எதிரியைக் குழப்பிவிட்டதோ, என்னவோ, அவர்களின் சூடு நின்றுவிட்டது. இன்னுமொரு ஐந்து மீற்றரில் காப்பரண் வாயிலை அவள் நெருங்கிவிடுவாள். அதற்குள்...

சற்றும் எதிர்பாராமல் அது நடந்தது. காப்பரணிலிருந்த ஒரு இராணுவ வீரன் நகர்வகழிக்குள் குதித்த கணத்திலேயே துப்பாக்கியைத் தோளுக்குயர்த்தினான். அவனின் துப்பாக்கியின் சுடுகுழல் முட்டும் தூரத்தில் இவள். காப்பரண் வாயிலுள் இவள் குண்டெறிந்தது முதலில் நடந்ததா, அவன் இவளைச் சுட்டது முதலில் நடந்ததா, அல்லது எல்லாம் ஒரே சமயத்திலா? சொல்ல முடியவில்லை.

சுட்டவனைச் சுட்டோம். குண்டு வெடிப்பால் அதிர்ந்த காப்பரணுள் புகுந்து சுட்டோம். உள்ளே விழுந்து கிடந்த ஆறேழு பேருமே பெரிய மல்லர்கள்.

எதிரியின் போக்குவரவுப் பாதையாக இருபத்திரண்டு இருந்ததால், கடந்து போக யோசனையாக இருந்தது. நிறுத்தி விட்டுப் போக ஆட்களும் போதாது. சேரா வண்ணைக் கேட்டுப் பார்க்கலாம்.

சேரா வண் நின்ற அதிர்வெண்ணில் ஒலித்த கட்டளை களும் வேண்டுகோள்களும் அவர்களின் நிலைமையைத் தெளி வாக்கின. அவர்கள் முப்பத்தாறை நெருங்க முடியாமல் எங்க ளைப்போலவே சிக்கல்பட்டவாறு இருக்கிறார்கள். நின்று யோசித்து என்ன செய்வது? ராங்கோ மைக்கைக் கூப்பிட் டேன்.

''பதினெட்டையும் இருபத்திரெண்டையும் கண்காணிப் பில வச்சிரு. நான் அங்கால போறன்''

என்றேன். நகர்ந்தோம். இருபத்தேழை அடையும்வரை கடும் சிக்கல்கள் நிகழவில்லை. இருள் கவியத் தொடங்கிவிட் டது. நகர்வை நிறுத்திவிட்டு இருபத்தேழிலேயே நின்றோம். இருபத்தொன்பதில் நிற்கும் எதிரி எந்த நேரமும் எம்மைத் தாக்கலாம். பின் புறத்திலிருந்து வரும் இராணுவத்தினர் தற் செயலாகவேனும் உள்நுழையலாம். எனவே விழிப்போடு இருந் தோம்.

இரவு ஒன்பது, ஒன்பதரை இருக்கலாம், அல்பா லீமா என் தோளைத் தொட்டாள். அவள் காட்டிய திசையில் உற் றுப் பார்த்தேன். ஐயமில்லை. அது இரண்டு மனிதர்கள்தான். இருபத்தெட்டுப் பக்கத்திலிருந்து நகர்வகழியில் குனிந்தபடி அவர்கள் வந்துகொண்டிருந்தார்கள். எம்மவர்களாக இருக்கக் கூடிய வாய்ப்பேயில்லை. ஒருத்தி சுட்டாள். திடீரென இரு வரையும் காணவில்லை. ஓடி விட்டார்களோ? ஓடினால் இந்த இரவில் தொப்புத் தொப்பெனச் சத்தம் கேட்டிருக்குமே? அப் படியே நிலத்தில் குந்தி விட்டார்களோ? ஊர்ந்தவாறு மேலும் நகர்கிறார்களா? தெரியவில்லை. இரண்டு துப்பாக்கிகள் அவர் கள் மறைந்த இடத்தையே குறிபார்க்க, ஏனையவை எங்கும் அடிக்கக்கூடிய தயார் நிலையில். பத்து நிமிடங்களுக்கு மேலா கியும் அசைவொன்றும் இல்லை. என்ன நடந்திருக்கும்? யோசித்துக்கொண்டிருக்கையிலேயே ஒரு தலை உயர்ந்தது. கூடவே இன்னொரு தலையும். மறுபடியும் அவை எம்மை நோக்கியே அசைந்தன. சொல்லி வேலையில்லை. அமெரிக்கர்

களால் பயிற்றப்பட்ட அணிகளென்ற இவர்களின் நினைப்புத் தானே பிழைப்பைக் கெடுக்கின்றது.

எங்கள் எல்லோருடைய துப்பாக்கிகளும் அந்த இரு தலைகளையும் வெளுத்து வாங்கிவிட்டன. துப்பாக்கி வெடியோசையைவிட, கையெறி குண்டுகள் வெடித்த ஓசையும் சேர்ந்து எழுந்தது. பாதுகாப்பு ஊசி சுழற்றப்பட்ட நிலையில் அவர்கள் கொண்டுவந்த குண்டுகளாயிருக்கும்.

எல்லாம் முடிந்தவுடன் மளமளவென எல்லோரும் இருபத்தேழுக்குள் புகுந்துகொண்டோம். இருபத்தொன்பதிலிருந்து எதிரி ஏவிய **60mm** மழை எம்மை அணுக முன்பே புகுந்து கொண்டோம். எல்லாமே முன் பின்னாகவும் பக்கவாட்டாகவுமே விழுந்து வெடித்தன. கும்மிருட்டு. தலைவரின் நண்பனான இயற்கை எங்களோடும் நட்பாயிருந்தது. எனவே தப்பிக்கொண்டோம்.

நேரம் நள்ளிரவை நெருங்கிக்கொண்டிருந்தது. பின்புறம் தூர எங்கோ உரையாடல் கேட்டது. அது மெல்ல எங்களை நெருங்க நெருங்க மொழி விளங்கியது. உள் நுழைந்த இராணுவத்தினர் சிலர் ஏதோ தேவைக்காகத் தம் பகுதிக்குப் போகப்போகிறார்களோ? நெருங்கியபின் அடிக்கத் தயாரானோம். ஆனால் குரல்கள் எம்மைவிட்டு விலகி இருபத்தொன்பதுப் பக்கமாகப் போயின. அதுதானே அவர்களின் பாதை. போய்விட்டார்கள்.

சிறிது நேரத்தின்பின் இன்னும் கொஞ்சக் குரல்கள். அவை எம்மை நோக்கி வந்தனபோல் தோன்றினாலும், இருபத்தாறுப் பக்கமாகப் போயின. திடீரெனக் கதை நின்று போனது. ரோச் வெளிச்சம் அடிக்கப்பட்டது. பிறகு மறுபடி உரையாடல் ஆரம்பமானது. ஆனால் அது இப்போது எம்மை நோக்கி நகர்ந்தது. இருளில் உற்று உற்றுப் பார்த்து விழிகள் வெளியே விழுந்துவிடும்போல் இருந்தன. இப்போது இருபத்தொன்றுக்கும் எங்களுக்குமிடையிலான நகர்வகழியில் சில தலைகள் தெரியத்தொடங்கின. ஓரிருவர் அல்ல. வந்தது ஒரு அணி.

உரையாடல் மிக இயல்பாக நடந்தது ஏதோ தமது தளமொன்றின் வரவேற்பறையில் நிகழ்வதுபோல. இவர்கள் எங்களது பகுதிக்குள் வந்ததே பெரிய பிழை. வந்ததும் போதாமல், உல்லாசப் பயணம் வந்தவர்கள்போல ஊர்சுற்றிப் பார்த்துவிட்டு, பளைப்பகுதியிலே தலைகளற்றுக் கிடக்கும் தென்னைகளையும் எண்ணிக் கணக்கெடுத்துவிட்டு திரும்பி வேறு செல்கின்றார்களா?...ம்...

எங்களுடைய **PKLMG** அவர்களை வழியனுப்பத் தயாரானது.

உண்மையிலேயே அது ஒரு அருமையான சண்டைதான். எங்களைவிட ஆண்களின் உயரம் அதிகம்தானே. எங்களுக்கு ஏற்ற ஆழத்தில் நாங்கள் வெட்டியிருந்த நகர்வகழியால் எதிரிகளின் தோளைக்கூட மறைக்க இயலாமல் போயிற்று. காப்பரண் வாயிலில் தன்னை நிலைப்படுத்திய **PKLMG** இடம், வலமாக நாலைந்து தடவைகள் சுழன்று சீறிவிட்டு உள்நுழைய, சூட்டுத் துவாரங்களினூடே நாங்கள் தொடங்கினோம். எதிர்ப்பும் கடுமையாகத்தான் இருந்தது. சண்டை கிட்டத்தட்ட அரைமணி நேரத்துக்கும் மேலாக நடந்தது. ஒரு கட்டத்தின் பின் எதிர்ச் சூடு வரவில்லை. அதற்காக முழு இராணுவமுமே இறந்துவிட்டதாக நம்ப நாம் தயாராகவில்லை.

காயமடைந்தவர்களை மற்றவர்கள் இழுத்துச் செல்ல முயல்வார்கள். முதுகில் சுமந்தபடியே நீண்ட தூரங்களுக்கு ஊர்ந்து செல்லக்கூடிய பயிற்சிகளைக்கூட அவர்கள் பெற்றிருக்கலாம். பெரும்பாலும், காயமடைந்த, இறந்த வீரர்களை நகர்த்துவதற்கே விரும்புவார்கள். எம்மைச் சும்மா விட்டுச் செல்வதை அவர்கள் ஒருபோதும் விரும்பமாட்டார்கள்.

எல்லோருடைய காதுகளுமே எங்களை விட்டுப் புறப்பட்டு நகர்வகழிக்குள் இறங்கிவிட்டிருந்தன. ஒவ்வொரு சிறு ஒலியையும் உள்வாங்கி மூளைக்கு அனுப்பி, பரிசோதித்துக் கொண்டன. ஒரு சத்தம் சற்று வேறுபாடாக ஒலித்தது. சர்...க்

சர்...க் சர்...க். ஏதோ இழுபடும் ஒலி. அல்பா லீமாவின் **40mm** ஒருதரம் இயங்கியது. எங்கும் அமைதி. சர்...க்ஒலியைக் காணவில்லை. இன்னுமொரு ஐந்து, பத்து நிமிட நேரம் கழிந்த பின் மீண்டும் சர்... க் சர்...க் சனியன் இன்னும் சாகவில்லையோ? ஒரு கையெறி குண்டை வீசினோம். அமைதி. இடைவெளி விட்டு, பின்னரும் அதே சர்...க் சர்...க். யாரடா இவன் நாசமாகப் போகின்றவன்? கோபம் மேலிட்டது. ஒரு வனோ, ஒன்றுக்கு மேற்பட்டவர்களோ உயிருடன் இருப்பது? தெரியவில்லை. சரியாகத் தெரியாமல் குண்டுகளைச் செலவ ழிக்கவும் யோசனையாக இருந்தது. கவனிக்காததுபோலிருந்து நடப்பதைக் கவனிக்க முடிவெடுத்தோம். ஆனால் பின்னர் அதற்குள்ளிருந்து ஓசைகள் எதுவும் எழவில்லை. அல்லது எழுந்த ஓசையைக் களைப்புமேலீட்டால் காதுகள் உள்வாங்கவில்லை. ஏதோ ஒன்று.

வானில் அழகாக நட்சத்திரங்கள் மின்னின. அங்கொன் றும் இங்கொன்றுமாய் ரவைகள் சீறின. எறிகணைகளும் இடை யிடையே பறந்தன. விழிப்பாகவே இருக்கின்றோம் என்று எதிரியும் நாங்களும் பேசிக்கொள்ளும் சங்கேத மொழி இது. நேரம் மூன்றைக் கடந்துவிட்டது. மனமும் உடலும் சோர்வை ஒரு பக்கம் தள்ளிவைத்துவிட்டுச் சண்டைக்குத் தயாரானது. விடிவதற்குள் இருபத்தேழைவிட்டு வெளியேறிவிடவேண்டும் என்பதே நோக்கமாக இருந்தது. சில நேரம் நிலம் தெளிய முன்னரே இருபத்தேழு ராங்க் ஒன்றால் ஏறி மிதிக்கப்படலாம். **RPG** யால் துவைக்கப்படலாம். அல்லது முற்றுகையிடப்பட லாம். இருபத்தாறை நோக்கிப் போவதில் உள்ள சிக்கல் என்ன வென்றால், இறந்த மனிதர்களை ஏறிமிதித்தவாறே போக வேண்டியிருக்கும் என்பதுதான். சில வேளை ''இறந்தவர்'' களில் சிலர் எழுந்து நின்று சுடலாம். அப்படி நடந்தால் பரவா யில்லையே. சண்டை பிடித்துக்கொண்டே நகரலாம். உயி ரோடு உள்ளபோது அவர்கள் மேல் எழும் கோபம் இறந்தபின் ஏன் வருவதில்லை என்பது புரியவில்லை.

*3.30* ஆகிவிட்டது. இனியும் தாமதிப்பதில் வேலை யில்லை. எல்லோரும் நகர்வகழிக்குள் இறங்கினோம். முன்னே

போனவர்கள் கால் வைத்த இடங்களில் பின்னே போனவர்கள் கால்வைத்து நடந்தோம். எதிர்ப்பு எழவில்லை. காயத்துடன் இழுத்துப்போக முயற்சித்தவன் அல்லது முயற்சித்தவர்கள் சில வேளை அதிகளவு இரத்தப்போக்கால் இறந்திருக்கலாம். விழுந்தவர்களைக் கடந்த பின்னும் முதுகு கூசியது. எத்தனை பேர் கடந்துபோனோம் என எண்ணிவிட்டு அதன் பின் எழும்பி முதுகில் சுடுவார்களோ? திரும்பிப் பார்த்தேன்.

''என்னக்கா?''

என்றாள் பின்னால் வந்தவள்.

''ஏதேனும் அசைவு?''

''ஒரு பிரச்சினையுமில்லை''

சிந்தனைகள் பல மாதிரி ஓடின. இருபத்திரண்டுக்கு எதிரி மறுபடி வந்துவிட்டானோ? தெரியவில்லை. இருபத்தேழுக்கு காலையில் என்ன நடக்கும்? தெரியவில்லை. எனக்குத் தெரிந்ததெல்லாம் எங்களுடைய ரவைகள் குறைந்துவிட்டன என்பதும், நகர்வசழியில் விழுந்து கிடப்பவர்களிடம் ரவைகள் இருக்கின்றன என்பதுவும்தான். உடனேயே ரவைகளை நிரப்பிக்கொண்டோம். அல்பா வீமா தன் காற்சட்டைப் பைகளுக்குள்ளும் 40mm எறிகணைகளைத் திணித்துக்கொண்டாள்.

இருபத்தாறுக்கு வந்ததும் சேரா வண்ணைக் கூப்பிட்டேன். நிலைமையைச் சொன்னேன். முப்பத்தாறைப் பிடித்த பின் முப்பத்திரண்டை நெருங்கும் முயற்சியில் தன்னைத் தவிர எல்லோருமே காயமும் வீரச்சாவும் என்றும், தான் இப்போது வேறு சிலருடன் முப்பத்தைந்தில் நிற்பதாகவும், விடிந்ததும் நிலைமையைப் பார்த்து முப்பத்திரண்டை நெருக்கப்போவதாகவும் குறிப்பிட்டாள். ராங்கோ மைக்கைக் கூப்பிட்டேன். இரவிரவாக இருபத்திரண்டுப் பாதையால் நடமாட்டம் இருந்ததாகவும், தாங்கள் சுட்டதாகவும், இப்போது சத்தம் ஒன்றும் இல்லை என்றும் அவள் குறிப்பிட்டாள்.

''ஆனாலும் கவனம். பதினெட்டை விட்டிடாதை. இருபத்திரெண்டையும் இடையிடையில பார்த்துக் கொள்''

என்றேன்.

இரண்டாம் நாள் சண்டை முதல் நாளைவிடக் கடுமையானதும் சிக்கலானதுமாக இருந்தது. இருபத்தேழை எதிரியின் **RPG**கள் வந்து முத்தமிட்டதோடு எமது பக்கச் சண்டை ஆரம்பமானது. வண் செவிணின் ஆட்கள் எங்களுடைய வேண்டுகோளுக்கிணங்க இருபத்தொன்பதில் கும் கும்மெனக் குதித்து வெடித்தார்கள். அடி அடியென்று அடித்து இருபத்தொன்பதைப் பிடித்தோம். சேரா வண்ணைத் தொடர்பெடுத்து நிலைமையைச் சொன்னபோது, தான் ஏற்கனவே முப்பத்திரண்டைப் பிடித்துவிட்டு அதில் நிற்பதாகக் குறிப்பிட்டான்.

ராங்கோ மைக்கைக் கூப்பிட்டோம். பதினாறுக்கும் இருபத்தாறுக்கும் இடையில் மாறி மாறி நடந்துகொண்டிருந்த அவளின் அணி இருபத்தாறிலிருந்து பதினாறை நோக்கி வந்துகொண்டிருந்தபோது பதினெட்டில் இராணுவம் நின்றிருக்கின்றது. அவர்களை இரு முனைகளால் இவர்கள் தாக்கிக்கொண்டிருந்தபோது, இடையில் நின்ற அணிக்கு இருபத்திரண்டுப் பக்கத்தால் முதுகு அடி கிடைத்திருக்கின்றது. எனவே ராங்கோ மைக் நேரடியாக இறங்கி பதினெட்டை அடித்துப் பிடிக்க, இடையில் நின்றவர்கள் இருபத்திரண்டை அடித்துப் பிடித்திருக்கின்றார்கள். தன்னைச் சேர்த்து மூவர் மட்டுமே முழுதாக எஞ்சியிருப்பதாகவும், மூவரும் இருபத்திரண்டில் நிற்பதாகவும், இயலுமான காயக்காரர்கள் சிறப்பு எல்லைப் படை வீரர்களைப் போட்டுப் பதினெட்டைப் பாதுகாப்பதாகவும், வித்துடல்களைப் பதினாறில் வைத்திருப்பதாகவும் ராங்கோ மைக் குறிப்பிட்டாள்.

எல்லோருடைய நிலைமைகளையும் தெரிந்துகொண்ட சேரா வண் அடுத்த கட்டளைகளை வழங்கினாள்.

''சிக்கலில்லை. எல்லாத்தையும் 'சமாளிக்கலாம். இப்ப உங்கடை பாதையால சிறப்புக்குரிய ஆக்கள் வருகினம். ஆக்களைப் போட்டு எல்லாப் பாதையையும் மூடுங்கோ. இனி அவன் உள்ளுக்கை வரக்கூடாது. வந்தவன் திரும்பிப் போகவும்கூடாது. விளங்குதோ?''

''விளங்குது சேரா வண்''

''ராங்கோ மைக் உனக்கு விளங்குதோ?''

''விளங்கீட்டுது சேரா வண்''

''சரி. உடனை ஒழுங்குபடுத்துங்கோ. ஆக்களை எனக்கும் அனுப்புங்கோ. வேறையில்லை.''

சிறப்பு எல்லைப்படை வீரர்கள் ராங்கோ மைக்கை வந்து சந்திக்கவே இருண்டுவிட்டது. இரவிரவாக அவர்களைப் பதினெட்டு, இருபத்திரண்டு, இருபத்தொன்பது, முப்பத்திரண்டு, முப்பத்தாறு, நாற்பத்தொன்று என எதிரி பாவித்த அனைத்துப் பாதைகளிலும் நிறுத்தினோம். இருபத்திரண்டில் ராங்கோ மைக், முப்பத்திரண்டில் நான், நாற்பத்தியொன்றில் சேரா வண்ணும் ஏனைய நிலைகளில் எங்களில் எஞ்சிய ஒவ்வொருவருமாகச் சிறப்பு எல்லைப்படை வீரர்களுக்குப் பொறுப்பாக நின்றுகொண்டோம். எம்முடன் வந்தவர்களில் **PKLMG** இயக்குனரும் ஒரு **T56- 2** காரியுமே மிச்சம். அல்பா வீமாவின் **40mm** என்னிடமிருந்தது.

இனி விடிந்த பின்னர்தான் சண்டை. காவற்கடமையை என்னிடம் தராமல் தமக்குள்ளேயே பகிர்ந்துகொண்டார்கள் அந்த வீரர்கள்.

''நான் கொஞ்ச நேரம் பார்க்கிறன்''

என்று கேட்டும் பார்த்தேன். பிடிவாதமாக மறுத்துவிட்டார்கள். வீட்டில் தம் தங்கைகளை இரவில் தனியே விடாத, தூரப் பயணங்களின்போது தம் மிதிவண்டிகளில் ஏற்றிச் செல்கின்ற அண்ணாக்களாகவும், தமது உழைப்பின் ஒரு பகுதியை அக்காமாரின் சீதனத்துக்காகச் சேர்க்கும் தம்பிமாருமாகஇருந்துகொண்டே, தேவைப்படும் நேரங்களில் சண்டைக்கு வந்து போகும் இவர்களுக்கு என்னைப் பார்க்கப் பாவமாகத்தான் இருந்திருக்கும்.

ஐந்து ஆண்களிடையே தனித்து ஒரு பெண்ணாக நின்ற எனக்கு அவர்கள் இல்லாத பக்குவமெல்லாம் பார்த்தார்கள். கையோடு கொண்டுவந்த பணிசையும், தண்ணீர்க் கானையும் முதலிலேயே என்னிடம் தந்துவிட்டார்கள். சாப்பிட்டு முடியும் வரை பார்த்துக்கொண்டு இருந்துவிட்டு, இன்னுமொரு பணிசையும் தந்து, ''வைச்சிருந்து பசிக்கிறநேரம் சாப்பிடுங்கோ'' என்றார்கள். இரண்டு ஓலைகளை இழுத்துவந்து போட்டுவிட்டு ''படுங்கோ. விடிய எழுப்புறம்'' என்றார்கள். எனக்குச் சிரிப்பும் வந்துவிட்டது. தலைப் பக்கத்தில் ஒருவரும் கால் பக்கத்தில் ஒருவருமாகக் கண்ணியமான தூரத்தில் நின்று காவல் செய்த அவர்கள் இருட்டில் என் சிரிப்பைக் கவனித்திருக்கமாட்டார்கள். ஏதோ என்னுடைய உடல், பொருள், ஆவி எல்லாமே தமது பொறுப்பில் இருப்பதுபோல மிகவும் அவதானமாக நடந்துகொண்டார்கள்.

ஓலையில் சாய்ந்த எனக்கு வானத்து நட்சத்திரங்கள் தெரிந்தன. மார்பில் 40mm உம், T56-2 உம் சாய்ந்திருந்தன. இருபத்தொன்பதைப் பிடிப்பதற்கான கடும் சண்டை நடந்துகொண்டிருந்த நேரம் எதிரியின் PKLMG அடி அல்பா லீமாவின் இடது தோளிலிருந்து வயிற்றின் வலது புறம்வரை வரிசையாகச் சல்லடைபோட, தள்ளாடியபடியே என் பக்கம் திரும்பியவள் 40mm ஐ என்னிடம் நீட்டியபடியே ஏதோ சொல்ல முயன்றபடி குப்புற என்மேல் சரிந்தாள். அவள் விழுந்த வேகத்தில் நானும் விழுந்தேன். ''விடாதை அடி'' என்று விழுந்தபடியே மற்றவர்களிடம் கத்திவிட்டு, அவளை நான் புரட்டியபோது உயிர் பிரிந்துவிட்டிருந்தது.

என்ன சொல்ல நினைத்திருப்பாள் அல்பா லீமா என்ற குறியீட்டுப் பெயரால் அழைக்கப்படும் எங்கள் அன்புக்குரிய அகல்யா? இப்போது என்னுடன் கதையேன் அகல்யா. அப்போது எனக்கும் நேரம் இருக்கவில்லை. இப்போது பேசேன்.

அகல்யாவின் தெற்றுப்பல் சிரிப்பு கண்களுக்குள் வந்து போனது. 50 கலிபரைப் பார்ப்பதற்காக நான் புறப்பட்ட போது அகல்யா எழும்பியிருக்கவில்லை. 'வயிற்றுக்குத்து' என்று முனகினாள். வழமையாகவே இவள் வயிற்றுக்குத்து

என்றால் சுருண்டுவிடுவாள். நாங்களும் வேலை சொல்லமாட்டோம். வீட்டிலென்றால் எங்களை ஒரு வேலையுமே செய்ய விடாமல் அம்மாவே எல்லாம் செய்து, சின்ன மீன் வாங்கி அரைத்த கறி வைத்து, அது, இதுவென்றெல்லாம் பக்குவம் பார்ப்பார். இங்கே அதற்கேது நேரம்? ஆளை ஆறுதலாக விட்டு விடுவோம்.

எழுந்து நடமாடமாட்டாமல் கால் சோர்ந்து கிடந்தவள் எப்படித்தான் என்னோடு ஓடி ஓடிச் சண்டை பிடித்தாளோ! ஒருதரம்கூட முகம் சினக்காமல், நான் சொன்னதையெல்லாம் செய்து... தனக்கு அடிப்படையாகத் தேவையான பொருட்களை வரும்போது கையோடு கொண்டுவந்தாளோ? அவசரத்தில் மறந்தாளோ? இரவிரவாகச் சண்டை நடந்ததே. ஓய்வு வேண்டும் என்று அவளும் கேட்கவில்லை. சண்டை அழுத்தத்தில் எனக்கும் நினைவு வரவில்லை. என்ன செய்தாய் அகல்யா? இப்போது என்னோடு கதையேன்.

புயல் மையங்கொண்ட கடலாய் மனம் பேரலைகளை வீசிக் கொந்தளித்தது.

இருபத்தொன்பதுக்குப் பின்னுள்ள வடலிக்கருகே ஓலைகளால் மூடப்பட்டபடி அகல்யா, தொடைக் காயத்தால் குருதி குபுகுபுவென ஓட **PKLMG**யை உடனேயே உதவியாளரிடம் கொடுத்துவிட்டுத் தானே தன் காயத்துக்குக் கட்டுப்போட்டு நகர்வகழிக்குள் சாய்ந்தபடியே கண் மூடிப்போன **PKLMG** சுடுனர் ஆதிரை, எனக்கு விழவிருந்த சூட்டைக் குறுக்கே பாய்ந்து தன் தலையில் வாங்கிக்கொண்ட **PKLMG** இயக்குனர் அலையிசை எல்லோருமே இருக்கிறார்கள்.

''தங்கச்சி'' என்று யாரோ கனவில் கூப்பிட்டது போல் இருக்க, திடுக்கிட்டு விழித்து நேரத்தைப் பார்த்தேன். 3.40. எப்போது உறங்கினேன் என்பதே தெரியவில்லை. எழும்பி அப்படியே ஓலையில் இருந்தேன்.

''பணிசைச் சாப்பிடுங்கோ தங்கச்சி''

என்றவாறு தண்ணீர்க் கானைத் தந்தார்கள். இரண்டு நாட்களாகப் பல் துலக்காததால் வாய்க்கு பணிசின் சுவையே தெரியவில்லை.

அன்றைய பகல் சண்டையின்போது எனக்கு ஒரு வேலையுமே இருக்கவில்லை .எங்களுடைய எல்லா போட்டார்களுமே தமது அதியுச்ச திறமையை வெளிப்படுத்த, உள் நின்ற இராணுவம் ஓடத் தொடங்கியது. ஓடிய இராணுவத்தைத் தடுத்துச் சுட்ட படி, அவர்கள் உள்நுழைந்த பாதைகளில் நாம். முன்னே வந்தவர்கள் சூடுபட்டு விழுந்த விடயம் அறியாமல் பின்னே வருபவர்களும் அதே வழிகளிலேயே வந்து சூடு பட்டனர். தொகையாக ஓடி வரும் இராணுவம், சூடு விழத்தொடங்க பிரிந்து வலம், இடமாக ஓட முயற்சிக்கும்போது அடுத்தடுத்த நிலைகளில் நின்றவர்களுக்கு ''ஆள் வந்து உங்களைச் சந்திக்கும்'' என்று வோக்கியில் அறிவித்தது மட்டுமே நான் செய்த வேலை. தமது பாதைகள் முழுதும் தடைப்பட்ட நிலையில் திரும்பி உட்பக்கம் ஓடுவதும், மறுபடி பாதையை நோக்கி வருவதும், அடி விழ ஓடுவதுமாக இருந்த இராணுவம், ஒரு கட்டத்தில் கண்ணிவெடிகள் அகற்றப்படாத பகுதிகளூடே முட்கம்பிச் சுருள்களை பாய்ந்து கடந்து ஓட முற்பட, புதைக்கப்பட்டிருந்த எமது கண்ணிவெடிகளும் செப்பமாக அமைக்கப்பட்டிருந்த இடறு கண்ணிகளும் சூழ்ச்சிப் பொறிகளும் தம் பணியைச் செவ்வனே செய்யத் தொடங்க, என் மூளையில் மின்னலடித்தது.

அட அட அட! இவை இவற்றை இப்படி இப்படி வை என்று கண்ணி வெடிகள் விடயத்தில் அவர் தனிக் கவனம் எடுத்து, தளபதிகளிடம் நேரடியாகச் சொல்லி விளங்கப்படுத்தி எங்களை வேலை செய்வித்ததெல்லாம் இதற்காகத்தானா!

பாய்ந்து பாய்ந்து நாம் சுட்டதை விடவும், ஆற அமர யோசித்து அவர் போட்ட திட்டம் எதிரிக்கு அதிக சேதத்தைக் கொடுத்த ஆச்சரியத்தைப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

★★ ●● ★★

சேரா வண்ணும் நானும் முன்னணிப் பகுதியைப் பார்த்தவாறு நடந்துகொண்டிருந்தோம். காவலரண்கள் சரிந்து அல்லது குலைந்து சேதமடைந்திருந்தன. திருத்தவேண்டும். வேலி பிய்ந்து அல்லது எரிந்து போயிருந்தது. உடனேயே பச்சை யோலை வெட்டியாவது அடைக்கவேண்டும். வேலி விழுந்ததால் பதுங்கிச் சூட்டு அபாயம் அதிகரித்திருந்தது. நகர்வகழிக்குள் இறங்க முடியாது. குண்டடித்ததால் அகன்றும் தூர்ந்தும், அகற்றி முடிக்கப்படாத இராணுவச் சடலங்களால் நிறைந்தும் கிடக்கின்றது. பிணவாடை அடங்க ஒரு மாதமாவது செல்லும்.

எக்கோ லீமா வரிசையைக் கடக்கும்போது கால்கள் தாமாகவே நின்றுகொண்டன. இந்தச் சண்டையில் எதிரிகளை நான் முதன் முதலில் கண்ட இடம். ஏராளம் இராணுவம் எறிகணை வீச்சில் மாண்ட இடம். நிமிர்ந்தபடி கிடந்தது ஒரு இளைய சிங்களவனின் உடல். எம்மவர்களில் யாரோ ஒருத்தியின் குறி தவறாத சூடு அவன் நெற்றியைத் துளையிட்டிருந்தது. திறந்தபடி விறைத்திருந்தன அவன் விழிகள். அவன் கண்களையே பார்த்தபடி நின்றேன்.

இளைஞனே, யார் நீ?

எங்கிருந்து வந்து இங்கென் காலடியில் செத்துக் கிடக்கிறாய்?

இங்கே உனக்கு என்ன வேலை?

. . . ?
. . . ?
. . . ?

# சொல்லிக் கொடுக்க அப்பு இல்லை

## ● தமிழ்க்கவி

கதிர்க் கட்டுக்கள் கட்டுக் கட்டாக கட்டப்பட்டுக் கொண்டிருந்தன. அப்பு ஒவ்வொரு வயலுக்கும் வந்து வந்து அதட்டிக்கொண்டிருந்தார்.

''ஆ... கயறு போடு''

''கொண்டா''

''ஆ... ஓடிவா... எங்க''

''கயிறு போடு...இறுக்கு''

பாப்பாத்தி, மயிலம்மா, அயிலாண்டம், சுக்கிரன் ஒரு கட்டு. நான், தங்கச்சி திருப்பா, சின்னம்மா, பவானி ஒரு கட்டு. மாவக்கைகள் மளமளவென்று அடுக்க, ஒருவர் கயிறு போடுவார். இதைக் கட்ட, மற்றக் கயிறு விரிக்கப்படும். சுமார் ஆறு யார் நீளமான முறுக்குக் கயிறு இரண்டாக மடித்து மடிப்பில் கோலி ஒரு கொண்டை முடிச்சு. முடிச்சை ஒரு புறமும், முன் புறத்தை சுமார்ஒரு அடி அகலித்தும் விரித்து விட பக் பக்கென்று மாவக்கைகள் வரும்.

''ஆ... இந்தப் பக்கம்... ஆ கிடத்திவை சுக்... சுதிரால தட்டாத...'' ஐந்து மாவக்கை வந்தபின் கதிர் சிதறி விடாமல் இருக்க முடிச்சுப் பக்கத்தில் கையைப் பிடித்து அதனோடு கட்டை அணைத்துப் பிடித்துக் கொண்டே

''எடு கயத்த'' என முன்புறக் கயிற்றை கடைசி மாவக்கை வைப்பவர் எடுத்துக் கொடுக்க,

''கயித்த வெட்டித் தா''

கயிற்றின் இரு முனையையும் எதிரெதிர் பக்கமாக வெட்டியிழுத்து அவர் கையில் வைத்துவிட்டு அடுத்த கட்டுக் கதிர் வைக்க வேண்டும். குனிவதும் நிமிர்வதுமாக ஓட்டுத்தடபுடக்க நடந்து திரிவதும் அவ்வளவு சுலபமான செயல் அல்ல.

நான்கு வயல்வெளி தாண்டி முட்டுக் கட்டைகளுக்குப் பதுங்கிப் பதுங்கி உப்பட்டி கூட்டிக் கொண்டிருந்த தைலம் மாவும், நவமணியும் கூட நிமிர முடியவில்லை. அப்பு இடை இடையே பாய்ந்து பாய்ந்து மாவக்கைகளை அள்ளிக் கட்டில் வைத்து அழுத்தினார். ஒன்றன் பின் ஒன்றாக வைத்த கதிர் மார்பளவு வந்தும், இடக் கையால் முடிச்சைப் பிடித்து, முன் கயிற்றை வாங்கி, முழங்காலால் கட்டில் குத்தி, வலக்கையால் அமுக்க கட்டு இறுகி இரு புறமும் விசிறி கட்டி இடை சிறுத்து தொடை உயரத்துக்கு குறுகிவிடும்.

கதிர்க்கட்டு இறுக்கிறதுக்கு சுக்குருவனைக் கேட்டுத்தான் மாவக்கை சேர்த்துக் கட்டினா ஒரு கட்டுக்க ரெண்டு மரக் கால் நெல்லு வரும். சொல்லியடிச்சிருக்கிறம்.

கட்டிறுக்கக், கட்டிறுக்க பொழுது படக்க பார்த்தா கை ரத்தங் கசியும். குளத்துக்க இறங்க, ஒட்டுக் குத்தின சிராய்ப் புகளும், தொட்டவாடி கிழிச்ச இடங்களும், கையுமா, மிளகா அரைச்சுத் தேய்ச்சமாதிரி... திகுதிகுவெண்டு எரியும். அதுவே ஒரு ஆனந்தமான சுகம். இல்லையெண்டு சொல்லேலாது. அனு பவிச்சவைக்குத்தான் தெரியும்.

அது போலத்தான் இந்தக் கட்டைக் காட்டுக்க எரியாத முள்ளுகள் கிடந்து கால்ல தைக்கும்... என்ன கடுப் புக் கடுக்கும். நடந்து நடந்து காய்ச்சுப் போன காலில, 'அலுப் புநத்தியால' கிண்ட அலுப்புநத்தி வளையும். முள்ளெடுக்கிற தெண்டால் படு குசியான வேலை. ஆ... ஊ... வென்று கத்தி மண்டிபோட்டிருந்து முதுகை வளைத்து குதிக்காலைக் கிண்டி... முள்ளு வராவிட்டால் சாணகப் பாலாவியைக் கிள்ளி அதன் பாலை குத்து வாயில் விட்டு அது ஊறிய பிறகு கிண்டி எடுக்க லாம்.

அவரவர் காலில் உள்ள முட்களை எடுத்துப் பட்டியல் போடும் போதும்... அது ஒரு இன்பம் தான்.

''சூ... காரை முள்ளடா''

''அநியாயப் படுவான்ர என்ன கடுப்படா''

''உதென்ன கடுப்பு? விடத்தல் குத்தினா காச்சலே வரும்.'' இது அப்பு.

''எனக்கு விளாத்தி முள்ளே குத்தியிருக்கு''! அப்பு முள்ளைப் பார்த்தவுடனே சொல்லுவார் அதென்ன முள் ளெண்டு.

பத்து மணிக்கு முன்னாக பழஞ்சோத்துத் தண்ணி, பச்சை மிளகாய் வெங்காயம், வெட்டிப் போட்டு, எலுமிச்சம் புளியும், கணக்கான உப்பும் சேர்த்துக் கரைத்து, ஒரு பெரிய பானையில் வரும். அம்மா அதை ஒரு பாலை மரத்தடியில் வைத்தால், எல்லோரும்கூடி அதை வயிறாரக் குடித்துவிட்டு, வெற்றிலைக் காரர் வெற்றிலை. [பீடிக்காரர் பீடி என்று,

உசார் போட்டுக் கொண்டுமறுபடி இறங்குமுன், நாங்களும் எங்கள் பங்குக்கு புத்துவாட்டியில் மணத்தக்காளிப்பழம், முட்டைத் தக்காளி, பூனைப்பு...கு பழம் கெக்கரிப்பழம் என்று நொட்டுத் தீன் தேடி உண்போம்.

''சீ...க ழுதையளே ஏன் வெயிலுக்க திரியிறியள். ஆரச் சொல்லி விட்டா...ங''

அப்பு அதட்டுவார். அதென்னவோ நாங்கள் அப்புவுக்குச் சரியான பயம். உந்தக் கொதி வெயிலெல்லாம் போட்டு வாட்டுவார். தான் மட்டுமென்ன? வெயிலெண்டாலும்சரி, மழையெண்டாலும் சரி எந்த நேரமும் வேலைதான்.

வருசா வருசம் வைகாசி பிறந்தா புதுக்காட்டுக்கு கொப்பு நேரி வச்சிருவார். ஆனிக்கு நாள் பார்த்து காட்டுக் கத்திக்குப் பிடியிறுக்கி எடுப்பார். அண்டைக்கே தீட்டுக் குத்தியும் போட்டு நாளுக்கு வெட்டத் தொடங்குவார். காடு வெட்டி ஆடிக் காத்தெழும்பத் தான் கொளுத்துவார். பச்சைக் காட்டிலேயே மரங்கள் பத்தையளை கொப்பு நெரிச்சு விட்டால் நல்ல மொருமொருக்க காஞ்சுபோய்க் கிடக்கும். மழை வரவுக்கு முதல் அயல் அட்டைக்குச் சொல்லிப் போட்டு காட்டுக்கு நெருப்பு வைப்பார்.

அயலட்டைக்குச் சொல்லாமல் காடு கொளுத்தக் கூடாது. முன்ன ஒருக்கா உவர் பொன்னுத்துரையர், துலைக்காடு தானே யெண்டு போட்டு அயலுக்குச் சொல்லாம காடு கொளுத்திவிட சுழிக்காத்தில தீக்கங்கு ஒண்டு வந்து கார்த்திகேசுவின்ர காணிக்க விழுந்ததில, புல்லுப் பத்தி வேலிக் கட்டையளை எரிச்சுப் போட்டுது. சொல்லிப் போட்டு கொளுத்தினா, எல்லோரும் எச்சரிக்கையா இருப்பினம். மழை வந்திட்டால் கொப்புகளில இருக்கிற இலை கொட்டுண்டு போம். கொளுத்தி முடிக்கேலாது. படுகாடு பத்திப் போம்.

ம்...இதெல்லாம் இப்ப நினைச்சு என்னெயிறது... நல்ல மானம் பார்த்த நிலம்... தாராப் பள்ளமெல்லாம் நிரவி வயல் செய்தம். எது? ஒதியமலைக்குக் கீழ அந்த முதிரை மரத்துக்கும் பாலை மரத்துக்கும் இடையால போற ஒற்றை அடிப்

பாட்டில எப்பன் உள்ளுக்காத்தான் காணி.

அப்பு குளுவனுக்கு வேலியடைக்கேலாதெண்டு காட்டு வேலிதான் ம்... நிண்டது நிக்க... சிங்களக் காலியள் பைனியப் படைமாரி வந்து பூந்தாங்கள். ஆட்டை வெட்டி மாட்டை வெட்டி ஆளை வெட்டி...ம்... எல்லாச் சனமும் வெளிக்கிட்டுது. ஆமி பூந்திட்டானெண்டு.

அப்பு? அப்புவ தம்பிய சைக்கில்ல ஏத்திக்கொண்டு வாடாஎண்டு போட்டு பெட்டியாத் தூக்கிக்கொண்டு நடக்கத் துவங்கிற்றம். ஆனா... அப்பு.

அப்புவையும், தம்பியையும் காணயில்லை... காட்டுக் கரையில வந்து நிக்கிறம். பொழுது படுகிது.

சின்னவளின்ர அக்குளுக்க எங்கட சிவத்தப் பேடும்... பொரி வெள்ளைச் சேவலும் கண்ணை மூடிக் கொண்டு இருக்குதுகள். சேவலுக்குச் சிவத்தப் பேடு தாய்தான். அதுதம் இருவத்தைஞ்சு முப்பது கோழியளுக்குத் தாய். காலம கூட்டத் திறந்தா கிலுமொலு கிலுமொலு வெண்டு காலைக் சுத்திக் கொண்டு திரியும். சூட்டடிப்புக் களத்துல அள்ளிக் கொண்டு வந்த அரை வயிறனை இதுகளுக்கெண்டே கொட்டி விட்டிருக்கும். அவைக்குக் குத்தின அரிசி தான் வேணும்... இஞ்சால விலத்துங்கோடி விலத்துங்கோடி எண்டு மனிசரோடை கதைக்கிற மாதிரி கதைச்சுக் கதைச்சு அப்பு, அரிசியை அள்ளிப் போடுவார்.

வரிச்சால வரிஞ்சு கட்டின கூட்டுக்கை வைக்கலப் பரவி விடுவன் சிவத்தப்பேடு முட்டைக்குப் படுத்தா, நான் பெத்த சின்னவள் கூட்டுக்கருகிலேயே நிப்பாள். உடம்மை ஒடுக்கிக் கொண்டு முட்டை போட்ட கோழி கொக்கரிக்க, முட்டையை எடுத்திடுவாள். ஒரு ரோஸ் நிறத்தில அவளின்ர கையால பொத்தி மூடேலாத பெரிய முட்டை. ஒரு விதமான கோழி மணம் எனக்கும் பிடிக்கும். கதகதப்பான சூட்டை நெஞ்சோட அணைத்து சந்தோசப்படுவாள். மிக மிகநுட்பமாக நடந்து போய் அப்புவெட்டக் குடுப்பாள்.

அப்பு எல்லாம் சேர்ந்த பிறகு அடை வைச்சா... கனக்கக் குஞ்சு வரும் ஓ... அதுகள் எவ்வளவு வளர்ந்து வந்திட்டுதுகள்...

ஒரு நாள் மழை பெய்த இரவில... சிங்களவர் வந்து கூட்டுக்க கிடந்த எல்லாத்தையும் கொண்டு போட்டாங்கள்.

சிவத்தப் பேடு அடை... அதால அது வீட்டுக்க கிடந்து தப்பீற்றுது... அ... பொரி வெள்ளைச் சேவல், கள்ளன் கூட்டில் அடையாது. மாமரத்திலதான் அடையும் அதுகும் தப்பீற்றுது.

''என்ன இன்னும் அப்புவ காணேல்ல... தம்பியையும் காணேல்ல எண்டு பார்த்துக் கொண்டிருக்க தம்பி மட்டும் வாறான்.''

''ஏன்ரா...''

''அப்பு தண்ணிய போட்டிட்டு...'' 'சனி மனுசன் குடியை விடாது.'

''நான் வெட்டின காணியை விட்டிட்டு வரமாட்டன் எண்டு பாதி வழியில இறங்கித் திரும்பிப் போட்டார்.'' எனக்கு இடி இறங்கின மாதிரி இருக்கு.

''அப்பூ... ஐயோ என்ர அப்பூ எடேய்... வில்லங்கமா கொண்டு வராம... அவங்கள் வந்திட்டாங்கள்... இப்ப என்னெண்டு போய்த் தேடுற... ஓ... ஐயோ... அந்தாள் கஸ்டப்பட்ட நிலம் அது தான் அதுக்கு உயிர்... எட நிலம் எப்பவும் கிடக்கும், உயிர்?

எனக்கு காலெல்லாம் நடுங்குது. அம்மா சாக, என்னை எப்படி வளர்த்தாயப்பூ... மீன் முள்ளு ஒருநாள் தொண்டைக்க பொறுத்திட்டுது... பிறகு பயந்து நான் மீன் தின்னமாட்டன். அப்பு முள்ளெடுத்து... இஞ்ச பாரம்மா நல்ல மீன்... தின்னு... அப்பு வெல்லே தாறன் தின்னு தின்னெண்டு தீத்தி விடுவாய். இறைச்சி பல்லுக்க பூந்திடுமெண்டு ஈரலாத் தீத்துவாய். குளிக்க வாத்துத் துடைச்சு புசர்மா பூசி இருத்திப் போட்டுத்தான் நீ குளிப்பாய்... இப்ப...

உன்னை விட்டிட்டு நாங்கள் தப்பீற்றம். அப்பூ... வாணை... வாணை... தம்பி... போடா அவரைக் கட்டிலோடை யெண்டாலும் தூக்கிக்கொண்டு வாடா... ஐயோ அப்பூ...

ஆனா அவன் போகேலாது. அங்க அவங்கள் வந்திட்டாங்கள்... நானும் போகேலாது. எனக்கு என்ர உசிர் பெரிசு. பாசம் தன்னை மறைச்சிட்டுது. வந்திட்டம்.

கனநாள் அப்பூ... அப்பூ... எண்டு அழுதம். ஒரு வருசமா, ரெண்டுவருசமா பதினைந்து வருசம்.

தம்பி இயக்கத்துக்குப்போய் ரெண்டு வரியத்தில எங்கள மாவீரர் குடும்பமாக்கிப் போட்டான்.

ஓடிவரக்க சிவத்தப் பேட்டையும், பொரி வெள்ளச் சேவலையும் அக்குளுக்க வச்சுக்கொண்டு, கால் உளையுதம்மா, கால்உளையுதம்மா எண்டு அழுதழுது வந்த சின்னவன் இப்ப ஓயாதலை மூண்டில ஒதியமலையும் கடந்து தூரப் போய் நிக்கிறான்.

அவனுக்கு இது தன்ர ஊரெண்டு தெரியும். இது உன்ர வீடெண்டு சொல்லிக் குடுக்க அங்க அப்புவும் இல்லை... வீடும்...

❋❋❋❋❋❋

படுகாடு :- முற்றாக எரியாமல் தொட்டம் தொட்டமாக மிஞ்சுதல்
உப்பட்டி :-வெட்டிப் போட்ட அருவி நெல்
மாவக்கை :-கூட்டிக் குவித்த நெற்கதிர்க் குவியல்
கொப்பு நேரி :-வெட்டப்படும் காட்டுக்குப் போடப்படும் எல்லை- கோடாக வெட்டி விடல்.
ஒட்டு :-நெல் வெட்டிய அடிக்கட்டை.
முட்டுக்கட்டை;-மரங்கள் வெட்டிய அடிக்கட்டை நிலத்தில் நிற்கும் பகுதி
மரக்கால் :-முற்கால நெல் அளக்கும் அலகு
அலுப்புநத்தி :-சட்டைப்பின்
அரை வயிறன் ;-நெல்லில் முழுதும் பதராகாமல் அரை அரிசி கொண்ட நெல்

# மனைவி என்ற பெண்

● ஆதிலட்சுமி சிவகுமார்

"ரீ ற்ரீற்... ரீற்ரீற்... ரீற்ரீற்..."

தலையணைக்கு கீழிருந்த கைக்கடிகாரத்தின் வழமையான ஒலிச்சமிக்ஞை சாருமதியை விழிப்பூட்டியது.

உடம்பு அடித்துப்போட்ட மாதிரி வலித்தது. அவள் தனக்குரிய அன்றைய வேலைகளை நிரலிட்டபடி அசையாமல்படுத்திருந்தாள்.

'சாரு... சாரு...'

கணவன் மெதுவான குரலில் அழைத்தான்.

'ம்...'

'எலாம் அடிச்சிட்டுது... எழும்புமன்... நேரமெல்லே போகுது...' கூறிவிட்டு அவன் போர்வையை இழுத்துப் போர்த்துக்கொண்டு திரும்பிப்படுத்தான்.

சாருமதி எழுந்து வெளியே வந்தாள் பனிக்குளிர் சில்லிட்டது. பின்நிலவின் தண்ணொளியில் பக்கத்து வீடு பதுங்கிக் கிடப்பதுபோல தெரிந்தது.

வாசலில் கால்துடைப்பதற்காக போடப்பட்டிருந்த சாக்கில் அவர்களின் ''ஜோன்'' கால்களுக்குள் முகத்தைச் சுருட்கொண்டு படுத்துக்கிடந்தது.

கால்களில் செருப்பை மாட்டிக்கொண்டு பின்பக்கம் போய்வந்தாள். கிணற்றுத் தண்ணீர் கதகதப்பாயிருந்தது. கால்முகம் கழுவிக்கொண்டாள்.

கணவனின் மோட்டார்சயிக்கிள் குட்டியானைபோல விறாந்தைக்குள் நின்றுகொண்டிருந்தது. அவர்களின் இரண்டு வயது நிரம்பிய மகன் யதுஷன் தலையணையை அணைத்தபடி தூங்கிக் கொண்டிருந்தான். அவனது வலதுகைப் பெருவிரல் வாய்க்குள்ளிருந்தது.

அவள் அடுப்படிக்குள் நுழைந்தாள்.

கைவிளக்கின் வெளிச்சத்தில், இரவு கழுவிவைத்த பாத்திரங்கள் பளபளத்தன. அவள் சிறுவிறகு துண்டுகளையும், கடதாசியையும் கொண்டு அடுப்பை மூட்டினாள்.

கேற்றில் தண்ணீர் கொதிப்பதற்கிடையில் அவள் முற்றம் கூட்டிவிடவேண்டும். இருள் பிரியவில்லை. என்றாலும் அவள் முற்றம் கூட்டினாள்.

கைகளைக் கழுவிக்கொண்டு- யதுஷனுக்கு பால்கரைத்தாள். எழும்பியவுடன் பால்போத்தலை அவன் வாய்க்குள் செருகிவிட்டால்தான் அவள் மிகுதிவேலை செய்யமுடியும்.

கணவன் எழுந்து வாய் கொப்பளிக்கும் சத்தம் கேட்டது. அவனுக்கு காலையில் ரீ பிடிக்காது. பிளேன்ரீ கலக்கினாள். அவனிடம் தேநீரைக் கொடுத்துவிட்டு, காலை உணவு தயாரிப்பதில் முனைந்தாள்.

அவள் கணவன் வானொலிப்பெட்டியை காதுக்கருகில் பிடித்துக்கொண்டு அமர்ந்திருந்தான்.

'வவுனியா ஓமந்தை ' மாங்குளம் பாதை திறந்திட்டா ஒருக்கா அங்கால போய் வரலாம்...' என்ற எதிர்பார்ப்போடு அவன் தினமும் றேடியோச் செய்திகளைக் கேட்டான்.

'தங்கச்சீ... தங்கச்சீ...'

படலையடியில் நின்று பால்கார ஐயா கூப்பிட்டார். சாருமதி ஜக்கைத் தூக்கிக் கொண்டு ஓடிப்போய்- பால் வாங்கினாள்.

'அம்... மா.. ஆ...'

யதுஷனுக்கு அருகே போய்- கரைத்துவைத்திருந்த பால்நிரம்பிய போத்தலை வாயில் செருகினாள். தூக்கத்தில் கையால் பால்ப்போத்தலை அணைத்தபடி மீண்டும் யதுஷன் அயர்ந்தான்.

அவள் இப்போது காலை உணவை ஆக்கி முடித்திருந்தாள். அவன்-அவள் கணவன் ''உள்''ளே இருந்துவரும் வாரப் பத்திரிகை ஒன்றில் ஆழ்ந்திருந்தான்.

அவன் தேநீர் பருகிய ஜக் அவன் அமர்ந்திருந்த கதிரையின் காலடியில்கிடந்தது.

அதை எடுத்துக் கழுவி குசினிக்குள் வைத்தாள்.

மகனின் உடுப்புகளையும் எடுத்துக் கொண்டு அவள் கிணற்றடிக்குப் போனாள்.

மரங்களின் தலைகளை ஊடுருவியபடி... சூரியன் மேலெழுந்து கொண்டிருந்தான். மளமளவென்று அவள் அந்தச் சின்னச் சின்ன உடுப்புகளுக்கு ''சோப்'' பூசினாள்.

யதுஷனுடைய அலுவல்களை செய்யவும்- அவனைப் பராமரிக்கவும் உதவிக்கு ஓர் அம்மாவை அமர்த்திக் கொள்ளலாம் என ஒரு நாள் கணவனிடம் கேட்டாள்.

'உமக்கென்ன விசரே சாருமதி?... வேலையாளுக்கு சம்பளமெல்லே குடுக்கவேணும்?...'

'எனக்கு விடிய நாலு நாலரைக்கு எழும்பி வீட்டுவேலையளும் பாத்து... வேலைக்கும் சயிக்கிள் ஓடி...பிறகும் வந்து வீட்டு வேலையள் செய்து... ச்சீ... மிசின் மாதிரி...'

'நீர் ஒவ்விசில கதிரை மேசையிலை இருக்கிறது தானே.. இவ்வளவு வேலையளோட... கூலிவேலை செய்யிற பொம்பிளயளும் சீவிக்கினம் தானே...'

அவனுக்கு அவளால் பதில் எதுவும் சொல்லமுடியவில்லை கண்ணீர் நிரம்பியது.

அவள் இரவு முழுவதும் சப்தமின்றி அழுது அழுது உறங்கிப் போனாள்.

யதுஷன் இப்போது பெரிய குரலில் அழுதான்.

'அம்மா குளிக்கிறா யது... பேசாம படுங்கோ...' அவன் கூற யது இன்னும் பெரிதாக அழ ஆரம்பித்தான்.

'சாரு... சாரு...'

'ஓம்...'

'யது அழுறானப்பா... குளிச்சு முடியேல்லையே...'

'முடியுது... வாறன்...'

குளியலை நிறுத்தி...ஈரம்துடைக்காமலே... பாவடையில் நுழைந்து ஓடினாள்.

யதுஷனை சமாதானப்படுத்திக் கொண்டே... சாறி கட்டினாள். 'யதுக்குட்டிக்கு அம்மா கேக் வாங்கித்தருவன்... அழாம அப்பாவிட்ட போய் முகம் கழுவுங்கோ...'

அவன் எதுவும் கூறாமல் பத்திரிகை படித்துக் கொண்டிருந்தான். அவனுக்கு ஒன்பது மணிக்குத்தான் வேலைக்குப் போக வேண்டும்.

அவள் வாழை இலையை விரித்துவைத்து தனக்குரிய மதிய உணவைக் கட்டினாள்.

'யதுவுக்கு சுடுதண்ணி கலந்தாச்சே சாரு...'

'கலக்கப் போறன்...'

சுடுதண்ணீர் கலந்து கொடுத்தாள்.

யதுவை வேலைக்குப் போகும் வழியில் இருக்கும் ஒன்று விட்ட அக்கா வீட்டில் விட்டுவிட்டுத்தான் அவள் போகவேண்டும்...

கணவனுக்குரிய உணவை மூடிவைத்துவிட்டு, யதுவை சயிக்கிள் முன் கூடையில் இருத்தியபோது- அலுவலக நேரத்துக்கு இன்னமும் பதினைந்து நிமிடங்கள் இருந்தன.

'அப்பாக்கு டட்டா சொல்லுங்கோவன்...'

'அப்பா... டட்... டா ஆ...'

'ஓம்... போட்டு வாங்கோ... டட்டா...'

குன்றும் குழியுமாக இருந்த வீதியில் அவளுடைய சயிக்கிள் இறக்கைகள் பூட்டிக் கொண்டு பறந்தது.

முன்னால் பேரிரைச்சலோடு... காதுச்சவ்வுகளைக் கிழிக்கும் சத்தமிட்டபடி... வந்த லொறி... புழுதியை இழுத்துக்கொண்டு ஓடியது.

'அம்மா... மண்...'

யதுஷனின் கண்ணைத்துடைத்தபடி... பயணம்தொடர்ந்தது. வீதியின் இருபுறமும் பரந்துகிடக்கும் வயல் வெளிகளில் நெற்கதிர்கள் தலைசாய்த்து நின்று கொண்டிருந்தன...

அவள் யதுஷனை அக்காவீட்டுப் படலையடியில் இறக்கிய போது... இறங்கமறுத்து அவன் வீரிட்டு அலறினான்.

'யதுக்குட்டிக்கு அம்மா கேக் வாங்கிக் கொண்டுவாறன்...' அவன் இன்னும் வீரிட்டு அழுதான்.

'அப்ப வாங்கோ... அம்மா ஊசிபோடப்போறன்... யதுஷனுக்கும் ஊசிபோடுவம்...'

அழுகை அடங்க... அவன் மிரண்டுபோய் பெரியம்மாவின் தோளில் சாய்ந்தான்.

சாருமதி சயிக்கிளை உன்னிமிதித்தாள். மனது கனத்துச் சோர்ந்தது. யதுஷனுக்கு காச்சல் வந்தபோது... மருத்துவமனையில் இரண்டு தடவைகள் அவனது விரல் நுனியில் குத்தி இரத்தம் எடுத்துப் பரிசோதித்தார்கள். அந்தப் பயம் அவனை வழிக்குக் கொண்டுவர அவளுக்கு உதவியது.

சாருமதி அலுவலகத்துக்குள் நுழைந்தாள். வரவுப் பதிவேட்டில் சிகப்புக் கோடு இடப்பட்டிருந்தது. எல்லா நினைவுகளையும் உரித்துப் போட்டுவிட்டு, அவள் வேலைகளில் ஆழ்ந்தாள்.

ஆனாலும், மனமோ அந்தரித்து அலைந்தது.

'அக்கா...காலமை துவக்கம் உங்களைப் பாக்கிறன்... ஒரு மாதிரியா இருக்கிறியள்... ஏன்... யதஷனுக்கு ஏதும் சுகயீனமே?...' தொண்டைவரை திரண்டு வந்த துயரத்தைஅவள் பக்குவமாக மென்று விழுங்கினாள்.

திருமணமாகாத அலுவலக நண்பியிடம் குடும்பச் சுமைகளைப் புலம்புவதை அவள் விரும்பாதவளாயிருந்தாள்.

மதிய உணவாகக் கொண்டு வந்த காலை உணவு உள்ளிறங்க மறுத்தது. யதுஷனின் பயந்து மிரண்ட முகம் மனதுள் வந்துவந்து துயரப்படுத்தியது.

அவள் அலுவலகத்தைவிட்டு வெளியே வந்தபோது ஐந்து மணி ஐந்து நிமிடங்களாகியிருந்தன.

யதுஷன் முகம்கழுவி வீடு செல்வதற்கு தயாராக நின்று கொண்டிருந்தான்...

'அடுப்பில தண்ணி கொதிக்குது...வா வன் கோப்பி ஊத்திதாறன்...'

அக்கா பாசத்தோடு அழைத்தாள்...

'வேண்டாம்...வீட்டை நிறைய வேலை கிடக்கு...'

'எப்பபாத்தாலும் உனக்கு வேலைதான்...போ...'

சாருமதி யதுஷனையும் ஏற்றிக் கொண்டு வீட்டிக்குப் புறப்பட்டாள்.

வயல்வெளிக்கு அருகிலிருக்கும் சிறிய பிள்ளையார் கோயிலில் பூசைக்காக ஊர்ப்பெண்கள் சிலர் கூடியிந்தார்கள். இரண்டு பேர் பொங்கிக் கொண்டிருந்தார்கள்.

சாருமதி படலையைத்திறந்து... உள்ளே வந்தாள்.

முற்றத்திலும்- வீட்டுத்திண்ணைகளிலும் கோழிகள் எச்சமிட்டிருந்தன. முற்றமெங்கும் குப்பைகள் இறைந்திருந்தன.

வீடு திரும்புதல் அவளுக்கு முடிவில்லாத் துயரமாயிருந்தது. பூக்கள் வாடிக்கிடந்தன.

அவள் உடைமாற்றிக் கொண்டு யதுஷனுக்கு பால் கரைத்துக் கொடுத்தாள். யதுஷனுக்கு முன்னால் விளையாட்டுப் பொருட்களை பரப்பிவிட்டு, வீடுவாசல் துப்பரவு செய்வதில் மூழ்கினாள்.

அவள் கைகால்களைக் கழுவித்துடைத்துக் கொண்டுவந்தாள். இரவு எண்ணையில்லாமல் லாம்பு அணைந்தது ஞாபகத்தில் வர லாம்பை எடுத்து எண்ணைவிடத் தொடங்கினாள்.

'அம்மா... ஊக்குங்கோ...' யதுஷன் கால்களைப் பிடித்துக்கொண்டு அழுதான்.

'லாம்பு சுடும்...அங்காலை போங்கோ...'

அன்பாய் குழந்தையை தூக்கக்கூட அவகாசமில்லாதன் இயந்திர வாழ்க்கையின் மீது அவளுக்கு வெறுப்பாயிருந்தது.

இரவு உணவு தயாரிப்பதானால் யதுஷனை நித்திரையாக்கி விட வேண்டும். ஆனால்- அவனோ அம்மாவோடு விளையாட எத்தனித்தான்.

'குழந்தைகளுக்குப் பயங்காட்டக்கூடாது' என்கின்ற உளவியலை அவளும் படித்தவள் தான். ஆனாலும்-

'அந்தா... காலில்லாத அப்பு வருது...'

பயங்காட்டித் தூங்கவைத்தாள். விமானத்தாக்குதலில் ஒற்றைக்கால் இழந்த அந்த வயோதிபர் ஊன்றுகோலுடன் பாய்ந்துவருவதைக் கண்டால் அவனுக்கு பயம். ஐந்து நிமிடத்தில் அவன் தூங்கிப்போனான்.

அவள் இரவு உணவுத் தயாரிப்பில் ஈடுபட்டாள்.

மல்லிகைப்பூவின் வாசம் காற்றிலேறி வந்து அவள் நாசிகளில் உரசியது. அடுப்பு அவள் மனதைப்போலவே சலிப்புடன் எரிந்து கொண்டிருந்தது. அவளுக்கு அம்மாவோடு இருந்த அந்த நாட்கள் நினைவில் ஊறின. பரீட்சைக்கு அவளைப் படிக்கவைப்பதற்காக - அவளோடு சேர்ந்து அதிகாலையில் எழுகின்ற அம்மா...

இரவு பன்னிரண்டு மணிவரை அவள் படித்துக் கொண்டிருக்க... தூங்காமல் அவளோடு சேர்ந்து முழித்திருக்கும் அம்மா...

ஆனால்- அந்த அம்மா ஊரில் நோயோடு போராடி-மரணித்தபோது அம்மாவின் அருகில் இருக்க அவளால் தான் முடியவில்லை.

அவள் கண்கள் கன்னத்தில் கோடுகீறின.

**வா**சலில் அவள் கணவனுடைய C-90 வந்து நின்றது. அவன் இறங்கி உள்ளே வந்தான்.

அவனுடைய தலையிலும்... உடுப்புகளிலும் செம்மண் புழுதி படிந்து கிடந்தது. அவனைப் பார்க்க அவளுக்குப் பாவமாயிருந்தது.

'சூடா ஒரு பிளேன்ரீ ஊத்துமன்...' அவன் சேட்டைக் கழற்றியபடியே சொன்னான்.

'கால் முகத்தை கழுவிட்டு வந்தா... சூடாகப் புட்டுச் சாப்பிடலாம்... சாப்பாட்டு நேரமாச்சு தானே...'

'ஏலாம இருக்கப்பா... முதல் ஒரு பிளேன்ரீ தாரும்...'

அவள் பரணில் கழுவிவைத்த ஜக்கையும், சில்வரையும் எடுத்துக் கொண்டு போனாள்.

'அம்மாவீட்டை போட்டு வாறியளோ?... இல்லாட்டி...'

அவனுடைய தாய்வீடு அவன் வரும் வழியில் இருப்ப தால் கேட்டாள். 'ச்சீ...ஒருடமும் போகேல்லை... உதுக்கு காத்துப் போட்டுது... நிண்டு வாறன்...' C-90 ஐக் காட் டிச் சொன்னான்.

அவன்பிளேன்ரீயைக் குடித்துவிட்டு வியர்வையைத் துடைத் தான்.

அவள் கறியை பாத்திரத்தில் எடுத்து வைத்து விட்டு... கரிச்சட்டியை கழுவினாள்.

கணவன் சாப்பிட வருவதற்குள் காலைச் சமையலுக் கான காய்கறிகளை வெட்டி, வெங்காயமும் உரித்துவைத்து விடலாம் என நினைத்து மரக்கறிக் கூடையைத் தூக்கினாள்.

அவன் சாப்பிடுவதற்காக வந்தான்.

'புட்டுக்கு என்ன கறி?...'

'தக்காளிப்பழம் குழம்பு.. முட்டைப் பொரியல்...'

அவன் கட்டையை இழுத்துப்போட்டு அமர்ந்தான்.

'நீரும் சாப்பிடுமன்...'

'சாப்பிட்டா வேலை செய்ய ஏலாது... தூங்கும்... குசினி வேலையளை முடிச்சிட்டு சாப்பிடுவம்...'

அவன் சாப்பிட்டான். குடிப்பதற்கு தண்ணீர் எடுத்து வைத் தாள்.

'மகாலிங்கண்ணயின்ர கடைசிப் பிள்ள வாட்டிலையாம்... யதுவை வடிவாப் பாத்துக் கொள்ளும்... எங்களுக்கு உதவிக் கும் ஆக்களில்லை...'

அவள் காய்கறிகளையும் வெட்டி, வெங்காயம் உரித்து, காலைச் சமையலுக்கு தண்ணீர் அள்ளிவைத்து விட்டுச் சாப்பிட்டாள். கைவிளக்கு குற்றுயிராகிக்கொண்டிருந்தது.

அவள் மிகுதிக் கறியையும் புட்டையும் குழைத்து-குசினி வாசலில் நின்று கொண்டிருந்த ஜோனுக்கு வைத்தாள்.

வேறு ஏதாவது வேலைகளை தவறவிட்டிருப்பாளோ என்று ஒருதடவை பார்த்துவிட்டு - மின்னிக்கொண்டிருந்த கை விளக்கை அணைத்தாள். கதவை சாத்தி சங்கிலிப்பூட்டால் பூட்டினாள்.

கணவன் யதுஷனுக்கு அருகில் தூங்கிக்கொண்டிருந்தான். லாம்பு வெளிச்சத்தில் ஆழ்ந்து தூங்கிய யதுஷனைப் பார்த்தாள்.

'பாவம்... பிள்ளைக்கெண்டு ஒரு அஞ்சுநிமிசம் ஒதுக்கி... அதோட விளையாட ஏலாமக் கிடக்கு...'

துயரம் கவ்வியது.

லாம்பைக் குறைத்து மூலையில் கொளுவிவிட்டு- வெளிக்கதவையும் உள்பக்கமாய்ப் பூட்டினாள்.

மெதுவாக யதுஷனுக்கு அருகே சரிந்தபோது கண்கள் தூக்கத்துக்காகக் கெஞ்சின. அவள்மீது கணவனின் கரமொன்று விழுந்தது.

# பக்கங்கள் இரண்டு

## ● மலரன்னை

காலை வேளை, எனது மிதிவண்டி மெதுவாகப் போய்க் கொண்டிருந்தது.

7.09

அப்பாடா:.. இன்னும் ஏறக்குறைய ஒரு மணித்தியால இடைவெளிக்குள் எத்தனை வேலைகளை முடித்து...8.15க்கு நான் பாடசாலையில் நிற்க வேண்டும்.

என்னையறியாமலே கால்கள் வேகமாகச் செயற்பட, மூச்சுச் சற்று இரைக்குமாப் போல் இருந்தது.

வீட்டை அடைந்த போது, அம்மா அப்போதுத தேங்காய் துருவிக்கொண்டிருந்தாள்.

''ஏனம்மா இன்னும் சமையல் முடியேல்லையே?''

''கறியெல்லாம் வைச்சிட்டன் பிள்ளை, இனி பிட்டுத் தான் போட்டு இறக்க வேணும். அடுத்த அடுப்பில சோறு வேகுது.''

பிரபலமான கல்லூரி ஒன்றில், அறுபதுக்கும் மேற்பட்ட ஆசிரியர்களுக்கும், ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கும் அதிப ராக நின்று செயலாற்றும் இந்த அம்மா, எங்கள் வீட்டுச் சமையலைச் சமாளிக்க படும் அவஸ்த்தையை எண்ணி என் மனம் ஒரு கணம் சஞ்சலப்படுகிறது.

''விடுங்கோ அம்மா. நான் பிட்டைப் போட்டு இறக்கி றன். நீங்கள் போய் வேற வேலையைப் பாருங்கோ.''

அம்மாவிடமிருந்து பிட்டு அவிக்கும் வேலைகைமாறுகிறது. நான் குழலில் பிட்டைப் போட்டுவிட்டு ஆவி மேலோங்கி வரு கிறதா என்பதை அவதானிக்கின்றேன்.

அந்தக் கணத்தில் என் மனம் அப்பாவை ஒரு தரம் எடை போடுகிறது. அவருக்கு குழலில் தான் பிட்டு அவிக்க வேணும். அல்லது அவருக்குச் சாப்பாடு பிடிக்கவில்லை என்று சொல்ல மாட்டார். 'பசிக்கேல்ல' சுருக்கமாய் ஒரே சொல் லில் கத்தரித்துக் கொள்ளுவார். அம்மாவும் குறிப்பிட்ட நேரத் தில் வேலைக்குப் புறப்பட்டுப் போக வேண்டுமென்ற ஆதங் கம், அவரிடம் துளியும் இருப்பதாக எனக்கு நினைவில் இல்லை.

ஒருவாறாக வேலையை முடித்துக் கொண்டு நான் குளிப் பதற்குப் புறப்பட்டேன். அம்மா, பாத்திரங்களை அலம்பிக் கொண்டு வந்து வைத்தாள்.

''என்னம்மா தைலம் மணக்குது போட்டனீங்களோ?''

''ஓம் பிள்ளை. என்னவோ காலையில எழும்பினதில இருந்து ஒரே தலையிடியாய்க் கிடக்கு.''

''அப்படியெண்டால்... அம்மா நீங்கள் இண்டைக்கு லீவைப் போட்டிருக்கலாமே...'' ''இல்லையம்மா சிந்து. இண்டைக்கு வலயத்தில... அதிபர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இருக்குது. கட்டாயம் நான் அதில கலந்து கொள்ள வேணும். ஏனெண்டால் முக்கியமான சில கருத்துக்களை நான் முன் வைச்சால்தான் சில பிரச்சனைகளை சுமூகமாய்த் தீர்க்கலாம். எல்லோரும் என்னை எதிர் பார்த்திருப்பினம்.''

அம்மாவின் நிர்வாகத் திறமையை பலரும் போற்றிப் புகழ்வதை என் காதார கேட்டிருக்கின்றேன். இன்று... அவளது கடமையுணர்வு என்னை மெய் கிலிர்க்க வைக்கிறது இலேசாகத் தலையை வலித்தாலே போதும், அன்று நான் பாடசாலைக்கு மட்டம் போட்டு விட்டு நிம்மதியாகப் படுத்துத் தூங்கி விடுவன்.

இப்போது... இந்த வேளையில் அம்மாவுக்கு எதுவிதத்திலாவது உதவவேண்டும் என என் மனம் விழைகிறது.

அடுப்பில் கொதித்துக் கொண்டிருந்த வெந்நீரில் கோப்பி தயாரித்து, இரண்டு 'பனடோல்' வில்லைகளுடன் அம்மாவுக்குக் கொடுத்தேன்.

ஆர்வத்துடன் அவள் அதை வாங்கிக் குடித்த போது, என் மனம் பரிவுணர்வால் நிறைந்திருந்தது.

''பத்மா! பத்மா!!''

அப்பாவின் குரல் கேட்டு கோப்பியை பாதியில் வைத்து விட்டு அம்மா அவரிடம் ஓடினாள்.

''ஏனப்பா கூப்பிட்டனீங்கள்?''

''இஞ்ச பாரும். 'சேட்'டைப் போடுவம் எண்டு எடுத்தால் 'பட்டன்' அறுந்து போய்க் கிடக்கு. நீர்தான் தோய்க்

கேக்கை விழுத்திப் போட்டீர். எனக்குத் தெரியாது நான் சாப் பிட்டு வாறதுக்குள்ள தைச்சும் போடும். ம்!''

அப்பா, கொக்கரித்து விட்டுப் போய் விட்டார். என அம்மாவின் மீது கோபமாய் வந்தது. ஏன் இன்னுமொரு 'சேட்'டை எடுத்துப் போடுமாறு சொல்லியிருக்கலாமே.

அம்மா 'பட்டன்' தேடியெடுத்து தைத்து வைத்தாள். அவளுக்கு நான் போட்டுக் கொடுத்த கோப்பியிலிருந்து ஆவி யனைத்தும் வெளியேறிவிட்டிருந்ததால் கோப்பி சில்லிட்டிருந் தது.

நான் குளித்துவிட்டு வரும் போது கவனித்தேன் அம்மா குளிர்ந்த காப்பியை வாயில் ஊற்றிக் கொண்டு கிணற்ற டியை நோக்கி விரைந்தாள். அப்பா வேலைக்குப் புறப்பட்டுப் போய் விட்டார் என்பது சொல்லாமலே புரிந்தது.

நான் பாடசாலைக்குப் புறப்பட்டு வெளியே வந்து மிதி வண்டியை எடுத்த போது .. என்ன ஆச்சரியம்.

அம்மா முன்னால் போய்க்கொண்டிருந்தாள். அவளது தோளில் கைப்பை- வாய்மட்டும் வார்த்தைகளை வீசிக் கொண் டிருந்தது.

சங்கர்! போகேக்கை வீட்டைக் கவனமாகப் பூட்டிக் கொண்டு போ என்ன!''

நல்ல வேளை. இன்று நான் முந்திய படியால் அண்ணா விடம் வீட்டைப் பூட்டும் வேலை பொறுத்துப் போயிற்று.

அண்ணா, இவ்வருடம் க. பொ. த உயர்தரப் பரீட்சை எழுதப் போகிறான்.

எனக்கு அடுத்த வருடம் தான் பரீட்சை.

நேரத்தைக் கவனித்தேன் 8. 05

இருந்தாலும் அம்மா கெட்டிக்காரிதான். இதற்கிடையில் சமைத்து அப்பாவிற்கு மதிய உணவும்கட்டிக் கொடுத்து, வேலைக்கு அனுப்பி தானும் நேரம் பிந்தாமல் கடமைக்குப் புறப்பட்டுப் போய் விட்டாள்.

அ... அப்பாவைப் பற்றிச் சொல்ல மறந்து விட்டேன். அவர், அரச வங்கியொன்றில் கிளை முகாமையாளராகக் கட மையாற்றுகின்றார். காலையில் புறப்பட்டுப் போனால் வீடு வந்து சேர மாலையாகிவிடும்.

நானும், அம்மாவும், அண்ணாவும் பாடசாலை முடிந்து வந்ததும் எல்லோரும் ஒன்றாகவே சாப்பிடுவோம்.

அன்று அம்மா வீட்டிற்கு வந்து சேர, சற்றுத் தாமத மாயிற்று. நானும் அண்ணாவும் அம்மாவுக்காகக் காத்திருந் தோம். அண்ணா, அடிக்கொருதரம் வாசலைப் போய் எட்டிப் பார்த்துவிட்டு வந்தான்.

''சிந்து ஏன் இன்னும் அம்மாவைக் காணேல்ல?''

எனக்கு அண்ணாவைப் பார்க்க பாவமாய் இருந்தது.

''அண்ணா! உனக்குப் பசிக்கிதே, நான் சாப்பாட்டைப் போட்டு தரட்டே?''

''சீ! மண்டு, பொறு அம்மா வரட்டுக்கும்.''

வாசலில் நுழையும் போதே அம்மா குரல் கொடுத்தாள்.

''சங்கர்! சிந்து! ஒரு சந்தோசமான செய்தி''

''என்னம்மா!''

அண்ணாவும் நானும் ஏக காலத்தில் குரல் கொடுத் தோம்.

''எஸ். எல். ஈ. ஏ. எஸ் பரீட்சையில நான் சித்தியடைஞ் சிட்டன்.'' அம்மாவின் முகத்தில் என்றுமில்லாத மகிழ்ச்சி.

அண்ணா பாய்ந்து சென்று அம்மாவின் கைகளைப் பிடித்துக்குலுக்கினான்.

நான் அம்மாவைக் கட்டிப்பிடித்து இருகன்னங்களிலும் முத்தமிட்டேன்.

மொத்தத்தில் மகிழ்ச்சிப் பிரவாகத்தில் மூவரும் திளைத்துப் போனோம்.

அம்மாவுக்குக் கிடைத்த இந்த வெற்றி மகத்தானது. கல்வி நிர்வாகச் சேவை நடாத்திய இப்பரீட்சையில் இந்த வன்னி மாவட்டத்திலேயே அம்மா மட்டும்தான் தேறியிருந்தாள்.

அறிந்தவர்கள், தெரிந்தவர்கள், உறவினர்கள் என பலரும் வந்து அம்மாவைப் பாராட்டிப் போனார்கள். ஆனால் அம்மாவின் இதயம் மட்டும் நிறைவடையவில்லை என்பதை என்னால் உணர முடிந்தது.

உந்துருளியின் இரைச்சல் கேட்கும் போதெல்லாம் அம்மா வாசலுக்கு விரைவதும் ஏமாறுவதுமாய் இருந்தாள்.

''அம்மா! நீங்கள் அவசரப்படாதையுங்கோ அப்பா வந்தவுடனே நான்தான் முதல் போய் இந்தச் சந்தோசமான செய்தியை அவருக்குச் சொல்லுவன்.''

சங்கர் பதுங்கிப் பதுங்கி அம்மாவிடம் வந்தான்.

''அம்மா! நான் இண்டைக்கு ரீயூசனுக்குப் போகவில்லை''

''ஏன்''

''அப்பா வந்தவுடனே அவரோட சேர்ந்து இந்தச் சந்தோசத்தைப் பகிர்ந்து கொள்ள வேணும் போல இருக்கம்மா.''

''சும்மா விசர்க்கதையை விட்டிட்டு உடனே நீ ரியூசனுக்கு வெளிக்கிடுறாய் சொல்லிப் போட்டன்.''

அம்மாவின் கண்டிப்பான உத்தரவை அண்ணாவால் மீற முடியவில்லை. முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு போய்விட்டான்.

அப்பா வீட்டிற்கு வந்து சேர ஆறு மணியாகி விட்டது. நான்தான் அவரிடம் ஓடிப்போய் விசயத்தைச் சொன்னேன்.

''ம்...'' அப்பாவின் முகத்தில எந்தவித மாற்றமும் தென்படவில்லை. எனக்கு என்னவோ போலிருந்தது.

என் மனதை இனம் புரியாத வேதனை குடைந்து கொண்டிருந்தது. அம்மாவைத் தேடிப் போனேன்.

குசினியில் அவர் அப்பாவிற்காக தேநீர் கலந்து கொண்டிருந்தாள். மேசையில் ஒரு தட்டில் மைசூர்பாகு கிடந்தது. தேநீரை ஒரு கையிலும் தட்டை மறு கையிலுமாக அம்மா எடுத்துக் கொண்டு அப்பாவிடம் போனாள். நான் அவளை மௌனமாக பின் தொடர்ந்தேன்.

அப்பா எதுவும் பேசாமல் தட்டிலிருந்த மைசூர்பாகை ஒவ்வொன்றாக எடுத்து வாயில் போட்டு காலி பண்ணிக்கொண்டிருந்தார். பின்னர் தேநீரை எடுத்துப் பருகிவிட்டு கோப்பையை மேசை மீது வைத்தார்.

அம்மா காலியான தட்டையும், கோப்பையையும் எடுத்துக் கொண்டு குசினிக்குத் திரும்பினாள். நான் அவளைக் கூர்ந்து அவதானித்தேன்.

அவளது கண்களிலிருந்து நீர்முத்துக்கள் கன்னம் வழியே ஓடி நிலத்தில் விழுந்து கொண்டிருந்தன.

என் இதயத்துள் இடி விழுந்தாற் போல் ஓர் வலி.

கவிஞரின் பாடல் வரிகள் சில என் இதயத்துள் ஒலித்துக் கொண்டிருந்தது.

'இன்பத்தில் துன்பம் - துன்பத்தில் இன்பம் - இது இறைவன் வகுத்த நியதி'

அன்றைய இரவு மௌனமாய் கலைந்த போதும் ஒவ்வொரு இதயங்களும் தனிமையெனும் திரையினுள் மூழ்கிக் கிடந்து குமுறுவதாய் என்னுள் ஓர் பிரமை.

ஏன்...? ஏன்...? ஏன்...?

உள்ளத்திலிருந்து புறப்பட்ட புதிர் உதடுகளுக்குள் அமிழ்ந்து போனது. அன்று வெள்ளிக் கிழமை. அம்மா நேரத்தோடு எழுந்து சமயலை முடித்திருந்தாள். அவளுக்குச் சமயல் வேலையில் எந்தவித ஒத்தாசையும் என்னால் செய்ய முடியவில்லை. மலேரியாவின் ஆதிக்கத்தினால் என் உடல் நிலை மிகவும் பாதிப்படைந்து இருந்ததுவே காரணம்.

முகத்தைக் குளிர் நீரினால் கழுவினாலாவது சிறிது தென்பு பிறக்கும் என்ற நப்பாசையோடு எழுந்து வெளியே வந்தேன். அப்பா காலை உணவு சாப்பிட்டுக் கொண்டிருந்தார். அம்மா அவருக்குத் தேநீர் தயாரித்து எடுத்து வந்து கொடுத்தாள்.

"இண்டைக்கு... கொஞ்சம் நேரத்தோட வாருங்கோப்பா. நான் கோயிலுக்குப்பூசைக்குக் குடுத்தனான். ஒருக்கா எல்லோரும் கோயிலுக்குப் போட்டு வருவம்."

அம்மா தலையிலிருந்து நீர் சொட்டச் சொட்ட நின்று கொண்டிருந்தாள். அவளுக்கு அன்று விரதநாள். அப்பாஅவளை நிமிர்ந்து பார்த்தார்.

" அங்கை... நீர் பள்ளிக்கூடத்தில காட்டுற ஆதிக்கத்தை இஞ்சையும் காட்டலாமென்று நினைக்கிறீரோ. அது சரிவராது. ஆரைக் கேட்டுப் பூசைக்குக் குடுத்தனீர்? எல்லாம் உம்முடைய இஸ்ரத்துக்கு நடத்தலாம் எண்டு ஒரு நினைப்பு... இருந்தா... அதை இப்பவே மறந்திடும். உமக்கு ஒரு விசயம் தெரியுமோ? பெட்டைக்கோழி கூவி பொழுது விடியிறதில்லை.'

அப்பாவின் கொக்கரிப்பை என்னால்த் தாங்க முடியவில்லை.

''அப்பா! உங்களுக்கு இது தெரியுமோ? சேவல் கூவுறதும், பெட்டைக் கோழி முட்டை இடுறதும் இயற்கையின்ர நியதி. அது... அவரவர் கெட்டித்தனமில்லை.''

''ஏய் சிந்து! என்ன கதைக்கிறாய்?''

அம்மா என்னை அதட்டினாள். அப்பா எதுவும் பேசாமல் வேலைக்குப் புறப்பட்டுப் போய்விட்டார்.

அம்மா மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் அவஸ்த்தைப்படுவதாக எனக்குத் தோன்றிற்று. பேசாமல் போய்ப் படுக்கையில் விழுந்தேன். எனது கண்கள் தானாக மூடிக் கொண்டன.

நான் கண் விழித்துப் பார்த்த போது நேரம் பதினொன்றைத் தாண்டியிருந்தது. எழுந்து போய் மேசையைப் பார்த்தேன். அம்மா எனக்காக தோடம்பழம் கரைத்து வைத்திருந்தாள். எடுத்துச் சிறிது சிறிதாக பருகினேன். என் உடலில் தெம்பும் சிறிது சிறிதாக ஏறியது.

குசினிக்குள் எட்டிப் பார்த்தேன். அங்கே... அம்மா தனக்கெனத் தயாரித்துவைத்த கோப்பி ஆடை பிடித்து ஆறிப் போய்க் கிடந்தது. எனக்கு விசயம் புரிந்துவிட்டது.

அம்மா, தனக்கேற்பட்ட மனக்கசப்பினால் கோப்பியை வேண்டுமென்றே நிராகரித்துவிட்டுப் போயிருக்கிறாள். பாவம்...இன்று விரத நாளும் அதுவுமாக கோப்பி கூடப் பருகாமல் களைத்துப் போயிருப்பாள்.

'பளிச்'சென என் மனதில் ஓர் எண்ணம் தோன்றியது. பத்தே நிமிடத்தில் நான் பாடசாலையில் போய் நின்றேன். உத்தரவு பெற்று அதிபரின் அறையினுள் நுழைந்தேன்.

என்னைக் கண்டதும் அம்மா துணுக்குற்றுப் போனாள்.

''என்ன! என்ன சிந்து!!''

''அதுவந்து ஒண்டுமில்லையம்மா நீங்கள் கோப்பி கூட குடிக்காமல் வெறுவயிறோடு வந்துவிட்டீங்கள் அதுதான்... இந்தாங்கோ பிளாஸ்கில இருக்கு எடுத்துக்குடியுங்கோ''

அம்மாவின் முகத்தில் ஏற்பட்ட மாற்றம் என்னைத் திடுக்கிட வைத்தது.

''இஞ்சபார் சிந்து! கடமை நேரத்தில ஆரும் வந்து எனக்கு தொந்தரவு கொடுப்பதை என்னால் ஏற்கவே முடியாது. இதுதான் முதலும், கடைசியுமாய் இருக்கட்டும். இனிமேல் இப்படி நடந்து கொள்ளாதை.''

அம்மாவின் கண்டிப்பு நிறைந்த வார்த்தைகள் என்னை நிலைகுலைய வைத்தது.

'சட்' டெனத் திரும்பி விட்டேன்.

அம்மாவின் வாழ்க்கையெனும் ஏட்டில் இருக்கும் பக்கங்கள் இரண்டையும் மாறிமாறிப் புரட்டி எடை போட எத்தனிக்கிறது என் மனம்.

# தவிப்பு

● சிரஞ்சீவி

எதையுமே புத்திபூர்வமாக அணுகும் மனம் வாசலுக்கு முதுகு காட்டி, சுவருக்கு முகம்காட்டி படுக்கும்படி தூண்டியது.

வழக்கமாகப் படுக்கும் இடம்தான் என்றாலும் அன்று ஏதோ ஒன்றை எதிர் கொள்வதற்கான தயார் நிலையை அது உணர்த்தியது. பிரயாணக் களைப்பு உடலை ஓய்வெடுக்கும்படி வற்புறுத்த அதை அசட்டை செய்த மனமோ தான் மட்டும் களைக்கக் களைக்க தாறு மாறாக ஓடிக் கொண்டிருந்தது.

''எனக்கு இப்ப என்ன வந்திட்டுது...? ஏன் நான் இப்படிப் பதட்டப்பட வேண்டும்...? இப்படி நிலை கொள்ளாமல்

தவிக்க நான் அப்படி என்னதான் செய்து போட்டேன்...?'' அறிவு ஒரு புறம் கேள்விகளால் துளைக்க மறுபுறம் உணர்வோ

''அவர் என்ன நினைத்தாரோ... ஊர்ஊராய் அலையிற வளுக்கு வாழ்க்கை என்னத்துக்கு என்று ஏசுவாரோ...'' என்று அலைக்கழிந்தது.

''நீ செய்யும் வேலை, உனது விருப்பு வெறுப்புக்கள் எல் லாம் வடிவாவத் தெரிஞ்சு கொண்டு தானே உன்னை கட்டச் சம்மதிச்சவர். பிறகென்ன கலக்கம் உனக்கு'' கலங்கும் மன தைத் தேற்ற அறிவு என்னதான் உதவிக்கு ஓடி வந்தாலும் மனக்குதிரையின் ஓட்டத்தை அறிவால் தடுத்து நிறுத்தத்தான் முடியுமா... என்ன...?

நிறையப் படித்தவள் என்று நினைப்பூட்டும் பொருட்டு இப்படித்தான் இடைக்கிடை உபதேசம் செய்ய வெளிக்கிடும். ஆனாலும் அலையும் மனத்தை ஆக்கிரமித்து, அமைதிப்படுத் தும் முயற்சியில் அதற்கு எப்பவும் தோல்விதான்.

''உணர்வு பூர்வமாக அணுக வேண்டியதுகளை அறிவு ஆக்கிரமிக்க முடியுமானால் பிறகு அன்பு, பாசம், குடும்பம் என்ற சொற்களுக்கு அர்த்தம் கண்டு பிடிக்க எந்த அகராதியை தேடுவதாம்.'' சுய ஆராய்ச்சிக்குத் தாவிவிட்ட மனதை அம் மாவின் புறுபுறுப்பு தடுத்து விட்டது.

''வந்தவுடனே படுத்து விட்டாளாக்கும். லீவு விடுற நாளில எண்டாலும்புருசன், பிள்ளை எண்டு ஆற அமர இருந்து பொழுதைப் போக்காட்டாமல் அப்படி என்னதான் கண்டறி யாத உத்தியோகம் வேண்டிக் கிடக்கு. ஆரன் வந்து கூப்பிட் டது கூப்பிட முந்தி போட்டது போட்டபடி ஓடி விடுறது. இஞ்சை அயலட்டைப் பெண்டுகளின்ர விடுப்பு விண்ணானங் களுக்கு மறுமொழி சொல்லி எனக்கு ஆத்தல் கெட்டுப் போச்சு. அதென்ன புருசன் பிள்ளையைக் கவனிக்காமல் அப்படி ஒரு வேலை. உந்தப் பொன்னம் பலத்தாற்றை மூத்தவளும் உன்ர படிப்புத்தானே படிச்சவள். வேலைக்கும் போய் குடும்பத்தையும்

என்ன வடிவாக கொண்டிழுக்கிறாள். உன்னைப் போல வேலைக்கு மேலால இன்னொரு சம்பளமில்லாத உத்தியோகம் எண்டு மாயுற பொம்பிளையளை நான் எண்டா ஒரு இடமும் காணேல்ல.''

அம்மாவின் புறுபுறுப்பு இரண்டு நாளைக்கு எண்டாலும் ஓயாது, அவ அந்தக் காலத்துப் பொம்பிளை. அப்பா கொண்டுவந்து போடுறதை சமைச்சு வைக்கிறதைத் தவிர வேறு பிராக்கு இல்லை. காலம் ஒன்றில் தான்போன வேகத்துக்கு அவவை இழுத்துக்கொண்டு ஓடியிருந்தால் அல்லது அவவே கால ஓட்டத்துடன் தானும் இணைந்து ஓட வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து ஓடியிருந்தால் இப்ப இப்படிப் புறு புறுக்க மாட்டா.

அம்மா அவளை விளங்கிக் கொள்ள முடியாது. அவர் விளங்கிக் கொள்ள வேண்டும் என்று அவள் கவலைப்படவும் இல்லை. அவளது கவலையெல்லாம் அவளின் அன்புக்குரியவன் அவளை எவ்வளவு விளங்கிக் கொண்டிருக்கிறான் என்பதுதான்.

இயக்கப் பிள்ளையளுக்கு ஒரு சில வகுப்புக்கள் எடுக்க வேண்டும் என்றும் இரண்டு நாட்களில் வந்து விடுவதாகவும் சொல்லிவிட்டு புதுக்குடியிருப்புக்குப் போனவள் பத்து நாள் கழித்து வந்துசேர்ந்திருக்கிறாள். போன இடத்தில் அந்த வேலை இந்த வகுப்பு எண்டு நாள் போனது தெரியவில்லை. ஊரில் இருக்கும் போது செய்த வேலை தான். என்றாலும் அங்கு தூரம் ஒரு பிரச்சனையாய் இருக்கவில்லை. ஆனால் இங்கு... இந்தத் தெல்லியில இருக்கிற கல்விளானில் இருந்து அந்தத் தெல்லியில இருக்கிற புதுக்குடியிருப்புக்கு குறைந்தது 55 கட்டையாவது தூரம் இருக்கும்.

''நான் என்ன தான் செய்ய...? போன இடத்தில வேலை அமளியில வீட்டு நினைப்பே பெரிதா தலை காட்டேல்ல. ஒரே வளவுக்கை தானே அம்மாவை இருக்கினம். கதிர்க்குட்டியை வடிவாப் பார்ப்பினம் என்ற மன ஆறுதல். வேலை நேரத்திலை வேலையைப் பற்றிச் சிந்தி. வீட்டில் இருக்கேக்கை குடும்பத்தை பற்றி சிந்தி. இரண்டையும் இரண்டுஇடத்

தில் சிந்தித்தால் இரண்டும் பாழ்பட்டுப் போகும் என்று கூட்டங்களிலை முழங்கிப் போட்டு நான் மட்டும் வீட்டிலை முடங்குவது சரியோ?'' மனம் நோயும் சொல்லி நோய்க்கு மருந்தும் சொன்னது.

வேலை என்று வந்தால் இப்படி எல்லாம் வரும் என்பதை புரிந்து கொள்ள முடியாதளவுக்கு மொக்கன் இல்லை அவள் புருசன். அவர் எவ்வளவுக்கு என்னை நேசிக்கின்றார் என்பது எனக்கு மட்டும் தான் தெரியும். ஆனாலும் இப்படிப் போய் நாட் கணக்கில் நிற்க எனக்கென்ன மதி...?'' மனம் மீண்டும் நியாயங் கேட்கத் தொடங்கியது.

வழக்கத்தில் பின்னேரம் கடையிலிருந்து வந்து கால் முகங் கழுவி தேத்தண்ணி குடித்துவிட்டு போய் இரவு 9-00 மணிக்குத் திருப்புவார். இண்டைக்கு வரவில்லை. அவள் இல்லையென்றால் அவரும் வாறதில்லைப் போலும். கடைகளிலும் கண்டபடி சாப்பிடுற பழக்கம் இல்லை.

''வெக்கறை பிடிச்ச பெடியன். ஒரு தரம் போட்டவுடனேயே சொல்லாமல் கொள்ளாமல் எழும்பிப் போவிடும். ஆசைப்பட்டு சாப்பிடுற கறியை வைச்சுக் கொடுத்தாலும் சரியாச் சாப்பிடுகில்லை. எண்டாலும் நீ நிண்டு போட்டுக் குடுக்கிற மாதிரிவருமே'' அம்மா அடிக்கச் சொல்லுவது மனதைத் தைத்தது.

உண்மைதான். அவளைத் தவிர யாரிடமும் எதுவும் கேட்கமாட்டார். தனது தேவைகள், விருப்பங்கள் ஏன் கோபத்தைக்கூட அவளை அருகில் அழைத்து மெதுவாகதான் வெளிப்படுத்துவார். அவர் அன்பாகக் கதைக்கிறாரா கடிந்து பேசுகிறாரா என்று அவளுக்கு மட்டுமே தெரியும்.

''இப்படிப் பட்டவரை தவிக்க விட்டுவிட்டு நான் மட்டும் ஒரு யோசினையும் இல்லாமல் நிண்டு போட்டு வந்திருக்கிறன். என்னதான் பொது வேலை எண்டாலும் புருசன் பிள்ளையளிலை கவனம் இல்லாட்டில் பிறகென்னடி மற்றவையில கவனம் வரும் எண்டு அவர் நினைத்திருந்தால்...'' மனம் தவியாய்த் தவித்தது.

''கடவுளே அவர் கோபிக்கக் கூடாது. அவர் முகங் கோணினால் என்னால் அதைத் தாங்க முடியாது. எனக்கு அவரது அன்பு முழுக்க வேணும். அதில் நான் அமிழ்ந்து, கரைந்து அதிலிருந்து இன்னும் உறுதியும் உணர்வும் பெற்று இந்தச் சமூகத்திற்கு உழைக்க வேண்டும். அவரின் அன்பு மனைவியாய், கதிர்க்குட்டியின் நல்ல அம்மாவாய் இருந்து கொண்டு தான் மற்றவர்களுக்காகவும் உழைக்க வேணும்'' தலையணை ஈரமாகத் தொடங்கியது.

அம்மாவின் புறுபுறுப்புக்கு அசட்டை செய்யும் மனம் அவனின் சிறு பாராமுகத்தையும் தாங்காது. அளவுக்கதிகமாக ஆசைப்படுகின்றேனோ? நடைமுறைக்குச் சாத்தியமற்றதை சுமக்க முயல்கின்றேனோ? கடவுளே! குடும்ப வாழ்க்கைக்காக சமூகத்தை தியாகம் செய்து தானாக வேண்டும் என்ற நிலை மட்டும் எனக்கு வரக்கூடாது. அப்படி வரவும் நான் விடமாட்டேன்.

''ஏன் இப்ப நான் தாறுமாறாகச் சிந்திக்க வேணும். நான் இப்ப எதையுமே கேட்கவில்லையே? நான் வந்தது கூடத் தெரியாமல் கடையில் இருப்பார். அவர் எந்தவொரு உணர்வையும் வெளிப்படுத்த முதல் அவருக்கு நியாயங் கற்பிக்கும் எண்ணத்தை எனக்கு தூண்டுவது எது? கனக்கப் படிச்ச குணமோ'' மனதின் மூலையில் இருந்து வெளிக் கிளம்பிய நெருடலை தவிர்க்க முடியவில்லை.

வழக்கத்தில் பி. பி. சி கேட்பதற்கிடையில் வந்து விடுவான். சாப்பிட்டு படுக்கையைவிரித்து தயார் நிலையில் வைத்தபடி செய்தி கேட்பார்கள். இன்று செய்தி முடிந்தும் இன்னமும் காணேல்ல.

''என்நிலை எவ்வளவு வெறுப்பு இருக்குமோ... இப்படி நேரம் பிந்திப்பிந்தி வந்து கடைசியில் வீடுவாசல் இல்லாமல் திரியுமளவுக்கு அவருக்கு விரக்தியூட்டி விட்டேனோ'' மனம் நிலை கொள்ளாமல் தவித்தது.

''நான் ஏன் பயப்பிட வேணும். எனக்கென்ன குறை... நான் வேணுமெண்டே நிண்டனான். எனக்குப் பொருத்த

மானவர் என்று தெரிஞ்சு தானே அப்பா பார்த்த உத்தியோக மாப்பிள்ளையையும் தூக்கியெறிஞ்சு போட்டு சந்தியில் கடை வைத்திருக்கும் அவரைச் செய்யப் போறனெண்டு ஒற்றைக் காலில் நிண்டதை அவர் மறந்து போகேலுமோ'' மனதின் மூலைக்குள் இருந்து மெல்ல எட்டிப் பார்த்த அகந்தை மனத்தை ஒரு போடு போட்டு அடக்கி விட்டார்.

கலியாணம் முடிஞ்ச புதிசில அவளுக்குப் பின்னால் வளைந்த நாக்குகளை ஒரு தரம் நினைத்துப் பார்த்தாள்.

''இந்த விசர்ப் பெட்டை இவ்வளவு படிச்சுப் போட்டுபோயும் போயும் ஒரு கடைக்காரனை ஒற்றைக் காலில் நின்று கட்டியிருக்கு. கனக்கப் படிச்சு புத்தி பேதலிச்சுப் போட்டுதோ? அல்லது தன்ர ஆட்டத்துக்கு தாளம் போடுற ஒரு பொன்னையர் இதுதான் எண்டு நினைச்சுதோ? மாப்பிள்ளை இல்லாமல் அல்லது சாதகம் பொருந்தாமல் தகுதிக்குக் கீழே போறது வேற கதை. எத்தனை சம்பந்தங்களை தேப்பன் கொண்டு வந்திருக்கும். எல்லாத்தையும் விட்டு விட்டு அவன் வேணுமெண்டு கட்டினதால அதுவும் அவளின்ர ஆட்டத்துக்கெல்லாம் ஈடு கொடுக்குது. நாரியில நாலு போட்டு அடக்கி வைக்கிறதை விட்டுப் போட்டு வா எண்ட இடமெல்லாம் ஏத்திக் கொண்டு திரியுது.''

அவளின்ர காதுக்கு எட்டிய மாதிரி அவன்ர காதுக்கும் இது போகாமல் இருந்திருக்காது. உந்தக் கதையளுக்குக் காது கொடுக்கும் பிறப்பு இல்லை அவன். இடம் பெயர்ந்த சனங்களுக்கு சாப்பாடு உடுப்பு எண்டு இராப்பகல் நித்திரையில்லாமல் அவன் அலைந்ததை அவள் நேரில் பார்த்தவள். ஊர்ப் பொது வேலைகளுக்கு வீடு வாசல் இல்லாமல் முன்னுக்கு நிற்பவன். ஒரு குடிவெறி, கூடாத சேர்க்கை என்று இல்லாதவன்.

இதுதானே அவள் விரும்பியிருந்தது. கலியாணம் முடிச்ச அந்த நாலு வருடங்களில் அவள் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியிலும் அவனது அருகாமையும், ஆதரவும் அவளுக்கு இருக்கெண்டு இந்த அலம்பல் சனத்துக்கு எப்படித் தெரியப் போகுது.

''இப்படியெல்லாம் விட்டுக் கொடுக்கிறார் என்பதற்காக நான் இவ்வளவு நாள் நிண்டிருக்கப்படாது. நான் தான் என்ன செய்ய?'' அவளே இதை எதிர் பார்க்கவில்லை. அவர் எப்படி இதை எதிர்பார்த்திருப்பார். ஆகக்கூடி மூன்று நாட்களுக்கிடையில் அவள் வந்து விடுவாள்...

படலை திறக்கும் சத்தம் சிந்தனைத் தொடரை சட்டென்று அறுத்து விட்டது.

''ஆள் வருது. சுவருக்கு முதுகு காட்டிப் படுத்தது நல்லதாகிப் போட்டுது.''

எழும்பி அவனைக் கதை கேட்டு, அவனுக்கு சாப்பாடு கொடுக்க மனம் பரபரத்தது.

''வேண்டாம்... இப்ப போய் வாங்கிக் கட்ட வேண்டாம்.'' பரபரக்கும் மனத்தை அடக்கப்படாத பாடு படவேண்டியிருந்தது.

வந்தவன் அவள் அருகாமையில் சற்றுத் தாமதிப்பதை உணரக் கூடியதாய் இருந்தது. காலடிச் சத்தம் மெல்ல நகர்ந்து பின் தேய்ந்து மறைந்தது. கால் முகங் கழுவுவது கேட்டது. வந்தவன் குசினிக்குள் நுழைந்து தனக்குத் தானே போட்டுக் கொண்டு சாப்பிட்டான். சிறிது நேரம் வெளியே உலாவுவது தெரிந்தது.

பின்பு பாய் தலையணையை எடுத்துக் கொண்டு வந்து அவளருகில் விரித்தான் அவன். வழக்கத்தில் புழுதி மண் பறக்க நின்ற நிலையிலேயே பாயை எறிந்து விரித்து அவளின் எரிச்சலை வாங்கிக் கட்டுறவன் இன்று மிக மெதுவாக பாயை விரித்தான்.

ஆனாலும் நித்திரை குழம்பிய பாவனையில் சற்றுத் திரும்பிப் படுத்தாள் இவள். கொஞ்ச நேரம் முனகுவது போல், பின் மீண்டும் ஆழ்ந்த நித்திரைக்குப் போவது போல் ஆழ்ந்த மூச்சு விட்டுக் கொட்டிருந்தாள்.

பக்கத்தில் அப்படியே நீட்டி நிமிர்ந்து படுத்தவன் மெல்லச் சரிந்து அவளது நெற்றியை மெல்லத் தொட்டுப் பார்த்தான். நெற்றியில் புரண்ட தலைமுடிகளை மெல்ல பின் பக்கமாக ஒதுக்கி கோதி விட்டது அவன் கரங்கள்.

வெளியே நிலவு காலிக்கத் தொடங்கியிருப்பது கதவு நீக்கலூடாகத் தெரிந்தது.

கனவுகள் அழகானது.
கனவு சுகமானது.
எனினும் கனவு நிஜமானதல்ல.
கனவுக்கு வெளியேயானது உலகு.
கனவைக் கலைத்து
நிஜத்தின் கதவைத் திறந்தால்
வாசலில் பச்சை இரத்தத்திற் கோலம்.
அம்மா தாயே எனும் பிச்சைக் குரல்.
கந்தகப்புகையில் கருகிக் கிடக்கிறது ரோஜா வனம்.
வேலிகளுக்குள் சிறையுண்டு
வெளிச்சமற்றுக் கிடக்கிறன மாடவிளக்குகள்.
கனவு வேண்டும்
கால்களை எட்டிப் போடுதற்கு.
கனவு மெய்யப்பட வேண்டும்
மாறாக கனவுகள் போதை தருகின்றன.
மயக்கம் தீர்ந்தெழ விடுவதாயில்லை.
கனவுக்கு வெளியேயான உலகில்
கால் பதியும் போதுதான்
நிஜத்தின் காற்று வந்து முகத்தில் அறைகிறது.